NITHRA





# வாஸ்து

## சாஸ்திரம் அறிவோம்..!!

### PDF வடிவில்..!!


தொகுத்து வழங்கியவர்கள்

**ஆண்டாள் வாஸ்து குழுமம்**

தொடர்புக்கு

78450 78650, 73736 72736



www.nithrabooks.com | books@nithra.mobi | Cell: 98659 24040

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : **வாஸ்து சாஸ்திரம் அறிவோம்..!!**

பக்கங்கள் : 98

விலை : ரூ. 100

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

# வாஸ்து சாஸ்திரம் அறிவோம்

- ✓ நம் முன்னோர்கள் வசிக்கும் வீட்டை, இயற்கை விதிகளுக்கு உட்பட்டு கட்டி வாழ்ந்துள்ளார்கள். எல்லோரும் சுக வாழ்வு வாழ வேண்டுமென்று வாஸ்து விதிமுறைளை முறைபடுத்தி உள்ளார்கள். அந்த விதிமுறைகளை நமக்கு சாஸ்திரமாக கொடுத்துள்ளார்கள். அனைத்து வேதங்களும், சாஸ்திரங்களும் மனிதன் எப்படி வாழ வேண்டுமென்று வலியுறுத்திகிறதோ? அதேபோல், மனிதன் கட்டிடங்களை கட்டி வாழ வாஸ்து சாஸ்திரம் வலியுறுத்துகிறது.

- ✓ நாம் வசிக்கும் வீட்டின் அமைப்புகளை வைத்தே அந்த வீட்டில் குடியிருப்பவர்களுக்கு இந்த மாதிரியான நன்மைகளும், இந்த மாதிரியான தீமைகளும் நடக்கும் என்று நமது முன்னோர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

- ✓ வாஸ்து சாஸ்திரம் பல காலம் தொட்டே நடைமுறையில் இருந்து வந்துள்ளது. அதில் குறிப்பாக அரண்மனைகளும், மிராசுதாரர் வீடுகளும், நாட்டாமை வீடுகளும், கோவில்களும் வாஸ்து சாஸ்திர விதிகளுக்கு உட்பட்டே கட்டப்பட்டுள்ளது.

- ✓ ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கு வீடு என்பது இன்றியமையாதது ஆகும். சொந்த வீடு என்பது வாழ்நாள் கனவாகும். அதனால் வாயை கட்டி, வயிற்றை கட்டி, வங்கியில் கடன் வாங்கி, நகைகளை அடமானம் வைத்து வீடு கட்டுகிறார்கள். சிலர் கட்டுகின்ற வீடு முழுமை பெறாமல் பாதியில் நிற்கும்போது மனம் உடைந்து போகின்றனர்.

- ✓ அதற்கான காரணமும் தெரியாமல், தெரிந்தாலும் அதை சரி செய்ய முடியாமல் மனதளவிலும், உடலளவிலும் சோர்ந்து போகின்றனர். பாதியில் நிற்கும் வீட்டிலும் நேர்மறை ஆற்றல் இல்லாது போய்விடும்.

### இதற்கான காரணங்கள் :

- ✓ வீட்டை கட்டும் நபர்கள் நல்லவர்களாக இருந்தும், அவர்கள் கட்டும் 'இடம்' தவறாக இருக்கும் பட்சத்தில் வீடு முழுமை பெறாது.

- ✓ கட்டும் வீட்டின் வரைபடம் தவறாகவோ, வாஸ்து பலம் இல்லாததாகவோ இருந்தாலும் வீடு, பாதியில் நிற்க வாய்ப்புள்ளது.

### செய்ய வேண்டியது :

- ✓ தரமான மணல், சிமெண்ட், செங்கல், சிறந்த பொறியாளர் மற்றும் வேலையாட்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை 'சுவாசம்' போன்ற 'வாஸ்து'விற்கு கொடுக்க வேண்டியது அதி அத்தியாவசியம்.

- ✓ ஒவ்வொரு வீடும் திறம்பட அமைவதற்கு வாஸ்து நிபுணர்கள் மிக மிக அவசியமாவார்கள்.

- ✓ பாதியில் நிற்கும் வீட்டின் சூட்சமங்களை உணர்ந்து, மீண்டும் அவ்வீடு என்ற 'குழந்தை'க்கு உயிரூட்ட வாஸ்து நிபுணர் என்ற மருத்துவரால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்தால் பிரச்சனைக்கான தீர்வை எட்ட முடியும்.

- ✓ வருமுன் காப்போம் என்ற வாசகத்திற்கு ஏற்ப, மனை தேர்வு முதல் வாஸ்து பலத்துடன் கூடிய வீடு கட்டி முடிக்கும் வரை அனுபவமிக்க வாஸ்து ஆலோசகரின் உதவியுடன் நல்லதொரு வீடு கட்டி வாழ மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

## வாஸ்துவும், பஞ்ச பூதங்களும்

நாம் கட்டக்கூடிய கட்டிடம் பஞ்ச பூதங்களுக்கு உட்பட்டு கட்டுவதால் இயற்கையிலேயே பல நன்மைகள் நம்மை வந்து சேர்கிறது.

### நிலம் :

- ✓ நிலம் இருந்தால் தான் வீடு மற்றும் கட்டிடங்கள் கட்ட முடியும். இந்த நில அமைப்பு நாம் கட்டக்கூடிய பில்டிங்கின் தென்மேற்கு பகுதியை குறிக்கும். இங்கு உயரமான கட்டிட அமைப்புகளும், உயரமான மலை அமைப்புகளும், உயரமான மரம் போன்ற அமைப்புகளும் அமைய வேண்டும்.

### நீர் :

- ✓ அனைத்து உயிரினங்களுக்கு எல்லாம் ஆதாரமாக விளங்குவது நீர். இந்த நீர் பகுதியை நாம் கட்டக்கூடிய பில்டிங்கின் வடகிழக்கு பகுதியில் அமைப்பதால் பல நன்மைகள் வந்து சேரும். அதே போல் தாழ்வாக உள்ள பகுதியில் தான் நீர் தேங்கும். எனவே வடகிழக்கு எப்பொழுதும் தாழ்வாகவே அமைய வேண்டும்.

### நெருப்பு :

- ✓ நாம் உண்பதற்கு உணவு தேவை. உணவை சமைப்பதற்கு நெருப்பு தேவை. நாம் கட்டக்கூடிய கட்டிடத்தில் தென்கிழக்கு பகுதியில் சமைப்பதற்குரிய சமையலறையை அமைப்பதால் இயற்கையிலேயே உணவு சுவையானதாகவும், ஆரோக்கியமானதாகவும் அமைகிறது.

காற்று :

- ✓ ஆக்சிஜன் என்கிற பிராணவாயு மட்டும் இந்த பூமியில் இல்லையென்றால் மொத்த உயிரினங்களும் வாழ முடியாது. அப்படிபட்ட காற்று வடமேற்கு பகுதியான வாயு மூலைக்குரியது. அனைத்து நல்ல மற்றும் கெட்ட விஷயங்களை தீர்மானிப்பதே இந்த காற்று தான்.

ஆகாயம் :

- ✓ பிரபஞ்சத்தில் அளவிட முடியாத அளவிற்கு பரந்து விரிந்துள்ளது. இந்த ஆகாயம் நாம் கட்டக்கூடிய கட்டிட அமைப்புகள் ஒவ்வொரு மூலையும் ஒவ்வொரு பூதத்தை குறிப்பிட்டாலும், மொத்த கட்டிட அமைப்பை பொறுத்தே அனைத்து பலன்களும் அமைகிறது.

## பிரபஞ்ச ஆற்றலை வசீகரிக்கும் வடகிழக்கு மூலையின் ரகசியம்...!!

நான்கு திசைகளும், நான்கு மூலைகளும் வாஸ்துவில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. அவற்றுள் முதலாவது இடத்தை பெறுவது வடகிழக்கு மூலை.

வடகிழக்கு மூலை :

- ✓ வடக்கும், கிழக்கும் சந்திக்கும் பகுதியே வடகிழக்கு மூலை எனப்படுகின்றது. சாதாரணமாக இது ஈசானிய மூலை என அழைக்கப்படுகின்றது. இந்த மூலையின் வாயிலாகத்தான் பிரபஞ்ச ஆற்றல் நம் இல்லத்தினுள் நுழைகின்றது.

- ✓ எதிர்காலம் செல்வச்செழிப்புடன் இருக்க, வடகிழக்கு மூலையை மிகச்சிறப்பாக செதுக்கிக்கொள்வது நன்று. எனவே, வடகிழக்கு மூலையில் அதிக கவனம் செலுத்தி வீட்டை அமைத்துக்கொள்வது சிறப்பான பலன்களை தரும்.

இயற்கையின் அமைப்பு :

- ✓ நமது பூமி 23 1/2 டிகிரி வடகிழக்காக சாய்ந்து தன் அச்சில் தானும் சுழன்று கொண்டு, சூரியனையும் சுற்றிக்கொண்டு வருகின்றது. எனவே இயற்கையாகவே பூமியின் தென்மேற்கு பகுதி உயர்ந்தும், வடகிழக்கு பகுதி தாழ்ந்தும் காணப்படுகின்றது.

வாஸ்துவும், இயற்கையும் :

- ✓ வாஸ்து, இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. இயற்கையோடு இணைந்து வாழும்போது ஆரோக்கியம் மேம்படும். மேலும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும். அந்த

வகையில், வீட்டின் வடகிழக்கு மூலையையும், மதில் சுவரின் வடகிழக்கு மூலையையும் மிகக் கவனமாக அமைத்து கொள்வது மிக அத்தியாவசியமாகும்.

### மதில்சுவரின் வடகிழக்கு பகுதி :

- ✓ 'ஈசானிய பகுதி இழுத்து இருந்தால் குடும்பத்தின் தலைவருக்கு நல்லது' என்ற ஒரு தவறான கருத்து மக்களிடையே நிலவி வருகின்றது. ஒரு மூலை இழுக்கப்படும்போது, அதற்கு நேர் எதிரே உள்ள ஒரு மூலையோ அல்லது இரு மூலைகளுமோ குறையக்கூடிய வாய்ப்புள்ளது. இது குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பை விளைவிக்கும்.

### வீட்டின் வடகிழக்கு பகுதி :

- ✓ திறப்புகள் அதிகம் இருக்க வேண்டிய பகுதி.
- ✓ உச்ச வாசல் அமைக்க ஏற்ற பகுதி.
- ✓ கனமில்லாமல் இருக்க வேண்டிய பகுதி.
- ✓ மிகவும் சுத்தமாக இருக்க வேண்டிய பகுதி.
- ✓ இம்மூலையில் நாம் தெரியாமல் செய்யும் சிறு தவறுகளும் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். எனவே அதிசிறப்பு வாய்ந்த, பிரபஞ்ச ஆற்றலை வசீகரிக்கும் வல்லமை படைத்த வடகிழக்கு மூலையினை வாஸ்துப்படி அமைத்து கொள்வது சிறப்பு.

## தெம்பூட்டும் தென்கிழக்கு மூலையின் ரகசியங்கள்

நான்கு மூலைகளில், இரண்டாவதான தென்கிழக்கு மூலை மிகவும் முக்கியமானது. தெற்கும், கிழக்கும் சந்திக்கும் பகுதியே 'தென்கிழக்கு மூலை' எனப்படுகின்றது. இது 'அக்னி மூலை' என மக்களால் பரவலாக அழைக்கப்படுகின்றது. பெண்களின் ஆரோக்கியத்தில் அதிமுக்கியமாக பங்காற்றக்கூடிய மூலை இது.

### இயற்கையும், வாஸ்துவும் :

- ✓ சூரியனின் நேரடித்தாக்கம் அதிகம் இருக்கும் திசை கிழக்கு. வடகிழக்கு திசையில் சாய்ந்திருக்கும் பூமியின் தென்கிழக்கு பகுதியில் உள்ள காற்று, சூரியனின் புறஊதா கதிர்களால் வெப்பக்காற்றாய் மாறும். எனவே, இந்த தென்கிழக்கு மூலை நெருப்புடன் தொடர்புடையதாக இருக்கின்றது. எனவே தான் வாஸ்துப்படி, இம்மூலையில் சமையலறையும், பூஜையறையும் அமைத்துக்கொள்வது மிகவும் சிறப்பான பலன்களை கொடுக்கும்.

### தென்கிழக்கு சமையலறை :

- ✓ ஒவ்வொரு குடும்பத்தின் மகிழ்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் அடி நாதமாக இருப்பது அந்த வீட்டின் சமையலறை ஆகும். 'பெண்கள் வீட்டின் கண்கள்' என்பார்கள். அந்த கண்கள் என்றும் கலங்காமல், மலர்ச்சியுடன், மீன்கள் போல் என்றும் அயராத சுறுசுறுப்புடன் திகழ, இம்மூலையை சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும். கருவை சுமக்கும் பெண்களின், கர்ப்பப்பையின் ஆரோக்கியத்தோடு நெருங்கிய தொடர்புடைய இந்த தென்கிழக்கு மூலையினை கவனத்துடன், சரியாக அமைத்துக்கொள்வது புத்திசாலித்தனமான செயலாகும்.

### மதில்சுவரின் தென்கிழக்கு பகுதி :

- ✓ ஒரு வீட்டின், மதில்சுவரின் தென்கிழக்கு மூலை, 90 டிகிரி செங்குத்தாய் இருக்க வேண்டும். தென்கிழக்கு மதில்சுவர் வளைந்தோ, வெட்டுப்பட்டோ இருத்தல் கூடாது.

### வீட்டின் தென்கிழக்கு பகுதி :

- ✓ வீட்டின் தென்கிழக்கு பகுதியில் சமையலயறை அமைத்துக்கொள்வது சால சிறந்தது. சமையலயறை பெரிதாக இருப்பது நல்லது. சமையல் செய்யும் பெண்கள் குளித்துவிட்டு சமையல் செய்வது அதிஅற்புதமான பலன்களை கொடுக்கும். இனிமையான, மனதிற்கு பிடித்த பாடல்களை கேட்டுக்கொண்டே சமைக்கும் பொழுது, உணவின் சுவையும் அதிகரிக்கும். உண்பவர்களின் ஆரோக்கியமும் பலப்படும்.

## ராஜயோகத்தை நல்கும் தென்மேற்கு மூலையின் ரகசியங்கள்

உறவுகளில் புனிதமான 'கணவன்-மனைவி' உறவிற்கு அடித்தளமிடும் அற்புதமான மூலையே தெற்கும், மேற்கும் சந்திக்கும் 'தென்மேற்கு மூலை'. செல்வத்தின் அதிபதியான குபேரரின் பெயர் கொண்டு 'குபேர மூலை' எனவும் 'நைருதி மூலை' எனவும் இது அழைக்கப்படுகின்றது.

### இயற்கையும், வாஸ்துவும் :

- ✓ இயற்கையிலேயே நாம் வாழும் பூமி தென்மேற்கில் உயரமாக உள்ளது. வீட்டின் தென்மேற்கு பகுதியில் உயரமான கோபுரங்கள், மலைகள், மரங்கள் இருப்பது அதிஅற்புதமான பலன்களை வழங்கும்.

### இனிக்கும் இல்லறத்திற்கு :

- ✓ இல்லற வாழ்க்கையில் நல்லறத்தை கொண்டு வரும் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, காதலில் உருகி, உறவுகளை அனுசரித்து,

ஒருவருக்கொருவர் ஈர்ப்புடன் முழுமையான வாழ்க்கையை வாழ தென்மேற்கு மூலையில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இப்பகுதியில் ஏற்படும் குறைபாடுகள் குடும்பத்தில் மனநிம்மதியை கெடுத்து, வாழ்க்கையையே ஒரு கேள்விக்குறியாக ஆக்கிவிடும்.

செல்வம் கொழிக்கும் இடம் :

- ✓ வாழ்க்கைப்படகு சீராக செல்வதற்கு பணம் என்ற துடுப்பு அவசியம். புத்திசாலித்தனமான உழைப்பில், நல்ல வழியில் பணம் சம்பாதிக்கவும், அப்பணம் வீட்டின் வளத்தையும், மனமகிழ்ச்சியையும் அதிகப்படுத்தவும், பரம்பரை செல்வந்தராக நிலைக்கவும் இந்த தென்மேற்கு மூலை பலம் வாய்ந்ததாக இருப்பது அவசியம் ஆகும்.

தவறான அமைப்பினால் ஏற்படும் சில விளைவுகள் :

- ✓ கணவன், மனைவி பிரிவு
- ✓ பணத்தட்டுப்பாடு
- ✓ வரவுக்கு மீறிய செலவு
- ✓ மனநிம்மதியின்மை
- ✓ ஆரோக்கிய குறைபாடு
- ✓ அவமானம்
- ✓ 'வாழ்க்கை வாழ்வதற்கல்ல, கொண்டாடுவதற்கே!' எனவே ஒருமுறை வாழும் இவ்வாழ்க்கையை ஆனந்தமாக, மனநிம்மதியுடன், செல்வச்செழிப்புடன், மனநிறைவுடன் வாழ, தென்மேற்கை வசப்படுத்துங்கள்.

## அந்தஸ்தின் அதிபதியான வடமேற்கு மூலையின் சூட்சமங்கள்

பரம்பரை பரம்பரையாக, வீட்டின் கௌரவத்தை கட்டிக்காப்பதில் மிக முக்கிய பங்கு வடக்கும், மேற்கும் சந்திக்கும் வடமேற்கு மூலைக்கு உள்ளது. இம்மூலை 'வாயுமூலை' எனவும் மக்களால் அழைக்கப்படுகின்றது. உயிர் வாழ சுவாசக்காற்று எவ்வளவு முக்கியமோ, அதுபோல வாழ்க்கை வளம்பெற வடமேற்கு வசப்பட வேண்டியதும் அவசியமாகும்.

### இயற்கையும், வாஸ்துவும் :

- ✓ பூமியின் எதிர் மின்னாற்றலையும், வட துருவத்தின் காந்த பண்புகளையும் கொண்ட திசை வடமேற்கு திசை. இத்திசையில் சூரியனின் வெப்ப ஆற்றல் செயல்படாததால் காற்றின் பண்புகள் முழுமையாக செயல்படும் திசையாக இது உள்ளது. நம் வாழ்க்கையில் தென்றல் தவழ்வதற்கும், புயல் புரட்டிப்போடுவதற்கும் இம்மூலை முக்கிய காரணமாக விளங்குகின்றது.

### தொழிலதிபர்களின் நண்பன் :

- ✓ சிறப்பான தொழில் அமைவதற்கும், சம்பாதிக்கும் பணம் தங்குவதற்கும் ஏதுவான மூலை வடமேற்கு மூலை ஆகும். தொழிலாளர்-முதலாளி பிரச்சனைக்கும், தொழிலில் நஷ்டம், பணமுடக்கம், கடன் போன்ற விஷயங்களுக்கும் முழு முதற்காரணமாக விளங்குவது இம்மூலை.

### குடும்ப அந்தஸ்தில் வடமேற்கு மூலையின் பங்கு :

- ✓ பத்து மாதம் சுமந்து பெற்ற தன் மகனோ/மகளோ, தங்கள் திருமண வயதில் பெற்றோருக்கு எதிராக எடுக்கும் முடிவு, பெற்றவர்களை கதிகலங்க வைக்கும். 'உலகமே, தாங்கள் பெற்றெடுத்த குழந்தை தான்' என்ற எண்ணத்தில் இடி விழும் போது இடிந்து போகின்றனர் பெற்றோர்.

- ✓ இவ்வாறு பணவரவிற்கும், சம்பாதித்த பணம் தங்குவதற்கும், செல்வச்செழிப்பிற்கும் மட்டுமல்லாது, ஒருவரின் குணநலன்களையே மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த இந்த வடமேற்கு மூலையில் நாம் செய்யும் சிறு தவறும் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். எனவே கட்டும் வீட்டில் கவனத்தை செலுத்தி, இருக்கும் வீட்டின் இருப்பை உணர்ந்து, தெளிந்து, விழிப்புடன் இருக்க வடமேற்கு மூலையை கவனியுங்கள்.

## மதில் சுவரின் மாண்புகள்

ஒவ்வொரு வீட்டிற்கும், அலுவலகத்திற்கும், நிறுவனத்திற்கும் 'மதில்சுவர்' என்பது மிக மிக முக்கியமானதாகும்.

### தாய்-தந்தை :

- ✓ ஒரு வீட்டின் நான்கு பக்க சுவரும் 'தாய் சுவர்' எனப்படும். அதுபோல மதில்சுவர் என்பது 'தந்தை சுவர்' எனப்படும். ஒரு குடும்பத்தில் தாய் எவ்வளவு முக்கியமோ, அதேஅளவு தந்தையும் முக்கியம். தாய் மட்டும் வளர்க்கும் பிள்ளைக்கும், தாய்-தந்தை இருவரும் சேர்ந்து வளர்க்கும் பிள்ளைக்கும் நிச்சயமாக வேறுபாடு இருக்கும்.

இதேபோல, மதில் சுவருடன் கட்டப்பட்ட வீட்டில் வசிப்பவர்களுக்கும், மதில்சுவர் இல்லாத வீட்டில் வசிப்பவர்களுக்கும் நிறைய, நிறைய வேறுபாடுகள் இருக்கும்.

### மதில்சுவர் ஏன் அவசியம்?

- ✓ ஒவ்வொரு வீட்டிற்கும் எல்லையாக மதில்சுவர் இருக்க வேண்டியது அதி அத்தியாவசியமாகின்றது. வெளிப்புற காரணிகளில் இருந்து ஒரு வீட்டை காப்பதில் முக்கிய பங்காற்றுகிறது இந்த மதில்சுவர்.

- ✓ அத்தோடு இம்மதில்சுவர், பிரபஞ்ச ஆற்றலை கிரகித்து வீட்டிற்கு எடுத்து வரும் மிக முக்கியமான வேலையை செய்கின்றது. உடல் மேல் படர்ந்துள்ள தோல், நம்மை வெயிலிலிருந்தும், குளிரிலிருந்தும் எவ்வாறு பாதுகாக்கின்றதோ அதேபோல ஒரு வீட்டையும் மதில்சுவர், தீய சூழ்நிலைகளில் இருந்து காப்பாற்றுவதில் பெரும் பங்காற்றுகிறது.

### மதில்சுவர் இல்லாவிட்டால் நிகழும் தவறு என்ன?

- ✓ பிரபஞ்ச ஆற்றல் வீட்டில் நுழைவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.
- ✓ எந்தவொரு நல்ல விஷயமும் நடப்பதற்கு காலதாமதம் ஆகும்.
- ✓ தடைகளும், போராட்டங்களும் இருந்து கொண்டே இருக்கும்.
- ✓ மனநிம்மதியின்மையும், ஆரோக்கிய குறைபாடும் ஏற்படும்.
- ✓ தொழில் முன்னேற்றமின்மை, பணவரவின்மையும் ஏற்படும்.
- ✓ எதிர்பாராத இழப்புகளை அவ்வீட்டில் வசிக்கும் மக்கள் சந்திக்க நேரிடும்.
- ✓ எனவே மதில்சுவர், ஒரு வீட்டிற்கு பாதுகாப்பை மட்டுமல்லாது மகிழ்ச்சியை வழங்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது.

## மகுடம் போன்ற மாடிப்படிக்கட்டுகளை அமைக்கும் முறைகள்

- ✓ அடுத்த தளத்திற்கு நம்மை அழைத்துச்செல்ல உதவுவது மாடிப்படி. அது வீடாகட்டும் அல்லது வாழ்க்கையாகட்டும். அந்த மாடிப்படியை உத்தமமான இடத்தில் அமைப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். அயராது உழைத்துக்கொண்டே இருப்பதினாலே தான் கடிகாரம் உயரமான இடத்தில் இருக்கின்றது. அதுபோல நாமும் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைய தேவைப்படும் அயராத உழைப்பை வாஸ்துப்படி உள்ள

வீடு நமக்கு நிச்சயம் அளிக்கும். அதில் மாடிப்படி, லிப்ட் (lift) இவைகளின் பங்கு அளப்பரியது.

மாடிப்படி வரக்கூடாத இடங்கள் :

- ✓ வீட்டின் எந்த உள்மூலையிலும் வரக்கூடாது.
- ✓ பிரம்மஸ்தானத்தில் வரக்கூடாது.
- ✓ வீட்டிற்கு வெளியே வடகிழக்கு மூலையில் வரவே கூடாது.

மாடிப்படி எங்கு வரலாம்?

- ✓ வீட்டின் உள்ளே தெற்கு நடுப்பகுதி, மேற்கு நடுப்பகுதியில் வரலாம்.
- ✓ வீட்டிற்கு வெளியே வடகிழக்கு மூலையை தவிர்த்து மற்ற மூலைகளில் வரலாம். ஆனால், அவை பில்லர் அமைப்பில்லாத வகையில் இருப்பது அதிஅவசியம்.

கவனித்தே ஆக வேண்டிய விஷயங்கள் :

- ✓ எந்த திசை பார்த்து ஏற வேண்டும்?
- ✓ எவ்வளவு எண்ணிக்கையில் படிக்கட்டுகள் இருக்க வேண்டும்?
- ✓ உச்சவாசல் அமைப்பில் படிக்கட்டை அமைப்பது எப்படி?
- ✓ இதுபோன்ற பல நூறு நுணுக்கங்களை தெரிந்து கொண்டு அதன் பின்னரே மாடிப்படிக்கட்டு அமைப்பது புத்திசாலித்தனமான செயலாகும்.
- ✓ எனவே, வாழ்க்கை என்னும் வெற்றிப்படிக்கட்டில் ஏற வேண்டுமானால் வீட்டிலோ, அலுவலகத்திலோ படிக்கட்டு அமைக்கும் முறையில் அதிக கவனம் செலுத்தி, சிந்திக்க வேண்டியது அவசியம் ஆகும்.

## வாழ்வில் உச்சத்தை அடைய உதவும் உச்ச வாசல்

ஒவ்வொரு வீட்டிற்கும், அலுவலகத்திற்கும், தொழில் நிறுவனங்களுக்கும் 'நுழைவு வாயில்' என்பது அவசியம் இருக்கும். வீட்டிலிருந்து வெளியே செல்லும் ஒவ்வொருவரும் திரும்பவும் நலமுடனும், ஆரோக்கியத்துடனும் வீடு திரும்ப வேண்டும். அலுவலகத்தின் உள்ளே நுழையும் அனைவரும் உற்சாகத்துடனும், ஆரோக்கியத்துடனும் வேலையில் கவனம் செலுத்த வேண்டும்.

தொழில் செய்யும் நிறுவனங்களில் முதலாளிகளும், தொழிலாளர்களும் நல்ல உறவுமுறையில் இணைந்து வேலை செய்து அந்நிறுவனத்திற்கு நல்ல பெயரை மட்டுமல்லாது லாபத்தையும் ஈட்டிக் கொடுக்க வேண்டும். இத்தனைக்கும் ஆரம்பப் புள்ளியாக இருப்பது நுழைவு வாயில். அந்த நுழைவு வாயிலை சரியான இடத்தில் அமைப்பது புத்திசாலித்தனமான செயலாகும்.

### வாசல் எந்த பக்கம் அமைக்க வேண்டும்?

- ✓ 'குறிப்பிட்ட ராசிக்கு குறிப்பிட்ட திசையில் வாசல் வைத்தால் சிறப்பு' என்ற கருத்து பல நபர்களிடையே பொதிந்துள்ளது. வீட்டில் உள்ள ஒவ்வொருக்கும் ராசிகளில் வேறுபாடு இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திசையில் வாசல் வைப்பது என்பது இயலாத காரியம். எனவே, வாசலை எந்த திசை பார்த்தும் அமைத்துக் கொள்ளலாம். ஒரு வீட்டிற்கு சாலை/தெருவிற்கு தகுந்தாற்போல வாசலை அமைத்துக் கொள்ளலாம்.

### உச்ச வாசல் :

உச்ச வாசல்கள் மொத்தம் நான்கு ஆகும். அவை

1.வடக்கு திசை வாசல் கிழக்கு சார்ந்து

2.கிழக்கு திசைவாசல் வடக்கு சார்ந்து

3.தெற்கு திசை வாசல் கிழக்கு சார்ந்து

4.மேற்கு திசை வாசல் வடக்கு சார்ந்து இருக்கும் முறையே உச்சவாசல் எனப்படும்.

- ✓ இதில் கூறப்பட்ட விஷயம் மட்டுமல்லாது இன்னும் பல நுணுக்கமான விஷயங்கள் உச்ச வாசல் அமைக்கும் முறையில் உள்ளது.

- ✓ வீட்டின் ஜன்னல்களும் உச்சத்திலேயே இருக்க வேண்டியது அதிஅத்தியாவசியமாகும்.

### கவனிக்க வேண்டிய விஷயங்கள் :

- ✓ 'தலை' ஒரு மனிதனுக்கு ஒன்று தான். அதுபோல ஒரு வீட்டிற்கு 'தலைவாசல்' ஒன்றே ஒன்று தான் இருக்க வேண்டும். தலைவாசலை அமைக்கும் இடத்தில் அமைத்தால் தான் பலன் கிடைக்கும். ஒரு வீட்டிற்கு எத்தனை வாசல்கள் இருக்க வேண்டும்? கதவு எந்த வகை மரத்தால் ஆக்கப்பட்டால் சிறப்பான பலன் கிடைக்கும்? கதவுகளில் சாமி பட அமைப்பு இருக்கலாமா...? இப்படி பல்வேறு விஷயங்களை ஒரு

சிறந்த வாஸ்து நிபுணர் துணை கொண்டு அறிந்து, பின் வீட்டை அமைப்பது புத்திசாலித்தனமான செயலாகும்.

## தெருக்குத்து என்னவெல்லாம் செய்யும்?

வீட்டிற்கு அழகு 'வாசல்'. வாசல் முடியும் இடம் சாலை/தெரு. இந்த சாலை/தெரு அமையும் இடத்தை பொறுத்து இடம்/வீட்டின் தலையெழுத்தே மாறும் என்பது வாஸ்துவில் ஆணித்தரமான உண்மையாகும்.

### எப்படியெல்லாம் சாலை/தெரு வரும்?

ஒரு இடம்/வீட்டை சுற்றி

1. நான்கு திசைகளில்
2. மூன்று திசைகளில்
3. இரண்டு திசைகளில்
4. ஒரு திசையில் மட்டும் கூட சாலை/தெரு வரலாம்.

- ✓ இவ்வாறு சாலைகள் வரும் இடம்/வீட்டின் சாதக, பாதக காரணங்களை ஆராய்ந்து அறிந்த பின்னரே அவற்றை வாங்க வேண்டும்.
- ✓ பஞ்சபூத தத்துவங்கள் அடங்கியது தான் ஒவ்வொரு இடமும்/வீடும். எனவே, அத்தத்துவங்கள் சிதைந்து போகா வண்ணம், அதிகப்படியான நேர்மறை விளைவுகளை வழங்கக்கூடிய சரியான, நல்ல தெருக்குத்தை பற்றி நன்கு அறிந்த பின்பே ஒரு இடம்/வீட்டை வாங்குதல் வேண்டும்.
- ✓ திசையை பொறுத்து தெருக்குத்தின் பலன் மாறுபடும். சில திசைகளிலிருந்து வரும் தெருப்பார்வை அபரிமிதமான பலன்களை வாரி வழங்கும். சில திசைகளிலிருந்து வரும் தெருக்குத்து/தெருப்பார்வை தீய பலன்களை கொடுக்கும். எனவே, நல்ல தெருக்குத்து எது? கெட்ட தெருக்குத்து எது? என ஆராய்ந்து அறிந்த பின்னரே இடத்தையோ அல்லது வீட்டையோ வாங்குவது உசிதமான செயலாக இருக்கும்.
- ✓ நல்ல தெருக்குத்து, கடைக்கோடியில் உள்ளவரையும் மாட மாளிகையில் ஏற்றி விட்டு அழகு பார்க்கும். அதேபோல தவறான தெருக்குத்து தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

- ✓ சில இடம்/வீடு முழுமைக்குமே தெரு/சாலை வரும். இந்த மாதிரி அமைப்பை அதி கவனத்துடன் கையாள வேண்டும். இந்த அமைப்புள்ள இடத்தை அல்லது வீட்டை வாங்கும்முன் வாஸ்து விதிகளை பின்பற்றி வாங்குவது சிறப்பான ஒன்றாக இருக்கும்.
- ✓ நல்ல தெருக்குத்து உள்ள இடத்தை தேர்ந்தெடுக்கும் நபர்களின் வாழ்க்கை, நேர்மறை நகர்வாக இருக்கும்.

- ✓ நல்ல தெருக்குத்து உள்ள இடத்தில் தவறான அமைப்பில் வீடு இருக்கும் பட்சத்தில் சிறப்பான பலன்கள் கிடைக்குமா? மற்றும் தவறான தெருக்குத்து உள்ள இடத்தில் வாஸ்துப்படி வீட்டை அமைத்துக்கொண்டால் என்ன விளைவுகள் நிகழும்? என்பனவற்றை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

- ✓ நல்ல குணநலன்கள், வீட்டில் உள்ள பெரியோர்களை நன்றாக பார்த்துக்கொள்வது, விட்டுக்கொடுப்பது போன்ற பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ளும்போது நமக்கும் கோடீஸ்வர தெருக்குத்து நிச்சயம் வாய்க்கப்பெறும்.

- ✓ கோடீஸ்வர தெருக்குத்து உள்ள மனை அமைய திருவெற்றியூர் வடிவுடையம்மனை துணை கொள்வது சிறப்பான பலன்களை நல்கும்.

## பூஜையறையில் பொதிந்துள்ள சூட்சமங்கள்

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது முன்னோர் வாக்கு. தினமும் ஆலயத்திற்கு செல்வது என்பதும் சரியான செயலாகாது. மனதை ஒருநிலைப்படுத்தி நேர்மறை ஆற்றல்களை அதிகரித்துக்கொள்ள, ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது பூஜையறை.

- ✓ இந்த பூஜையறை வீட்டில் எந்த இடத்தில் அமைக்கப்பட வேண்டும்?

- ✓ எந்த தெய்வங்களின் படங்கள் அதில் இருக்க வேண்டும்?

- ✓ எவ்வளவு நேரம் பூஜை செய்ய வேண்டும்?

### பூஜையறையின் சிறப்பு :

- ✓ வீட்டில் பிரபஞ்ச ஆற்றலை ஈர்த்து, தக்கவைத்து சரியான அளவில், அங்கு வாழ்பவர்களுக்கு சிறந்த விஷயங்களை வழங்குவதில் பூஜையறை பெரும்பங்கு வகிக்கின்றது.

### பூஜையறையில் இருக்க வேண்டிய படங்கள் :

- ✓ பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர், திருச்செந்தூர் அல்லது பழனி முருகர், திருப்பதி வெங்கடாசலபதி, உறங்கா அரங்கனையே ஆண்ட ஆண்டாள், சமயபுரம் மாரியம்மன், காஞ்சி காமாட்சி அம்மன், மதுரை மீனாட்சியம்மன் மற்றும் அவரவர் குல தெய்வங்களின் படங்கள்.
- ✓ இவற்றை கிழக்கு பார்த்து வைக்க வேண்டும். அன்னபூரணி சிலை இருந்தால் தினமும் அரிசி மாற்ற வேண்டும்.

### வாஸ்துவும், பூஜையறையும் :

- ✓ இத்தகைய சிறப்பு வாய்ந்த வீட்டின் ஆற்றல் களமான பூஜையறை, வீட்டில் இருக்கவே கூடாத இடம் தென்மேற்கு மூலை (பழனி மூலை), வடகிழக்கு மூலை (ஈசானிய மூலை) மற்றும் பிரம்மஸ்தானம் ஆகும். வடமேற்கிலும், தென்கிழக்கிலும் பூஜையறையினை அமைத்துக் கொள்ளலாம். அதிலும் தென்கிழக்கு மூலை அதிஅற்புதமான பலன்களை வழங்கும்.

## போர்ட்டிக்கோ... அழகா? ஆபத்தா?

- ✓ இன்றைய காலக்கட்டத்தில், மாடி இல்லாத வீடுகளை கூட பார்த்திடலாம். ஆனால், போர்ட்டிக்கோ இல்லாத வீட்டை பார்ப்பது அரிதாகிவிட்டது. சமையலறை, படுக்கும் அறைக்கு அடுத்து மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்துவிட்டது இந்த போர்ட்டிக்கோ.
- ✓ சிலர் வாகனங்களை நிறுத்துவதற்காக இதனை அமைக்கின்றனர். ஆனால், பெரும்பாலும் இது வீட்டின் ஏதோ ஒரு மூலையை சிதைத்து விட்டு தான் வடிவம் பெறுகிறது. இது மிகப்பெரிய தவறாகும்.
- ✓ வீட்டின் வடகிழக்கு மூலையில் திறப்பு இருக்க வேண்டும் என்று அப்பகுதியை போர்ட்டிக்கோவாக ஆக்கினால் வீட்டின் வடகிழக்கு பகுதி வெட்டுப்படும். இது தலையில்லா உடலுக்கு சமமாகும். தலையில்லாத உடலால் எந்த பயனும் இல்லை. அதற்கான விளைவுகளை அனுபவித்து தான் ஆக வேண்டும்.
- ✓ போர்ட்டிக்கோவை, வரவேற்பறை போல பயன்படுத்தும்போதும் தவறுகள் நிகழ்கின்றன. மதில்சுவர் இல்லா வீடுகளில் போர்ட்டிக்கோவின் அடியில் செப்டிக் டேங்க், போர், கீழ்நிலைத்தொட்டி போன்றவை வந்துவிடும். இந்த அமைப்புகள் சரியா? என்பதை ஆராய்ந்த பிறகே அமைத்துக்கொள்வது உசிதமான செயலாகும்.

- ✓ அப்படியெனில் போர்ட்டிக்கோவை வீட்டில் அமைக்கவே கூடாதா எனில் அமைக்கலாம், வாஸ்து விதிகளுக்கு உட்பட்டு எந்த பகுதியும் வெட்டுப்படாமல், வளைவுகள் வரக்கூடாத திசைகளை அறிந்து அமைக்கும்போது, போர்ட்டிக்கோ அழகுக்கு அழகு சேர்ப்பது மட்டுமல்லாமல் சிறப்பான பலன்களையும் வழங்கும்.

போர்ட்டிக்கோ-வில் தவறான அமைப்புகள் :

- ✓ பில்லர் அமைப்புடன் கூடிய போர்ட்டிக்கோ
- ✓ பிரமிடு அமைப்புடன் கூடிய போர்ட்டிக்கோ
- ✓ போர்ட்டிக்கோவின் மேலே அப்படியே அறையாக அமைப்பது
- ✓ மதில்சுவரின் மேல் போர்ட்டிக்கோவின் பில்லர் அமைந்து இருப்பது
- ✓ இதுபோன்ற தவறுகள் இல்லாத வண்ணம், அழகை மட்டுமே பிரதானமாக கொள்ளாமல் வாஸ்து விதிகளை உணர்ந்து வீட்டை அமைக்கும்போது உன்னதமான வாழ்வை வாழலாம்.

## வாசல் கதவை எந்த திசையில் அமைத்தல் நல்லது?

- ✓ நம் அனைவரின் வாழ்க்கையிலும் நுழைவு என்பது அதிமுக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆலயங்கள், வியாபாரம் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில் நுழைவு வாயில்கள் பிரதான இடம் பெறுகிறது. இவ்வளவு ஏன் மாணவர்கள் பள்ளியிலிருந்து கல்லூரி வரை முணுமுணுப்பது நுழைவுத்தேர்வு என்ற வார்த்தை தானே. இப்படியாக நுழைவு என்பது நம் எல்லோரின் வாழ்விலும் தினம் தினம் நம்முடன் இணைந்து பயணப்படுவதாகவே அமைந்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு இருக்கும்பொழுது நாம் தினம் வசிக்கும் வீட்டிற்கு நுழைவு வாசல் எவ்வளவு சிறப்பானதாக இருக்க வேண்டும்?
- ✓ ஒரு வீட்டிற்கு தலைவாசல் உச்சத்தில் அமைப்பது அவசியம். ஒரு மனிதனுக்கு மூளை எவ்வளவு அவசியமோ அதுபோல வீட்டிற்கு தலைவாசல்.
- ✓ ஒரு வீட்டிற்கோ அல்லது தொழில் நிறுவனத்திற்கோ அமைக்கப்படும் தலைவாசல் ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு என்ற எண்ணிக்கையில் வருமாறு அமைக்க வேண்டும். மேலும், கட்டிடத்திற்குள் அமைக்கும்போது அறைகளின் வாசல்களும் உச்சத்தில்தான் அமைக்கப்பட வேண்டும்.
- ✓ வடக்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் வடக்கு திசையில் கிழக்கு ஒட்டியும்,
- ✓ கிழக்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் கிழக்கு திசையில் வடக்கு ஒட்டியும்,

- ✓ தெற்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் தெற்கு திசையில் கிழக்கு ஒட்டியும்,
- ✓ மேற்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் மேற்கு திசையில் வடக்கு ஒட்டியும் அமைக்க வேண்டும்.

வடகிழக்கு-கிழக்கு :

- ✓ இந்த அமைப்பு ஒரு அறிவுச்சார்ந்த அமைப்பாகும். இவ்வாறான வாசலை பெற்றவர்கள் வீட்டில் இருக்கும் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மெச்சத்தக்க அறிவுக்கூர்மை அவர்களை ஈர்த்து கொண்டே இருக்கும்.

தென்கிழக்கு-தெற்கு :

- ✓ இந்த வாசல் அமைப்புடன் கூடிய வீட்டில் வசிப்பவர்களுக்கு மங்களகரமான விஷயங்கள் வலம் வந்துக்கொண்டு இருக்கும். இது ஒரு வளம் தரும் வாசலாகும்.

வடமேற்கு-மேற்கு :

- ✓ இந்த வாசல் அமைப்பு கிடைக்க பெற்றவர்களுக்கு அவர்கள் விரும்பத்தக்க வகையில் மிகச் சாதகமான, அதுவும் மகிழ்ச்சியை பெருகக்கூடிய செய்திகள், நிகழ்வுகள் நிகழ்ந்துக்கொண்டிருக்கும்.

வடகிழக்கு-வடக்கு :

- ✓ அதிர்ஷ்டம் நிறைந்த ஒரு வளம் தரும் வாசல் அமைப்பு இதுவாகும். ஒரு வீட்டில் வசிப்பவர்களுக்கு இவ்வாறான வாசல் அமைப்பு மிக துரிதமான, வேகமான லாபங்கள் கிடைக்கப் பெற்றுக்கொண்டே இருக்கும்.
- ✓ நுழைவு மட்டும் வளமாக அமைந்தாலும் மற்ற உள்கட்ட அமைப்புகளையும் சரியான முறையில் கட்டமைத்துக்கொண்டால் தான் நம் வாழ்க்கை வளமான வளர்ச்சி பாதையில் செல்லும் என்பது திண்ணம்.

## சமையலறை, கழிவறை, தண்ணீர் தொட்டி, மாஸ்ட்டர் பெட்ரூம் அமைப்பது பற்றிய தகவல்கள்

சமையலறை :

- ✓ வீட்டைப் பொறுத்தவரை சமையலறை என்பது ஒரு மிக முக்கியமான இடமாக கருதப்படுகிறது. பழங்காலத்தில், பெரிய சமையலறைகளை பயன்படுத்துவது ஒரு வரையறையாக இருந்தது.

- ✓ ஒரு குறிப்பிட்ட திசையில் பாரம்பரிய முறையில் சமையலறை அமைப்பதற்காக எந்த விதமான கடுமையான விதிகள் கிடையாது.

- ✓ சமையலறை தென்கிழக்கு திசையில் இல்லையென்றால், அது குடும்பத்தினருக்கு எந்த விதமான தீங்கையும் நிச்சயமாக ஏற்படுத்துவதில்லை என சொல்லப்படுவதுண்டு. மேலும், சமையல் செய்யும் பொழுது, வீட்டுப் பெண்மணி அல்லது சமையல்காரர் கிழக்கு திசை நோக்கி இருக்க வேண்டும்.

- ✓ அதேபோல அடுப்பு, அது கேஸ் அடுப்பாக இருந்தாலும் சரி, விறகு அடுப்பு அல்லது நிலக்கரி அடுப்பு அல்லது மின் அடுப்பாக இருந்தாலும், அது அமைக்கப்பட்டிருக்கும் திசை முக்கியமானது என நம்பப்படுகிறது.

- ✓ தங்கள் வீட்டில் தென்கிழக்கில் சரியான அமைப்பில் சமையலறை இருப்பின் நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்குடனும் பெண்கள் வலம் வருவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

### கழிவறை :

- ✓ கழிவு என்றாலே பிரச்சனைதான். அது மனிதனின் உடலில் இருந்தாலும் சரி. நாம் வாழும் வீட்டில் இருந்தாலும் சரி. ஆகையால்தான், நமது முன்னோர்கள் கழிவறையை வீட்டின் வெளிப்புறமாக அமைத்தார்கள்.

- ✓ ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் குறுகிய இடத்தில் வீடு கட்டும் நிலை இருப்பதால் வீட்டின் உள்ளே கழிவறை மற்றும் குளியலறையை அமைக்க நேர்கிறது. அதனால் வீட்டின் தவறான இடத்தில் கழிவறை அமைந்துவிட்டால் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது.

- ✓ ஒரு வீட்டில் கழிவறை மற்றும் குளியலறை மேற்கு நடுப்பகுதி அல்லது வடமேற்கு திசையில் மட்டுமே அமைக்க வேண்டும். அதேபோன்று படுக்கையறையில் கழிவறை சேர்ந்து அமைப்பதாக இருந்தால் அந்த அறையின் வடமேற்கு பகுதியில் அமைப்பது மிக சிறந்தது.

### தண்ணீர் தொட்டி :

- ✓ நம்முடைய இடத்திற்கு எப்பொழுதுமே தரைக்குக்கீழ் வரக்கூடிய தண்ணீர் தொட்டி அமைப்பும், கிணறு அமைப்பும், போர் அமைப்பும் வடகிழக்கு பகுதியை சார்ந்தே வர வேண்டும்.

- ✓ தண்ணீர் என்பது எப்பொழுதுமே தாழ்வான பகுதியை நோக்கி செல்லக்கூடியது. நமது இடத்திற்கு வடகிழக்கு எப்பொழுதுமே தாழ்வான பகுதியாக இருப்பது சிறப்பை தரும்.

- ✓ தரைக்குமேல் வரக்கூடிய தண்ணீர் தொட்டி எப்பொழுதுமே தென்மேற்கு பகுதியில் வீட்டின் கூரை பகுதிக்கு மேல் வருவது சிறப்பை தரக்கூடியது.

மாஸ்ட்டர் பெட்ரூம்

- ✓ மாஸ்ட்டர் பெட்ரூம் எப்பொழுதுமே தென்மேற்கு பகுதியில்தான் வரவேண்டும். அப்பொழுதுதான் அந்த வீட்டில் வசிக்கக்கூடியவர்களுக்கு பற்பல நன்மைகள் வந்து சேரும். படுத்து தூங்கக்கூடிய இடமல்லாமல் நம்முடைய தொழிலில் வருமானம், ஆயுள், ஆரோக்கியம், பெயர், புகழ் அனைத்தையும் தீர்மானிப்பதே இந்த தென்மேற்கு பெட்ரூம் மட்டுமே.

- ✓ மாஸ்ட்டர் பெட்ரூம் என்பது ஆண்களுக்கு தொழில் மற்றும் வருமானம், ஆரோக்கியம், பெயர், புகழ் இவற்றுடன் சம்பந்தப்பட்டது. எனவே மாஸ்ட்டர் பெட்ரூம் அமைக்கும்போது அனுபவம் வாய்ந்த வாஸ்து நிபுணரின் உதவியால் அமைத்துக் கொள்வது சிறப்பு.

## மேன்மை தரும் மேற்கு வாசல்

- ✓ வாஸ்து சாஸ்திரத்தின் முக்கியத்துவம் உணரப்பட்ட இந்நாளில் நாம் பரவலாகக் காணும் ஒரு முக்கிய நிலை தலைவாசல் அமைப்புகளை தேர்ந்தெடுப்பது தான். அதிலும் குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு வாசல் அமைப்புகளே பெரும்பாலானவர்களால் விரும்பப்படுகின்றன.

- ✓ உண்மையில், தலைவாசல் அமைப்பதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் நான்கு திசைகளில் எத்திசையாயினும் தலைவாசல் உச்சப்பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். இது குறித்த தெளிவான விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் பெரும்பாலான இடங்களில் மேற்கு வாசல் அமைப்புகள் வாடகை குடியிருப்புகளுக்குக் கூட பெரும்பாலும் விரும்பப்படுவதில்லை.

- ✓ மேனிலை பெறத்தான் மேற்கில் ஒரு வாசல் வேண்டும் எனும் வாக்கிற்கிணங்க மேற்கு திசையில் உச்சப்பகுதியில் வாசல் அமைத்து வாழ்பவர்களை கூர்ந்து கண்ணுற்றால் அவர்கள் நிச்சயமாக தமது நிலையிலிருந்து வாழ்வின் அடுத்த கட்டத்தை தொட்டிருப்பதை நம்மால் உணர இயலும்.

- ✓ மேலும், மேற்கு பகுதியில் தெருக்குத்து அல்லது தெருத்தாக்கம் உச்சப்பகுதியில் அமையப்பெற்றால், அந்த வீட்டில் இருப்பவர்களுக்கு வெளியூர், வெளி மாநில மற்றும்

வெளிநாட்டு தொடர்புகள் கிடைக்கப்பெற்று மிக சிறப்பானதொரு வாழ்வு அமையும் என்பது உறுதி.

## தென்கிழக்கும், பெண்களின் ஆரோக்கியமும்

- ✓ வாஸ்து சாஸ்திரத்தில் தெற்கும், கிழக்கும் சந்திக்கும் பகுதி தென்கிழக்கு பகுதியாக அறியப்படுகின்றது. இது பஞ்சபூதங்களில் அக்னி என்ற நெருப்புக்கு உரிய திசையாக கருதப்படுவதால் ஆக்கினேயம் என்றும் அறியப்படுகின்றது.

- ✓ மனித உடலில் கழுத்துக்கும், மேல் வயிற்றுக்கும் இடையிலான பகுதி வாஸ்து சாஸ்திரத்தில் தென்கிழக்கு மூலையுடன் ஒப்பிடப்படுகின்றது.

- ✓ இந்த திசையில்தான் ஒரு வீட்டின் சமையலறை இருக்க வேண்டும். தென்கிழக்கு மூலையில் அடுப்பை வைத்து கிழக்கு திசை பார்த்து நின்று சமைக்க வேண்டும்.

- ✓ ஒரு வீட்டின் தென்கிழக்கு பகுதியில் சமையலறை தவிர படுக்கை அறை அல்லது மற்ற அறைகள் அமையப்பெற்றால் அந்த குடும்பத்தில் பெண்களுக்கு மனக்குழப்பம், ஞாபகமறதி, உடல் ஆரோக்கியமற்ற சூழ்நிலை போன்ற தீய பலன்கள் உண்டாகும்.

- ✓ மேலும், தென்கிழக்கு பகுதியில் தண்ணீர்த்தொட்டி, செப்டிக் டேங்க் போன்ற அமைப்புகளின் மூலம் பள்ளம் உருவானால் அந்த குடும்ப உறுப்பினர்களுக்கு கேன்சர் போன்ற வியாதிகளும், பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறு போன்ற தீய பலன்களும் உண்டாகும்.

- ✓ எனவே, தென்கிழக்கு பகுதியில் வாஸ்து பலம் அதிகரிக்கும் வகையில் சமையலறை, பூஜையறை அமைத்து கொள்ளலாம்.

## குபேரனாகும் அமைப்பும், குபேர பொம்மையும்

- ✓ சிலரது வீடுகளில் அலங்காரப் பொருட்களின் ஒரு அங்கமாக குபேர பொம்மை விளங்குகிறது. இன்னும் சிலரது வீடுகளில் இந்த பொம்மை பூஜையறையில் காணப்படுகிறது. புத்த மதத்தை சார்ந்தவர்கள் கடவுளாக வணங்கும் இந்த பொம்மையின் உண்மை பெயர் சிரிக்கும் புத்தர்.

- ✓ சிரிக்கும் குபேர பொம்மையை வைத்தால் வீட்டில் ஒற்றுமையும், சந்தோஷமும் அதிகரிக்கும். குடும்பத்திற்குள் ஏற்படும் சண்டைகள், சச்சரவு, வாக்குவாதத்தினால் ஏற்படும் மனக்கஷ்டங்கள் தீரும்.

- ✓ சிரித்துக் கொண்டிருக்கும் பொம்மையை பார்க்கும்போது மன அழுத்தம் குறைகிறது. பிரச்சனைகளை எதிர்நோக்குவதற்கு புது நம்பிக்கை நமக்கு கிடைக்கும். புத்த மதத்தில்

இந்த பொம்மையை கடவுளாக மதிக்கின்றனர். இதை எந்த அறையில் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்.

- ✓ ஆனால் செல்வச் செழிப்பும், குபேர அந்தஸ்தும் கிடைப்பதற்கு இந்த பொம்மையை மட்டும் நம்பினால் எந்த விதத்திலும் வெற்றி கிடைக்காது. மாறாக, நேர்மறை தெருக்கூத்து அமையப்பெற்ற மனையில் வாஸ்து பலம் நிறைந்த வீட்டைக் கட்டி அதில் நேர்மறை சிந்தனைகளோடும், உன்னதமான உழைப்பின் மூலமாகவும் மட்டுமே செல்வ செழிப்பினை பெறமுடியும்.

- ✓ ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளில் வாஸ்து குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அதை முறையாக சரிசெய்து வாஸ்து விதிகளை பின்பற்றினால் நிச்சயம் நீங்களும் குபேரன் ஆகலாம்.

## பிரம்மஸ்தானம்

- ✓ மனை அல்லது வீட்டின் மையப்பகுதியே பிரம்மஸ்தானம் என்று அழைக்கப்படுகிறது.

- ✓ மனிதன் ஓடி ஓடி உழைப்பது அனைத்துமே மிக முக்கிய அத்தியாவசிய தேவையான வயிற்றுக்காக தான்.

- ✓ ஒரு மனிதன் எவ்வளவு சொத்து வைத்து இருந்தாலும் தனக்கு தேவையான அளவு மட்டுமே சாப்பிட முடியும்.

- ✓ தங்களின் வீடு எவ்வளவு பெரியதாக இருந்தாலும் வீட்டின் பிரம்மஸ்தானம் சரியாக இருந்தால் தான் மனிதனின் வாழ்க்கையும் சரியாக இருக்கும்.

- ✓ ஒரு வீட்டில் பிரம்மஸ்தானம் சரியாக இருப்பின் அவ்வீட்டில் உள்ளவர்களுக்கு உடலைப் பேணிக்காக்கும் ஆர்வம் இயற்கையாகவே அமைந்து விடுகிறது.

- ✓ உடற்பயிற்சி செய்பவர்கள், சிக்ஸ் பேக் வைத்திருப்பவர்கள், தன் குடும்பத்தை பேணிக்காப்பவர்கள், தன்னுடைய வாகனத்தை சுத்தமாக வைத்திருப்பவர்கள் என்று தனக்கு சம்பந்தமான அனைத்து பொருட்களையும் எவரொருவர் பேணி காக்கிறார்களோ அவர்களின் வீட்டில் பிரம்மஸ்தான பகுதி மிகவும் சரியாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

- ✓ சமூகத்தில் தனக்கென ஒரு இடம், அந்தஸ்து, மரியாதை என்று தன்னுடைய சுயத்தை நிரூபிக்கப் போராடுபவர்கள் அனைவரும் பிரம்மஸ்தானம் சரியாக இருக்கிறதா? என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

- ✓ உங்களால் உருவாக்கப்படும் வீட்டிற்கு நீங்கள் தான் பிரம்மா. உங்கள் படைப்பில் பிரம்மஸ்தானம் மட்டும் தவறாகலாமா?

- ✓ புதிதாக வீடு கட்டப்போகும் பிரம்மாக்களே, பிரம்மஸ்தானம் சரியாக இருக்கிறதா? என்பதை மட்டும் கவனித்து கொள்ளுங்கள்.

## வீட்டிற்கு shed ஏன் முக்கியம்?

- ✓ நமது மனையில் வீடு கட்ட தேவையான பொருட்களை வைக்க ஓர் shed அமைப்பது அவசியம். பெரும்பாலும் இதை நம் இடத்திற்கு பக்கத்தில் ஏதோ ஒரு திசையில் அமைப்பது வழக்கம்.

- ✓ நல்ல நாள், நல்ல நேரம், வாஸ்து நாள், வாஸ்து நேரம் பார்த்து ஆரம்பிக்கும் வீடு கட்டும் வேலை எல்லோருக்கும் சுணக்கமில்லாமல், சுலபமாக முடிந்து விடுகிறதா என்ன?

- ✓ 'வீட்டைக் கட்டிப்பார், கல்யாணத்தை பண்ணிப்பார்' என்ற நம் முன்னோர்களின் சொல்லில் உள்ள சூட்சமத்தை எத்தனை பேர் புரிந்து கொண்டுள்ளனர்?

- ✓ வீடு கட்டும்முன் நாம் அமைக்கும் shed மிகப்பெரிய வேலையை செய்கின்றது என்பதை புரிந்து கொள்பவர்களின் பணம் விரயமாகாமல் சேமிக்கப்படுகின்றது.

- ✓ தவறான இடத்தில் 'பொருட்கள் சேமிக்கும் அறை' அமைந்துவிட்டால், கை சுத்தமாகவும், சிறந்த ஒத்துழைப்பு கொடுக்கும் வேலையாட்கள் கிடைப்பதும் அரிதாகிவிடும். மேலும், பொருட்கள் திருடு போவதற்கும் நாமே வழி ஏற்படுத்தி கொடுப்பது போல் ஆகிவிடும்.

- ✓ வீட்டை கட்டும் நபர்களின் பேச்சுக்கு முக்கியத்துவம் இல்லாமல் தொழிலாளர்களின் கை ஓங்கிவிடும். அவர்கள் சொல்வதைதான் வீட்டின் முதலாளி கேட்டாக வேண்டிய இக்கட்டான சூழலையும் இந்த அறை அமைப்பு உருவாக்கிவிடும்.

- ✓ வீடு முழுமை பெறாமல் பாதியில் நிற்பதற்கு இந்த shed அமைப்பும் ஒரு காரணமாகி விடும்.

- ✓ எனவே, வாஸ்து என்பது வீட்டிற்கு மட்டுமே அல்ல. ஒருவருக்கு திருமணத்திற்கு பெண் தேடுவதில் இருந்து, குழந்தை பிறப்பு வரை அதாவது வாழ்க்கை முழுமை அடைவதற்கு வாஸ்து மிக மிக அவசியமாகும்.

- ✓ எட்டுத்திசைகளில் சரியான திசையில், சரியான இடத்தில் shed அமைத்து கனவு இல்லத்தை காட்சிக்கு கொண்டு வருவதில் வாஸ்துவின் பங்கை, பலத்தை உணர்ந்து அதை செயல்படுத்தி வாழ்வில் வெற்றி பெறுங்கள்.

## வீட்டில் வாஸ்து குறைபாடு உள்ளது என்பதை எப்படி உணர்ந்து கொள்வது?

- ✓ அளவுக்கு அதிகமான கடன்
- ✓ நன்றாக இருந்த வாழ்க்கையில் திடீரென குழப்பம்
- ✓ நல்ல முறையில் நடந்து கொண்டிருந்த தொழில்கள் முடங்குவது
- ✓ உடல் ஆரோக்கியம் கெடுவது
- ✓ பல காலமாக ஆரோக்கியம் சீராக இல்லாமல் இருப்பது
- ✓ திருமணத் தடை
- ✓ குழந்தையின்மை
- ✓ குடும்ப உறவுகளில் சிக்கல் அதாவது கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு
- ✓ அனைத்து உறவுகளிலும் இணக்கம் இல்லாமல் இருப்பது
- ✓ எப்போதும் இல்லை என்ற மனப்பான்மை
- ✓ இயலாமை பற்றி அதிகமாக பேசுவது
- ✓ எதிர்மறையாக பேசுவது
- ✓ அளவுக்கு அதிகமான பய உணர்ச்சி
- ✓ விபத்துகள்
- ✓ தற்கொலைகள்
- ✓ அகால மரணங்கள் அடிக்கடி நிகழ்வது
- ✓ தீ விபத்து

- திருடு போகுதல்
- குழந்தைகள் கல்வியில் பின் தங்குவது
- வீட்டில் பெரியவர்களிடம் மதிக்காமல் இருப்பது
- வாழ்க்கையை எதிர்கொள்ள அடுத்தவரை நம்புவது
- சட்ட சிக்கல்கள்
- வம்பு வழக்குகள்
- தெளிவற்ற பேச்சுகள், செயல்கள்
- உதாரணத்திற்கு, பூட்டிய வீட்டை திரும்ப சென்று சோதிப்பது போன்று அனைத்திலும் சந்தேகம்
- மற்றவரை நம்ப மறுப்பது
- அளவுக்கு அதிகமாக வீட்டை எப்போதும் சுத்தம் செய்வது
- மனநோய்கள் ஏற்படுவது.
- இதுபோன்ற பிரச்சனைகளை அனுபவிக்கும் குடும்பங்களுக்கும், மனிதர்களுக்கும் இது நமது விதி மற்றும் கர்மா என்று தோன்றலாம்.
- ஒரு சிலர் இதிலிருந்து வெளியே வர பல வகைகளில் தீர்வு காண முயற்சிப்பார்கள்.
- எனவே, இதுபோன்ற பிரச்சனைகளில் இருந்து சரி செய்து கொள்ள தேர்ந்த வாஸ்து நிபுணர் கொண்டு ஆய்வு செய்து வாஸ்துப்படி வீட்டை அமைத்து தீர்வு காணலாம்.

## வாஸ்துவும், குழந்தை செல்வமும்

- பெண்மை முழுமை பெறுவது 'தாய்மை'யால் மட்டுமே. பத்து, பனிரெண்டு குழந்தைகள் பெற்றெடுத்த நம் முன்னோர்களின் மரபு வழியில் வந்த நாம் இன்று ஒரு குழந்தை பெற்றெடுப்பதற்குள் என்னென்ன செய்ய வேண்டி உள்ளது?

- ✓ இருமனம் இணையும் திருமணத்தில் அன்பின் வெளிப்பாடான, அடுத்த தலைமுறை உருவாக பல்வேறு காரணிகள் காரணமாகின்றன. ஆரோக்கியம், கணவன், மனைவி ஒற்றுமை, மனமகிழ்ச்சி இவை அனைத்தும் இருந்தால் தான் கரு உருவாகி, கருப்பையில் தங்கி, சிறப்பான வளர்ச்சியை பெற்று முழுமையான குழந்தையாக இயற்கையான முறையில் இவ்வுலகை காண வரும்.

- ✓ சீரான வளர்ச்சியை பத்து மாதம் வரை எட்டினால் தானே முழுமையான குழந்தை கிடைக்கும். இடையிலேயே அந்த உயிர் உதிர்ந்து போவதற்கு தனது தாய் தந்தை வாழும் 'வீடு' மிக முக்கியமான காரணமாய் இருக்கின்றது.

- ✓ குழந்தை, தன் வளர்ச்சிக்கு தேவையானதை, தன் தாயின் சுவை உணர்வு மூலம் பெற்று வளர்வதாலேயே மசக்கை பெண்கள் விரும்பியதை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றனர் நம் முன்னோர்கள். ஒரு குழந்தை தான் வாழப்போகும் வீட்டையும் ஒரு குழந்தை தான் உருவாகும் போதே தீர்மானித்துக் கொள்கின்றது என்பது தான் வாஸ்துவில் அதிநுட்பமான சூட்சமம்.

- ✓ வீட்டின் சமையலறை தென்கிழக்கு பகுதியில் இருந்தால் தான் ஆதவனின் அருட்கொடை அற்புதமாய் கிடைக்கும். ஆரோக்கிய உணவு உடலை நோய் எதிர்ப்பு சக்தியுடன் வளர்க்கும். இந்திரியத்தின் செயல்பாடும் சிறப்பாக இருக்கும்.

- ✓ எனவே வீட்டின் தென்கிழக்கு, வடமேற்கு பகுதிகளை சரியாக அமைத்து குழந்தை செல்வத்தை நிறையோடு பெற்று மகிழுங்கள்.

## வாஸ்து என்பது வீட்டுக்கு மட்டும் பின்பற்ற வேண்டுமா?<br>அல்லது<br>வியாபாரம் செய்யும் இடங்களில் கூட பார்க்க வேண்டுமா?

- ✓ மனிதனுக்கு வயிறும், வாயும் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியம். அதுபோல் நாம் வசிக்கும் வீடு வாஸ்து முறைப்படி கட்டி இருந்தால் மட்டும் போதாது. நமது வாழ்க்கைக்கு பொருளாதார ஆதாரமாக இருக்கும் வியாபார நிலையங்களும் நிச்சயம் வாஸ்துபடி இருக்க வேண்டும்.

- ✓ வீடு என்றால் சமையலறை, பூஜையறை படுக்கையறை என்று பல அறைகள் இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால், கடை என்பதற்கு என்ன விதி? அதற்கு ஏன் வாஸ்து பார்க்க வேண்டும்? என்று உங்கள் மனதில் கேள்வி எழும்.

- ✓ உதாரணமாக, ஒரே கட்டிடத்தில் நான்கைந்து கடைகள் இருக்கும். ஒருவருக்கு நல்ல வியாபாரம் நடந்துகொண்டே இருக்கும். மற்றவருக்கு சுமாரான வியாபாரம் அல்லது வியாபாரம் இல்லாமல் இருக்கும். என்ன காரணம்? என்று உற்று பார்த்தால் மட்டுமே தெரியும். அவர் உட்காரும் முறை, அங்கு பொருட்கள் அமைந்திருக்கும் இடம் மற்றும்

அவருடைய வாஸ்து பற்றிய அணுகுமுறையும் அவருக்கு அந்த இடத்தில் கை கொடுத்திருக்கும்.

- ✓ எப்படி வீட்டுக்கு தெருக்குத்து பார்வை நல்லது செய்யுமோ? அதேபோல் வியாபார நிலையங்களுக்கு நிச்சயம் இது ஏற்புடையதே.

- ✓ தென்மேற்கில் பணப்புழக்கம் அதிகரிக்கும் இடம் என நாம் அனைவரும் அறிந்தது. ஆனால், அதையும் தாண்டி பல விஷயங்கள் வாஸ்துவில் உள்ளது. ஒரு முதலாளி உட்காரும் இடம் பணியாளர்களுக்கான ஓய்வறை, மேனேஜர் மற்றும் சூப்பர்வைசர் போன்றவர்கள் அமரும் அறை, வரும் பொருட்களை சேமிக்கும் இடம் போன்ற பல சூட்சுமமான விஷயங்கள் வாஸ்துவில் உள்ளது.

- ✓ ஒரு நிறுவனத்தில் வாஸ்து ரீதியாக குறைபாடு இருந்தால் நிச்சயம் அது வியாபாரத்தையும், நம் வாழ்க்கை பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

## கட்டிடம் பாதியில் நிற்பது ஏன்?

- ✓ ஜோதிடம் பார்த்து, நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, வாஸ்து நாள் பார்த்து, எல்லாம் சரியாக பார்த்து தொடங்கிய கட்டிடம் பல காரணங்களால் நிற்பதை நாம் கண்டிருப்போம்.

- ✓ அந்த கட்டிடம் வாஸ்து முறைப்படி இல்லாமல் இருக்கலாம். ஏனெனில் கட்டிட பணியிலும், கட்டும் முறையிலும் வாஸ்து மிகப்பெரிய பங்காற்றுகிறது என்பதை மனதில் கொள்ளவும்.

- ✓ வாஸ்து என்பது பஞ்சபூதங்களை உள்ளடக்கியது. அந்த பஞ்சபூதங்களுக்கு எந்தவிதமான இடையூறுமின்றி சரியான முறையில் கட்டிடங்களையும், அறைகளையும் அமைப்பது வாஸ்து ஆகும்.

- ✓ வாஸ்துபடி ஒருவர் சிறந்த வரைபடம் பெற்றாலும், அந்த வீட்டை கட்டுபவர்களின் மனநிலை, எதை முதலில் செய்ய வேண்டும்? எதை கடைசியில் செய்ய வேண்டும்? என்ற பக்குவம் தெரிந்திருந்தால் மட்டுமே ஒரு சிறந்த கட்டிடத்தை குறிப்பிட்ட நாட்களுக்குள் கட்டி முடிக்க முடியும்.

- ✓ உதாரணமாக, வீடு கட்ட தொடங்கும் முன் கட்டுமான பொருட்களை சேமிக்க சிறிய அளவில் ஒரு அறையை நமது மனையிலோ அல்லது பக்கத்திலோ நாம் உருவாக்குவோம். இது அமையும் திசையும், நம் கட்டிட தேவைகளுக்காக ஒரு நிலத்தடி நீர் தொட்டி தேவைப்படும்போது அதற்காக செப்டிக்டேங்க்கை முதலில் கட்டுதல் போன்றவை வீடு பாதியில் நிற்பதற்கான சில காரணங்களாக கொள்ளலாம்.

- ✓ பணம் இருக்கிறது என்பதால் எல்லோராலும் எல்லா நேரங்களிலும் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க முடியாது. காரணம், 'இதனை இவன் கண் விடல்' என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப ஒவ்வொரு செயல்களையும் சிறப்பாக செய்ய ஒவ்வொருவருக்கும் அந்த துறையில் தனித்தன்மை உண்டு. அதை ஆராய்ந்து அவர்களிடம் விடும்போது அந்த பணியை நாம் சிறப்புற செய்ய முடியும்.

- ✓ ஒரு நகரத்தின் அடையாளமே அந்த நகரில் அமைந்துள்ள உயர்ந்த கட்டிடங்களில் பெரிய கட்டிடங்களையும் அடையாளமாக காண்பர். ஆனால், இதையெல்லாம் செய்து முடிக்க தலைசிறந்த பொறியாளர்கள் மட்டுமல்லாமல் முதலில் அச்சாணியாக திகழ்வது வாஸ்து நிபுணர்கள் ஆகும்.

- ✓ உங்களிடத்தில் பணம் இருக்கலாம். கட்டுமானத்திற்கு தேவையான பொருட்கள் இருக்கலாம். வேலை செய்ய ஆட்களும் தயாராக இருக்கலாம். ஆனால், எங்கு தொடங்குவது? எப்படி தொடங்குவது? என்ற ஐயத்தில் ஆண்டுகள் பல கடந்திருக்கலாம். உங்கள் வீட்டு கட்டிடப்பணி தீர்வு பெறவும், புதிதாக தங்களுக்கென்று வீடு கட்ட ஒரு சிறந்த அனுபவமிக்க வாஸ்து நிபுணர்கள் தங்களுக்கான தக்க ஆலோசனைகளை வழங்கும்போது தாங்கள் சிறப்பானதொரு வீட்டை அமைத்து கொண்டு நல்லதொரு வாழ்வை வாழலாம்.

## குடும்பத்தில் உள்ள குழந்தைகள் காதல் வயப்பட வாஸ்து காரணமாகுமா?

- ✓ பத்து மாதம் சுமந்து கற்பனைகளுடனும், கனவுகளுடனும் ஈன்றெடுத்த குழந்தைகளை பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி, பார்த்து பார்த்து கல்லூரி வரை வளர்த்த பின்னர் காதல் என்ற வலையில் சிக்கியபின் குடும்பத்தை விட்டு பிள்ளைகள் விலகும்போது, குடும்பம் எண்ணிலடங்கா துயரங்களை அடைகிறது.

- ✓ மேலும், குடும்ப கௌரவமும் பாதிக்கப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வுகள் நடக்க காரணம் நமது வீடுதானா?

- ✓ பிறந்தோம், வளர்ந்தோம் என்பதை விட வாழும் நாட்களில் எவ்வாறு வாழ்ந்தோம் என்பதுதான் கேள்வி. அனைவருமே வரலாறு படைப்பவர்களாக இருக்கிறோமா? ஒரு சிலரால் மட்டுமே வரலாறு படைக்கப்படுகிறது. இந்த வரலாறு படைப்பதற்கு என்ன காரணம்? என்று ஆழ்ந்து யோசித்தால் வாஸ்துவும் ஒரு காரணமாக இருக்கும்.

- ✓ அனைவருக்கும் பிறப்பும், இறப்பும் என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. விதியின் அமைப்பை யாராலும் மாற்ற முடியாது. ஆனால், நமது வீடு எனும் கட்டிட அமைப்பை நிச்சயமாக மாற்ற முடியும். காதலுக்கும், வீட்டுக்கும் சம்பந்தம் இருக்குமா? என பலர் கேட்பர்.

- ✓ நிச்சயமாக உண்டு. ஒவ்வொரு வீட்டின் அமைப்பிற்கும், ஒரு வகையான சம்பந்தம் இருக்கிறது. வடக்கு, மேற்கு சந்திக்கும் வடமேற்கு மூலை ஒரு வீட்டில் காதலை நிர்ணயிக்கும் அமைப்பாகும்.

- ✓ உங்கள் வீட்டின் அமைப்பை மாற்றுவதன் மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை சிறந்தாக மாற்ற முடியும். இதனை பலர் அனுபவப்பூர்வமாக உணர்ந்துள்ளனர்.

- ✓ உங்கள் இல்லறம் நல்லறமாக, உங்கள் வீட்டுப்பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வாஸ்து பார்ப்பது அவசியம்.

## கடன், தொழில் மற்றும் உடல்நிலை பாதிப்பு ஏற்பட வாஸ்து காரணமா?

- ✓ குடியிருக்கும் வீடுகளில் ஏதேனும் மாற்றம் அல்லது வீட்டின் அழகிற்காக பில்லர் போட்டு போர்டிக்கோ அல்லது தங்கள் வசதிக்காக கேட்டை மாற்றி அமைத்து இருப்பீர்கள். ஆகையால்தான், இதுபோன்ற திடீர் பிரச்சனைகள் எழுகின்றன.

- ✓ இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், உங்கள் வீட்டின் கிழக்கு பகுதியில் போர்டிக்கோ போன்ற அமைப்போ, படிக்கட்டோ அமைந்திருக்கலாம். மேலும், தெற்கு பகுதியில் இதுபோன்று ஏதேனும் மாற்றம் செய்திருப்பீர்கள். அதன் காரணமாகவே இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

- ✓ பல நண்பர்கள் வீட்டை அழகுப்படுத்துகிறேன் என்ற நோக்கில் அவர்கள் செய்யும் மிகச்சிறிய வாஸ்து தவறால் கூட பெரிய பாதிப்பான உயிர் சேதம் அல்லது வாகன விபத்து மற்றும் தற்கொலை முயற்சி போன்ற விஷயங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

- ✓ ஆகையால், தாங்கள் வீட்டை வாஸ்து நிபுணரின் ஆலோசனைப்படி மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்யும்போது உங்கள் வீட்டில் நல்ல நிகழ்வுகள் நடக்கும்.

## வாஸ்துவும், வேலையும்

- ✓ படிப்பு முடிந்து வேலைக்கு முயற்சி செய்பவர்களில் சிலருக்கு உடனே அவர்கள் விருப்பப்படி வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கோ அவர்கள் படித்த படிப்பிற்கும், மனதிற்கும் ஏற்ற வேலை கிடைக்காமல் சிரமப்படுவார்கள். அது ஏன்?

- ✓ ஒரே வீட்டில் இருக்கும் சகோதரர்களில் ஒருவருக்கு நல்ல வேலையோ, வாழ்க்கையோ அமைவதும் மற்றவர் பாதிக்கப்படுவதும் ஏன்?

- ✓ சிலர் வேலையில் அபரிமிதமான வளர்ச்சியும், முன்னேற்றத்தையும் பெறுவார்கள். சிலருக்கு அரசாங்க வேலையும், ஒரு சிலருக்கோ தனியார் வேலையும் அமையப் பெறுவார்கள். அது எதனால்?

- ✓ வேலையில் நிரந்தரமாக இருக்க முடியாமல் அடிக்கடி வேலை மாற்றமும், ஒரு சிலருக்கு வேலையில் சட்ட சிக்கல்கள், சிரமங்கள் ஏற்படும். அது ஏன்?

- ✓ சிலர் எப்பொழுதும் வெளியூர் செல்லும் வேலையும், மற்றவரோ நிரந்தரமான ஒரே இடத்தில் இருக்கும் வேலையும் அமையப் பெறுவார்கள். அது ஏன்?

- ✓ குடும்பத்தைவிட்டு பிரிந்து வெளியூரிலும் அல்லது வெளிநாடுகளிலும் வேலை செய்யும் சூழல் சிலருக்கு அமையப்பெறும். அது ஏன்?

- ✓ ஒரு சிலர் எந்த வேலைக்கும் செல்லாமல் இருப்பதோடு மட்டுமின்றி குடும்பத்திற்கு மிகப்பெரிய அளவில் தொந்தரவாகவும் பாரமாகவும் இருப்பார்கள். அது ஏன்?

- ✓ குடும்பத்துடன் இணக்கமாக இருந்து நல்ல முறையில் வேலை செய்து வீட்டிற்கு உறுதுணையாக இருந்தவர்கள் திடீரென குடும்பத்தை விட்டு வெளியேறி விடுவார்கள். அது எதனால்?

- ✓ ஒரு சிலர் பல பேருக்கு வேலை கொடுக்கும் திறமை மிகுந்த தொழில் அதிபர்களாகவும் இருப்பார்கள். சிலர் தொழிலாளராக அடிமை வேலையில் திறன் இல்லாமலும் இருப்பார்கள். அது ஏன்?

- ✓ இப்படியான பல கேள்விகள் வீட்டில் உள்ளவர்கள் பற்றி இருக்கும். இவற்றிற்கு ஒரே பதில் வாஸ்து பலம் உள்ள வீடு மட்டுமே.

- ✓ ஒரு வீட்டில் எந்த அளவுக்கு வாஸ்து பலம் இருக்கிறதோ அதற்கு ஏற்ப பலன்கள் அமைகிறது. மேலும், வீட்டில் சூரிய ஆற்றல் எனும் ஆக்கப்பூர்வ சக்தியானது வாஸ்துபடி ஒரு வீட்டினுள் வரும்போது அங்கு வாழ்பவர்கள் நல்ல முறையிலும் இருப்பார்கள். அந்த வீட்டில் உள்ளவர்களின் ஆரோக்கியம், தொழில், திறமை மற்றும் பணப்புழக்கம் என பல பண்புகளை தீர்மானிக்கிறது.

- ✓ அதுபோல வீட்டில் உள்ள ஒவ்வொரு திசை மற்றும் மூலையின் வாஸ்து பலத்திற்கும், வாஸ்து குறைக்கும் ஏற்ப அவர்களுடைய வேலையும், தொழிலும் அமைகிறது.

- ✓ உதாரணமாக, கிழக்கு மூடப்பட்ட வீட்டில் உள்ள ஆண்களுக்கு வேலை வாய்ப்பில் சிரமமிருக்கும். எனவே, வடக்கு மற்றும் கிழக்கு திசையில் அதிக இடம் மற்றும் வீட்டில் சூரிய ஒளி படரும் வகையில் ஜன்னல்கள் 24 மணி நேரமும் திறந்து இருப்பது வாஸ்துவின் அடிப்படை விதிகளாக உள்ளது.

- ✓ தங்களின் வீட்டில் உள்ள அமைப்பை பொறுத்து ஒரு அனுபவமிக்க வாஸ்து நிபுணர் தங்களுக்கான தீர்வுகளை வழங்குவார்.

## கோடிகளை தேடித்தரும் அமைப்பான வீடு எது?

உங்கள் வாழ்க்கையில் வீடு, பொருள், நிம்மதி அனைத்தும் அமைய உங்கள் வீடு இயற்கையோடு இயற்கையாக அமைந்து இருக்க வேண்டும்.

### ஒரு வீடு எந்த திசையில் இருக்க வேண்டும்?

- ✓ பொதுவாக மக்கள் விரும்புவதெல்லாம் வடக்கு பார்த்த வாசல் அல்லது கிழக்கு பார்த்த வாசல்.

- ✓ நமது எண்ணப்படி மனை அமைந்தால் நாம் ஆவலோடு எதிர்பார்க்கும் உச்சவாசல் சிறப்பானதொரு அமைப்பை ஏற்படுத்தும்.

- ✓ உச்சவாசலை வடக்கு பக்கமாகவும் அமைத்துக்கொள்ளலாம். கிழக்கு பக்கமாகவும் அமைத்துக்கொள்ளலாம். ஆனால், வசந்தம் நம் வாழ்வில் குறைவில்லாமல் இருக்க குறிப்பாக கோடிகள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் மனை மட்டும் அமைந்துவிட்டால் போதாது.

- ✓ ஒரு மனையில் கட்டப்படும் வீட்டில் அமைக்க வேண்டிய வாசல், அறைகளின் அமைப்பு, நான்கு பக்கமும் அமைக்கப்படும் சுற்றுச்சுவர் இவற்றையெல்லாம் சிறப்பாக அமைக்க வேண்டும்.

- ✓ மேலும், அந்த மனையின் பார்வை அல்லது தெருக்குத்து போன்றவை குறைவொன்றும் இல்லாத நிறைவான செல்வத்துடனும், ஆரோக்கியத்துடனும், ஆனந்தத்துடனும் வாழ அந்த வீட்டின் அமைப்பு வழிவகுக்கும்.

- ✓ இதில் எந்த தெருக்குத்து சிறந்தது? என்பதை நன்கு கற்றறிந்த வாஸ்து நிபுணர்களால் மட்டுமே உங்களுக்கு தெளிவுப்படுத்த முடியும்.

- ✓ இதுபோன்ற ஒரு வீட்டில் நீங்கள் வாழும்போது எண்ணிய செயல்கள் எளிதாக உங்களை வந்தடைய இயற்கை என்றென்றும் உங்களுக்கு துணை இருக்கும். தடைகள் ஏதும் வராது.

- ✓ உழைப்பிற்கு ஏற்ற உயர்வு இல்லையே என ஏங்குபவர்களும், கிள்ளி கொடுக்கும் எண்ணம் இருப்பவர்களும் இந்த அமைப்பில் இருந்தால் அள்ளிக் கொடுக்கும் ஆற்றல் வந்துவிடும்.

## புதுவீடு - வாஸ்துவும்

- ✓ வீடு என்பது நமது வசதிக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அமைக்க வேண்டும். மேலும், வீடு கட்டும்போது வாஸ்து தேவை இல்லை என்றும் சிலர் கூறுவர். ஒரு சிலர் வாஸ்துவின் உயர்ந்த உண்மை புரியாமலும், தெரியாமலும் ஏற்க மறுப்பார்கள்.

- ✓ வாஸ்து பார்த்து கட்டாத ஒரு வீட்டில் பிரச்சனை என்பது மூன்று வருடங்களுக்கு பிறகு ஆரம்பிக்கும். (அவரவர் கர்மாவை பொறுத்து இந்த காலம் நீளும்)

- ✓ உதாரணமாக, ஒரு வீட்டில் வடக்கு பகுதி மூடப்பட்ட அமைப்பாக இருந்தாலோ, வடக்கு சுவர் பொது சுவராக இருந்தாலோ, வடக்கில் உயரமான மரங்களோ, கட்டிடங்களோ இருந்தாலோ வீட்டில் வருமானம் குறைந்து போகும். அதனால் சில குடும்பங்கள் நிலைகுலையும் அளவுக்கு இருக்கும்.

- ✓ இந்த பாதிப்புகள் எதனால் ஏற்படுகிறது? என தெரியாமல் திணறும்போது கடைசியில் வாஸ்து நிபுணர் அதற்கான பாதிப்புகளையும், தீர்வுகளையும் விளக்குவார்.

- ✓ மனை என்பது உடல், மனையில் கட்டிடம் என்பது அந்த உடலுக்கு உயிர், அந்த கட்டிடத்திற்கு வாஸ்து என்பது உயிருக்கு சக்தியை போன்றது. அந்த சக்தியை பயன்படுத்தி வாழும் வாழக்கையை பொறுத்தே ஒருவருடைய உயர்வும், தாழ்வும் இருக்கும்.

- ✓ எனவே, ஒரு வீட்டின் வாஸ்துவை பொறுத்தே ஒருவருடைய ஏற்றமும், இறக்கமும் இருக்கும் எனலாம்.

- ✓ எனவே, புதிய வீடு கட்ட வாஸ்து என்பது முக்கியமான ஒன்று. அதுதான் அந்த வீட்டிற்கு நல்லவைகளையோ, தீயவைகளையோ வழங்கக்கூடியது.

- ✓ புதிதாக வீடு கட்டும் போதோ, கட்டிய வீட்டை வாங்கும் போதோ தேர்ந்த வாஸ்து நிபுணர்களின் ஆலோசனைப்படி கட்டுங்கள், வாங்குங்கள்.

## மனையடி சாஸ்திரப்படி, காலி இடங்களை வாங்கும்போது நீள அகலங்களை பார்த்து வாங்க வேண்டுமா?
## அல்லது
## வீடு கட்டும்போது மட்டும் நீள அகலம் பார்த்து கட்டலாமா?
## அல்லது
## கட்டிய வீட்டை வாங்கும்போது நீள அகலங்களை பார்த்து வாங்க வேண்டுமா?

- ✓ எலி வளையானாலும், தனிவளை சிறந்தது என்பது போல ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு என்பது அத்தியாவசியமாக இருக்கின்றது. நிறைய கனவுகளுடன், இது இங்கே இருக்க வேண்டும்? அங்கே நாம் அமர்ந்து சாப்பிட வேண்டும்? என ஆசைகளுடன் சாமானியனாக இருந்தாலும், சரித்திரம் படைக்க வேண்டும் என பலர் சத்தமில்லாமல் அதை அடைய முயற்சிக்கின்றனர்.

- ✓ அப்படிப்பட்டவர்கள் வீடுமனை வாங்கும் விஷயத்தில் கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளவேண்டும். 'சிறுகக் கட்டி வாழ் பெருக வாழ்' என்பது பெரியோர் உரைத்தது. எனவே, சிறிய மனையாக இருந்தாலும் கூட, அதில் கனக்கச்சிதமாக நம் வீட்டை அழகுற அமைத்துக் கொள்ளலாம்.

- ✓ பொதுவாக மனை/வீடு வாங்க நீள, அகலம் என்பது முக்கியமில்லை. காலி மனை வாங்க வேண்டும் எனில், சதுரம் அல்லது செவ்வகமாக இருக்கும் மனையை தேர்வு செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக, நல்ல தெருக்குத்து உள்ள மனையாகவும், சரியான திசை பார்த்தும் தேர்வு செய்ய வேண்டும். இதை படித்தவுடன் அச்சச்சோ, சதுர/செவ்வகம் இல்லாத மனையாக வாங்கிவிட்டேனே! எனக் கவலை தேவையில்லை. அதை சதுர/செவ்வகமாக மாற்றிக் கொள்ளலாம்.

- ✓ மனை எவ்வாறு சதுர/செவ்வகமாக இருக்கிறதோ, அவ்வாறே வீடு கட்டும்போதும் சதுர/செவ்வகமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இதிலும் நீள, அகலம் என்ற வரையறைக்குள் சிக்க வேண்டாம்.

- ✓ மனை எப்படியிருந்தாலும் சதுர/செவ்வகமாக சுலபமாக சரி செய்வது போல கட்டிய வீட்டை சதுர/செவ்வகமாக சுலபமாக மாற்ற இயலாது.

- ✓ எனவே, கட்டிய வீட்டை வாங்கும்போது மிக கவனம் தேவை. அது நல்ல தெருக்குத்து, உச்சவாசல், உச்ச ஜன்னல், தரையமைப்பு, தள அமைப்பு, படுக்கையறை, சமையலறை, பூஜையறை, வடக்கில் காற்றோட்டம், கிழக்கில் சூரிய வெளிச்சம், கழிவறை, குளியலறை, நீர்த்தேக்க தொட்டி என இன்னும் 100 நுணுக்கமான விஷயங்கள் அடங்கியுள்ளன.

## வாஸ்து நாளன்று அமாவாசை திதி வந்தால் பூமி பூஜை போடலாமா?

- அமாவாசை திதியில் வாஸ்துநாள் வந்தால் பூமி பூஜை போடக்கூடாது.
- அமிர்தாதி யோகங்கள் நான்கு

1.அமிர்தயோகம்

2.சித்தயோகம்

3.பிரபலிஸ்டயோகம்

4.மரணயோகம்

- இவற்றில் பிரபலிஸ்டயோகம், மரணயோகத்தில் சுபகாரியம் செய்யக்கூடாது.
- அமாவாசையன்று சந்திரன் மறைந்து விடுகிறார். மேலும் பலமின்றி இருக்கிறார்.
- அமாவாசை திதியில் செய்ய வேண்டியது முன்னோர்களுக்கு திதி கொடுப்பது, குலதெய்வ வழிபாடு செய்வது நன்று. மற்ற காரியங்கள் எதுவும் செய்யக்கூடாது.

## வடக்கு பார்த்த வீட்டிற்கு படிக்கட்டு எந்த மூலையில் வைக்க வேண்டும்?

- ✓ எந்த திசை பார்த்த வீடாக இருந்தாலும் வீட்டிற்கு உள்ளே அமைக்கும் படிகட்டு எந்த ஒரு உள் மூலையிலும் வரக்கூடாது.
- ✓ வீட்டிற்கு உள்ளே தெற்கு நடுப்பகுதி மற்றும் மேற்கு நடுப்பகுதி இவற்றில்தான் படிகட்டு அமைக்க வேண்டும். படிகட்டுக்கு கீழ் எந்த ஒரு அறையும் வரக்கூடாது.
- ✓ வெளிப்புறம் அமைக்கும் படிகட்டு வடகிழக்கு மூலையை தவிர மற்ற 3 மூலையிலும் வரலாம். வெளிப்புறம் அமைக்கும் படிகட்டு கேண்டிலிவர் (cantilever) முறையில் திறந்தவெளி படிகட்டாக இருக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் படிக்கட்டின் கீழ் டாய்லெட், பாத்ரூம் வரக்கூடாது.
- ✓ படிகட்டு தானே என்று அலட்சியமாக இல்லாமல் சற்று கூர்ந்து கவனித்து மேலே குறிப்பிட்டுள்ளது போல் சரியான முறையில் படிகட்டு அமைத்துக்கொள்ளவும்.

## வீடு கட்டுவதற்கு எந்த திசை சிறந்தது என்று கணவரின் ஜாதகப்படி பார்க்கவேண்டுமா? அல்லது மனைவியின் ஜாதகப்படி பார்க்க வேண்டுமா?

✓ நிச்சயமாக மனைவியின் ஜாதகப்படிதான் பார்க்கவேண்டும். கணவனை விட வீட்டில் அதிகமாக இருப்பது மனைவிதான். தவிர வீடு என்பது பூமி சம்பந்தமானது. பூமாதேவியே ஒரு பெண்தானே. மனையே மனைவியின் பெயரில் இருப்பது இன்னும் சிறந்தது.

## வாஸ்து முறையில்லாத வீட்டுக்கு பரிகாரம் உண்டா?

✓ சிறந்த வாஸ்து வல்லுநர்கள் பாதிப்படைந்த பகுதியை பார்த்து அதற்கேற்ற ஆலயங்களை குறிப்பிடுவர். அவ்வாறு இறைவனை சரணாகதி அடையும் பட்சத்தில் விரைவில் வாஸ்துபடி திருத்தங்கள் ஏற்படும் அல்லது நல்ல வாஸ்து பலம் உள்ள வீடு அமைந்திடும்.

## பூஜையறை மேற்கு திசையை பார்த்து வைக்கலாமா?

✓ பூஜையறை என்பது வீட்டில் நிகழக்கூடிய ஒவ்வொரு நல்ல விஷயங்களுக்கும் முக்கிய பங்கு வகிக்கும். ஆகையால், பூஜையறை என்பது கிழக்கை பார்த்து அமைத்தல் மிக சிறந்தது. அதுவும் தென்கிழக்கு பகுதியில் பூஜையறையை அமைப்பது மிகப்பெரிய நேர்மறை ஆற்றலை கொடுக்கும்.

## வடகிழக்கில் படுக்கை அறை அமைக்கலாமா?

✓ நிச்சயம் வடகிழக்கில் படுக்கையறை அமைத்தல் கூடாது. தற்சமயத்தில் ஒரு வீட்டில் இரண்டு அல்லது மூன்று படுக்கை அறையை அனைவரும் விரும்புவதால் தென்மேற்கு மூலையில் உள்ள படுக்கையறையை கணவன்-மனைவி உபயோகப்படுத்த வேண்டும். இது தவிர வடகிழக்கில் படுக்கையறை இருந்தால் அதில் வயது முதிர்ந்தவர்கள் உபயோகப்படுத்தலாம் அல்லது வீட்டில் உள்ள குழந்தைகள் படிக்கும் அறையாக உபயோகப்படுத்தலாம்.

## ஒரு குடும்பத்தில் ஆண்மகன் குடிப்பழக்கத்திற்கு ஆளாவதற்கும், வாஸ்துவுக்கும் தொடர்பு உள்ளதா?

✓ இன்றைய காலக்கட்டத்தில் ஆண்கள் குடிக்கவில்லை என்பது தான் ஆச்சரியமான விஷயமாக கருதப்படுகிறது.

✓ ஒரு குடும்பத்தில் உள்ளவருக்கு குடிப்பழக்கம் இருக்க நிறைய காரணங்கள் இருக்கும். வம்சாவளியாக தொடர்வது அதாவது தாத்தா, அப்பா, பேரன் அதுபோன்று அடுத்த

அடுத்த தலைமுறை பாதிக்கப்படுவது எனலாம். ஒரு வீட்டில் வடமேற்கு அல்லது தென்மேற்கு பாதிக்கப்படும் எனில் நிச்சயம் ஆண்மகன் குடிப்பழக்கத்திற்கு ஆளாக நேரிடும்.

- ✓ ஒரு ஆண்மகன் குடிப்பதற்கு முக்கியமான காரணம் அவன் குடும்பத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள் மற்றும் உறவுகளுடனான பாதிப்பு, மேலும் அவருடைய தொழிலில் ஏற்படும் தோல்வியும், நட்பில் ஏற்படும் ஏமாற்றங்களும் கூட குடிப்பதற்கு காரணமாக உள்ளது.

- ✓ குடிப்பவர்களின் அனைவரது வீடுகளிலும் வாஸ்து பாதிப்பு இருக்குமா? என்றால் நிச்சயமாக கீழ்க்கண்ட ஏதாவது ஒரு திசையில் வீட்டின் அமைப்பு இருக்கும்.

- ✓ உதாரணமாக, எந்த ஒரு வீட்டில் வடமேற்கு நீண்டு இருந்தாலோ அல்லது வடமேற்கு மூலை ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டு இருந்தாலோ இதுபோன்ற விளைவுகளை ஏற்படுத்தும்.

- ✓ அதுபோல தென்மேற்கு பள்ளமாக இருப்பது அல்லது அழகிற்காக ஒரு சில வளைவுகள் அமைத்தல் போன்ற அமைப்புகள் பாதிப்புகளை ஏற்படுத்தும் என கூறலாம்.

- ✓ ஆண்கள் குடிப்பழக்கத்திற்கு ஆளாகும்போது குடும்ப உறவுகள் பாதிக்கப்படுவதோடு அல்லாமல் அவர்களின் உடல் நிலையும் பாதிக்கப்பட்டு, வீண் மருத்துவ செலவுகளும் ஏற்படுகிறது.

## மன ஆரோக்கியத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் வாஸ்துவிற்கும் சம்பந்தம் உண்டா?

- ✓ 'ஆரோக்கியமே செல்வம்' என்பது எக்காலத்திற்கும் பொருந்தும். கோடி கோடியாய் பணம் வைத்திருக்கும் நபர்களில் எத்தனை பேரால் மனதார, வயிறார சாப்பிட முடிகின்றது?

- ✓ காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கும்போது உடலின் வெளிப்பகுதி பகட்டாய் மின்னினாலும் உள்ளே ஆயிரமாயிரம் முட்கள் குத்திக்கொண்டே இருப்பதை பார்க்கலாம்.

- ✓ 'மன உளைச்சல்', எப்பேற்பட்ட ஆரோக்கியமான மனிதனையும் அசைத்துப்பார்த்து விடும். அந்த மன உளைச்சலை கொடுப்பது வீடாகவோ, அலுவலகமாகவோ, நண்பர்களாகவோ, வேலையாட்களாகவோ இருக்கலாம். யாரால் வந்தாலும் இந்த மன உளைச்சல், ஆரோக்கியமான உடலை, அவர்களுக்கே தெரியாமல் சிறிது சிறிதாக கரையான் புற்று போல் அரிக்க ஆரம்பித்து விடும்.

- ✓ நம் வீட்டின் ஒவ்வொரு மூலையும் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தோடு தொடர்புடையது. குறிப்பாக பிரம்மஸ்தானமும் இதில் முக்கிய பங்காற்றுகிறது.

- ✓ ஒரு வீட்டின் பிரம்மஸ்தானம் உயர்ந்தோ, தாழ்ந்தோ, பள்ளமாகவோ, மேடாகவோ இருக்கும்போது அதற்கான விளைவுகளை அங்கு வாழும் குடும்ப உறுப்பினர்கள் சந்திக்கின்றார்கள்.

- ✓ மேலும் வீட்டின் கிழக்கு பகுதி மூடப்பட்டு மேற்கில் அதிக காலியிடம் இருப்பது மன ரீதியான குறிப்பாக வீட்டில் உள்ள ஆண்களின் மூளை நரம்பியல் பிரச்சனைகள் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

- ✓ எனவே ஆரோக்கியம் என்பது மனதிலிருந்து ஆரம்பிக்கின்றது. அந்த மனம் நலமாக, 'நல்ல எண்ணங்கள்' தேவை. அந்த எண்ணங்கள் உதிக்கும் இடம் நாம் நடமாடும் வீடு, அலுவலகம், கோவில்... இவை எல்லாம் தான்.

- ✓ கோவிலுக்கு சென்றால் நமக்கு கிடைக்கும் நிம்மதி ஏன்? மற்ற எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை என்பதை சிந்தித்து பார்த்து செயலாற்றும்போது வாஸ்துவின் உண்மை புரியும்.

## வீட்டில் மூத்த குழந்தைக்கு திருமணம் ஆகாமல் இரண்டாவது குழந்தைக்கு முதலில் திருமணம் நடந்துவிட்டது. இதற்கும் வாஸ்துவிற்கும் சம்பந்தம் உண்டா?

- ✓ இவ்வுலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் காரண, காரியத்துடனே நடக்கின்றது. கடவுள், ஒரு கதவை மூடும் முன் நூறு கதவுகளை திறந்து வைக்கின்றார் என்பது தான் உண்மை. ஆனால், எந்த கதவு திறந்துள்ளது, அக்கதவை அடையும் வழி என்ன? என்பது தான் நமக்கு புரியாத புதிராக இருக்கின்றது.

- ✓ நமது வீடு என்பது நான்கு சுவர்களால் ஆன ஒன்று, வீட்டில் வாழும் நாமும் நம்மை சுற்றி வாழும் ஒவ்வொரு ஜீவராசிகளும் ஒன்றோடு ஒன்று நுண்ணிய தொடர்பு கொண்டது. ஆம்.... மனிதர்கள் மட்டுமல்ல, அங்கு வசிக்கும் நாய், பூனை, கோழி, ஆடு, மாடு, பறவைகள், மீன்கள், செடி, கொடிகள்.... இப்படி உயிருள்ள அத்தனை ஜீவராசிகளுடனும் பின்னிப்பிணைந்து இருக்கின்றது.

- ✓ 'ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளே ஆனாலும் வாயும், வயிறும் வேறு தானே' அதுபோலவே எத்தனை குழந்தைகள் ஒரு வீட்டில் இருந்தாலும் ஒவ்வொருவர் வாழ்க்கையும் வேறு வேறு மாதிரியாகத்தான் அமைக்கப்பட்டு இருக்கும். இளைய குழந்தைக்கு முதலில் திருமணம் ஆவதற்கு ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் கிழக்கு திசையும், வடக்கு திசையும் மிக முக்கிய பங்கு ஆற்றுகிறது. இது பற்றிய தெளிவு உள்ளவர்கள் தங்களது வீட்டை இயற்கைக்கு ஒப்ப அமைத்து நலமுடன் வாழ்வர்.

- ✓ குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் வடகிழக்கில் படி அமைப்பு, முழுவதும் மூடப்பட்ட அமைப்பு போன்றவை இருக்கும்போது வீட்டின் முதல் குழந்தை, குறிப்பாக ஆண்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். திருமணம் ஆகாமல் இருத்தல், நிலையான தொழில், வருமானம் அல்லது வேலை இல்லாமை போன்ற அமைப்புகள் இருக்கலாம். மேலும் சில இடங்களில் வடமேற்கும் காரணமாக அமைகிறது.

- ✓ மேற்கண்ட விஷயங்களை அறிந்து, புரிந்து வீட்டை அமைத்து காலத்தே, முறையே நடக்க வேண்டிய விஷயங்களை நடந்தேறச் செய்வது நம் கையில் தான் உள்ளது.

## நண்பர்கள் அமைவதற்கும், வாஸ்துவிற்கும் சம்பந்தம் உண்டா?

- ✓ நம்முடன் பழகும் நண்பர்கள் வாழ்நாள் முழுவதும் நம்முடன் பயணிப்பது என்பது மிகவும் அரிது. நம் வாழ்க்கையை நாம் கூர்ந்து பார்த்தால் இது புலப்படும். சில காலக்கட்டங்களில் நகமும், சதையுமாய் இருந்தவர்கள் கூட தற்போது எந்த பேச்சுவார்த்தையும் இல்லாது இருப்பது காலத்தின் சூட்சமம்.

- ✓ சரி, நண்பர்கள் அமைவதற்கும், வாஸ்துவிற்கும் சம்பந்தம் உண்டா? எனில் நிச்சயம் உண்டு. சரியான வாஸ்து அமைப்பில் இல்லாத இடத்தில் கூடா நட்பு கூடிவிடும். பேச்சில் இனிமையும், நெஞ்சில் நஞ்சும் வைத்து பழகுபவர்கள், எதிரிகளை விட ஆபத்தானவர்கள். இவர்களை இனம் காண முடியாத அளவிற்கு நம் அறிவும் அமைந்துவிடும்.

- ✓ வீடு சரியான முறையில், சரியான இடத்தில் அமைந்தால் மட்டுமே நமது வீட்டை 'நாம்' வழிநடத்த முடியும். இல்லாவிடில் மற்றவரின் சொல்படிதான் குடும்பத்தலைவர் செயல்படுவார். இதனால் மிஞ்சுவது குடும்பத்தில் குழப்பமும், நிம்மதியின்மையுமே.

- ✓ தங்களது வீட்டின் வடமேற்கு பகுதி பாதிக்கப்பட்டிருந்தால் இது போன்ற சூழல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

- ✓ உதவி செய்வது என்பது வேறு, ஏமாளியாவது என்பது வேறு. நம்பிக்கை துரோகத்திற்கு ஆளாவதற்கும் வீட்டின் அமைப்பு மிக மிக முக்கிய பங்கு வகிக்கிறது. உழைத்து சம்பாதித்த பணத்தை, வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேமித்த பணத்தை 'உதவுதல்' என்ற பெயரில் கொடுத்து விட்டு மனநிம்மதி இல்லாமல் தவிப்பதை தவிர்க்கவும்.

- ✓ முதலில் வீட்டின் வடமேற்கு பகுதியை சரி செய்ய முயற்சியுங்கள். பின் வீடு உங்களுக்கு எல்லா வளங்களையும் பன்மடங்கு திரும்ப அளிக்கும். நீங்கள் கொடுத்த பணமும் திரும்ப உங்களை வந்தடையும்.

## ஒரு வீட்டில் ஆண்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் வாஸ்து காரணமாக அமையுமா?

- ✓ மனையின் அமைப்பு ஆண் மற்றும் பெண் என இரண்டு அமைப்புகளாக உள்ளது. ஆணுக்குரிய மனையில் பெண்கள் அதிகமாக வசிப்பதும், பெண்ணுக்குரிய மனையில் ஆண்கள் அதிகமாக வசிப்பதும் நமக்கு தெரியாமலேயே அமைந்துவிடுகிறது.

- ✓ இப்போது ஆண்கள் அதிகமாக இருக்கும் வீட்டில், ஆண் வாரிசுகள் திருமணம் ஆகாமல் இருப்பதற்கும், திருமணமான பின்பு பெண்கள் தனிக்குடித்தனம் என்று பிரிந்து செல்கிறார்கள். ஏனென்றால் அந்த வீட்டில் பெண்கள் வசிப்பதற்கான இடையூறுகள் இருப்பதினால்தான் தனிக்குடித்தனம் சென்று விடுகிறார்கள்.

- ✓ உங்களுடைய கர்மா நல்லபடியாக இருப்பதினால் கடவுளே பார்த்து அவர்களை அந்த வீட்டிற்கு வராமல் பார்த்து கொள்கிறார் அல்லது வேறு இடத்திற்கு மாற்றிவிடுகிறார். இந்த வீட்டில் இருந்தால் அவர்களுடைய வாழ்க்கைக்கு ஏதேனும் இடையூறு வரும் என்று அறிந்து இவ்வாறு நடைபெறுகிறது.

- ✓ ஒரு வீட்டில் கிழக்கில் அளவுக்கு அதிகமான காலியிடமும் மற்ற திசைகளில் வாஸ்து தவறுகளும் சேரும்போது அவ்விடத்தில் ஆண் வாரிசுகள் அதிகமாகவும், அவ்வீட்டு ஆண்கள் அதீத தன்னம்பிக்கையுடன் இருப்பது, அடுத்தவர் கூறும் நல்ல கருத்துக்களை ஏற்றுகொள்ள மாட்டார்கள். தனக்கு எல்லாம் தெரியும் என்ற மனப்பான்மையில் தவறான முடிவுகள் எடுப்பார்கள்.

- ✓ ஆகையால் உங்களது வீட்டில் தென்கிழக்கு, வடமேற்கு மற்றும் கிழக்குப் பகுதி இவற்றில் ஏதேனும் தவறுகள் இருக்கும். அதை சரி செய்யும் பொருட்டு நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இதே இல்லத்தில் வசிக்கலாம்.

## மனைவியின் உடல்நிலை குறைபாட்டிற்கு வாஸ்து காரணமா?

- ✓ வாஸ்துவிற்கும், மனைவிக்கு இருக்கும் உடல்நிலை குறைபாட்டிற்கும் தொடர்புள்ளது.

- ✓ நீங்கள் எந்த வீட்டிற்கு சென்றாலும் பெண்களை பாதிக்கக்கூடிய தென்கிழக்கு பகுதி பெரிய பாதிப்பை ஏற்படுத்தி கொண்டிருக்கிறது எனலாம். உதாரணமாக, நீங்கள் வாடகைக்கு செல்லும் வீட்டில் தென்கிழக்கில் செப்டிக்டேங்க் தொட்டிகள் அமைத்து இருப்பார்கள். இதன் காரணமாக உடல்நிலையில் பாதிப்புகள் வரலாம் அல்லது தென்கிழக்கு பகுதியை படுக்கையறையாக பயன்படுத்தி இருக்கலாம்.

- ✓ தென்கிழக்கில் படுக்கையறை அமைத்து அதில் பெண்கள் உறங்கும்போது அவர்களுக்கு மிகுந்த கோபம் உண்டாகும். அதனால் அவர்களுக்கு உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தென்கிழக்கில் சரியான அமைப்பில் சமையல்யறை இருப்பது

பெண்களுக்கு மிகவும் நல்லது. தென்கிழக்கில் குளியலறை மற்றும் கழிவறை வருவதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.

- ✓ பொதுவாக படுக்கையறை என்பது சரியான அமைப்பில் இருக்க வேண்டும். மேலும், ஏதேனும் தவறான தெருக்குத்துக்கள் வீட்டில் அமைந்திருக்கலாம். அதனால்தான் இந்த உபாதை வந்துக்கொண்டே இருக்கிறது. நீங்கள் குடியிருந்த அனைத்து வீடுகளிலுமே வடமேற்கு பகுதி சரியான அமைப்பில் உள்ளதா? என்று பார்க்க வேண்டும்.

- ✓ இதுமட்டுமல்லாமல் மனைவி மூலமாக கிடைக்கவிருக்கும் பூர்வீக சொத்தில் வடமேற்கு மற்றும் தென்கிழக்கு பாதிக்கப்பட்டிருந்தாலும், நிச்சயம் எத்தனை வீடு மாற்றினாலும் இதுபோன்ற உடல் உபாதைகள் இருந்து கொண்டே இருக்கும்.

## பணம் விரையமாவதற்கும், வாஸ்துவுக்கும் சம்பந்தம் உண்டா?

- ✓ இன்றைய உலகில் பணம் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக ஆகிவிட்டது. பணம் மிகப்பெரிய அதிர்வலைகளையும் ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக நம் வாழ்க்கையில் மாறிவிட்டது. அது நல்லதாக இருந்தாலும் சரி, தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும் சரி நீங்கள் குறிப்பிட்டது போல் வாஸ்துவுக்கும், பணத்துக்கும் நேரடி தொடர்பு உண்டு.

- ✓ நாம் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை எதற்காக செலவு செய்கிறோம் என்பதை அறியாமல் இருக்கிறோம் என்றால் அதற்கு முக்கிய பங்கு உங்கள் வீட்டில் தென்மேற்கு பகுதி தவறாகவோ அல்லது தெருப்பார்வையோ இருக்க வாய்ப்புள்ளது அல்லது குடும்ப தலைவர் பயன்படுத்த வேண்டிய தென்மேற்கு படுக்கையறை வேறு ஏதேனும் ஒரு அறையாக உபயோகப்படுத்தப்பட்டு கொண்டிருக்கலாம்.

- ✓ பணம் எப்படி விரயமாகிறது? என்று பார்க்க வேண்டும். ஒருவேளை மற்றவர்களுக்கு கடனாக கொடுப்பதோ அல்லது ஜாமீன் கையெழுத்து போன்று ஏதேனும் இருந்தால் அதுவும் விரயமே. இது நிச்சயம் உங்கள் வீட்டில் வடக்கும், மேற்கும் சந்திக்கக்கூடிய வடமேற்கு மூலையில் மிகப்பெரிய தவறு செய்திருப்பார்கள். உதாரணமாக வடமேற்கு கூரை பகுதி தாழ்வாக (Low Ceiling) இருப்பது.

- ✓ வாழ்க்கையில் பணம் என்பது மிக இன்றியமையாதது. அதுவும் நம் உழைப்பின் மூலமாக வரும் பணம் நல்ல சுப செலவுகளுக்காக செலவு செய்ய வேண்டுமே தவிர இதுபோன்ற விரைய செலவாகவும், வீண் செலவாகவும் இருக்கக்கூடாது.

### செல்வம் குறைய வேறு முக்கிய காரணங்கள் :

- ✓ வீட்டில் பெண்கள் விளக்கு ஏற்றாமல் ஆண்கள் விளக்கேற்றுவது

- ✓ குழாய்களில் தண்ணீர் சொட்டுவது

- ✓ அதிக நேரம் ஈரத்துணிகள் போட்டு வைப்பது
- ✓ வீட்டில் குறைந்தபட்ச வெளிச்சம் இல்லாமல் மின்சாரம் சேமிப்பது
- ✓ வீட்டில் ஒட்டடைகள் சேர்வது
- ✓ சூரிய மறைவுக்குப் பின் வீட்டை பெருக்குவது, துடைப்பது
- ✓ தேவைக்கு அதிகமான பொருட்களை வீட்டின் பரண் மேல் வைத்திருப்பது
- ✓ உணவு பொருட்களை வீணடிப்பது
- ✓ மேற்கண்ட தவறுகளையும், மேலும் சில வாஸ்து தவறுகளையும் திருத்துவதன் பயனாக நல்ல செல்வ செழிப்புடன் வாழ்வீர்கள்.

## நிரந்தர வேலை மற்றும் திருமணத்தில் தடை.... இதற்கு வாஸ்து தீர்வாகுமா?

- ✓ வேலை கிடைப்பது என்பது குதிரை கொம்பாகி போன காரணத்தால் நிரந்தர வேலை என்பது மிகவும் அரிதாகிவிட்டது. வேலை கிடைப்பதற்கு முதலில் நாம் நம்முடைய எண்ணங்களை சரியாக வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அது அவ்வளவு எளிதல்ல.
- ✓ எவ்வளவுதான் தன்னம்பிக்கை கதைகள், பேச்சுக்களை நாம் கேட்டாலும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாய் விரக்தியும், கவலையும், ஏக்கமும் ஓடிவந்து நம்மை ஒட்டிக்கொள்ளும். இதிலிருந்து மீள முதல் வழி 'இயற்கை' மட்டுமே.
- ✓ சூரியனும், சந்திரனும் சரிவர இயங்கினால் கோள்கள் ரீதியாகவும், வாஸ்து ரீதியாகவும் ஒரு மனிதன் சிறப்பான நிலையை அடைய முடியும்.
- ✓ வசிக்கும் வீட்டின் வடக்கு, கிழக்கு, வடகிழக்கு மூலை மற்றும் தென்மேற்கு மூலை போன்றவற்றை பலமுள்ளதாய் ஆக்கிக் கொள்வது அறிவாளிகளின் செயலாகும்.
- ✓ அடுத்து வேலை கிடைத்தால் எவ்வளவு ஆர்வமாகவும், ஆனந்தமாகவும் இருப்போமோ அதுபோன்ற மனநிலையில் எல்லா நேரமும் உலா வர வேண்டும். இந்த மனநிலையே வாஸ்து பலம் பொருந்திய வீட்டை நாம் அமைத்துக் கொள்ள வழிவகை செய்யும்.
- ✓ மேலும் ஒரு வீட்டின் வடக்கு பகுதியோ, கிழக்கு பகுதியோ மற்றும் தென்மேற்கு பகுதியோ வாஸ்து விதிப்படி அமையவில்லை என்றால், நிச்சயமாக நிரந்தர வேலை அமைவது கடினமானதாகும்.

- ✓ ஒரு மனிதனுக்கு வேலையும், திருமணமும் வாழ்க்கையின் முக்கியமான அம்சமாகும். வீட்டில் வடகிழக்கும், தென்கிழக்கும் மேற்கண்ட இரண்டிலும் தடையை ஏற்படுத்தும்.

1. அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்.

2. நேர்த்தியான, சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும்.

3. நல்லதே நடக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் போன்ற வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும்.

4. விழாக்களில் கலந்து கொள்வது, குடும்பத்துடன் சுற்றுலா சென்று வருவது.

5. விருப்பமான கோவிலில் திருமணம் நடைபெறும் என்ற எண்ணத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

- ✓ இவற்றை கருத்தில் கொண்டு நாம் வாஸ்துபடி வீட்டை அமைத்து கொள்ளும்போது வேலை வாய்ப்பும், திருமணமும் விரைவில் நடக்கும்.

## வாடகைக்கு என வீடு கட்டுவது சரியா தவறா?

- ✓ அந்தக் காலத்தில், வீடுன்னா 'வெளிச்சமா இருக்கணும்', 'காற்றோட்டமா இருக்கணும்' என்றார்கள். இப்போது '24 மணி நேரமும் லைட் போட்டுக்கிட்டே இருக்கணும்ங்கற மாதிரிதான் வீடு இருக்கு'. 'ஜன்னல திறந்து வைச்சா, நல்ல வெளிச்சமும் நிறைய காத்தும் வருதோ இல்லையோ? நிறைய கொசு உள்ளே வந்துரும்' ஜன்னலை மூடிடு என்பதுதான் இன்றைய நிலவரம். அந்த அளவிற்கு காலி இடமே இல்லாமல் வாடகைக்காக மட்டுமே வீடு கட்டும் நிலை உள்ளது.

- ✓ வாடகை என்ற வலையில் சிக்கியுள்ளவர்களுக்கு, ஒரு வீட்டினை அமைக்கும்போது போதுமான அளவில் வெளிச்சமும், காற்றோட்டமும் இருக்குமாறு அமைக்க வேண்டும். இடம் இருக்கிறதே என்று மொத்த இடத்திற்கும் கட்டி, வெளிச்சம், காற்றோட்டமின்றி கட்டினால் மன உளைச்சலுக்கும், நோய் பாதிப்புக்கும் ஆளாகக்கூடும்.

- ✓ முக்கியமாக வடக்கு, கிழக்கு காலியிடம் என்பது அதி அத்தியாவசியமானது. பணம் இருந்தும் நோயை தீர்க்க முடியாமல் பலர் மருத்துவமனைக்கு செல்கிறார்களே தவிர, வீட்டை கவனிக்க தவறுகிறார்கள். வாடகைக்கு விடும் பகுதியானது நம் வீட்டின் ஒரு பகுதியாகவே இருக்கும். அந்த பகுதியை பொறுத்தவரை உங்களுக்கு வெட்டுப்பட்ட அமைப்பாகவே இருக்கும்.

- ✓ குறிப்பாக வடமேற்கு, தென்மேற்கு பகுதியில் வாடகைக்காக நீங்கள் அனுமதிக்கும்போது உங்களது அதிகார பலம் குறைந்துவிடும். உங்கள் வீட்டு

அறைக்குள் உங்கள் குடும்ப உறுப்பினர்களை தவிர வேறு எவரேனும் எப்படி தங்க முடியாதோ? அதுபோலவே உங்கள் வீட்டு சுற்றுச்சுவருக்குள் வீடும் இருக்க வேண்டும். வீடு கட்டும்போது உங்களுக்காக, தேவையான அளவு மட்டும் கட்டுங்கள். சிறுகக் கட்டி பெருக வாழுங்கள்.

## குழந்தைகள் படிப்பில் கவனமின்றி இருப்பதற்கு வாஸ்து காரணம் வகிக்குமா?

- ✓ பிள்ளைகள் நன்றாக படிப்பதற்கு வாஸ்து ஒரு மிகப்பெரிய பங்கு வகிக்கும்.

- ✓ ஒரு வீட்டில் வடக்கும், கிழக்கும் எப்பொழுதும் 24 மணி நேரமும் திறந்தே இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு, வீட்டின் வடகிழக்கு பகுதியில் படிப்பதற்காக ஒரு அறை நிச்சயம் அமைத்து தர வேண்டும். அந்த அறையில் வடக்கில் கிழக்கு ஒட்டியும், கிழக்கில் வடக்கு ஒட்டியும் ஜன்னல்கள் அமைக்க வேண்டும்.

- ✓ வடக்கு மூடப்பட்டிருந்தால் கல்வி தடைபடும். முக்கியமாக முதல் குழந்தையை பாதிக்கும். வடகிழக்கு மூலை சரியில்லை என்றால் எதிர்மறை எண்ணங்கள் தோன்றி, தோல்வியை சந்தித்து பிறகு தன்னம்பிக்கையும் இழக்க நேரிடும்.

- ✓ கிழக்கு மூடப்பட்டால் குழந்தைகளுக்கு நேரம் ஒதுக்காமல் பணத்தையும் வீணாக்குவார்கள்.

- ✓ தென்மேற்கு பாதிப்பு இருந்தாலும் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படும். வடக்கு மற்றும் கிழக்கு பாதிப்பு இருந்தால் உயர்கல்வி முடிப்பதற்கு தாமதமாகும் (Arrears இருக்கும்).

- ✓ வடகிழக்கில் படிக்கட்டு இருந்தால் தந்தைக்கும், மகனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படும். வடமேற்கு பாதிப்பால் குழந்தைகளுக்கு mental depression, ஹாஸ்டலில் தங்கி படிக்கும் நிலை, வடகிழக்கு பாதிப்பால் எல்லாவற்றுக்கும் மற்றவர்களை எதிர்பார்த்திருப்பது, எதிர்த்துப் பேசுதல், வீண் பேச்சுகள், சோம்பேறித்தனம், உடல் உபாதைகள் மற்றும் படிப்பில் ஆர்வமின்மை ஏற்படுத்தும்.

- ✓ குழந்தைகளுக்கு தேவையானவை கொடுத்துவிட்டோம். எங்களுக்கு எந்த பிரச்சனை வந்தாலும் நாங்கள் குழந்தைகளின் சௌகரியத்திற்கு குறையில்லாமல் வைத்துள்ளோம். ஆனால், அவர்கள் அவர்களுடைய கடமையை செய்ய தவறுகிறார்கள் என்று வருந்தும் பெற்றோர்கள், ஒரு நல்ல வாஸ்து நிபுணரை அழைத்து வீட்டை சரி செய்து கொண்டால் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு வளமான வாழ்க்கை தருவதற்கு அவர்களை தயார்படுத்தி கொள்வார்கள்.

## வணிகத்திலும், வாழ்க்கையிலும் வெற்றிபெற என்ன செய்ய வேண்டும்? வீட்டை மாற்றியமைத்தால் சரியாகுமா?

- ✓ நீங்கள் எந்த தொழிலை செய்தாலும் அதில் நேர்மை, அர்ப்பணிப்பு, ஈடுபாடு, ஒழுக்கம், தன்னை புதுப்பித்து கொள்ளும் திறன், பொருளின் திறன், தரம், பிரச்சனைகளை எதிர்கொள்ளும் திறன், வாடிக்கையாளரின் தேவை மற்றும் சிறிது புத்திசாலித்தனம் என அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்க வேண்டும்.

- ✓ இந்த திட்டமிடல் வீட்டிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. வீட்டிற்கு சென்றாலே எரிச்சல், மனைவியின் நச்சரிப்பு, குழந்தைகளின் தொல்லை, பெரியவர்களின் அறிவுரை என நீங்கள் வெறுத்தால், எவ்வாறு நிம்மதியாக தூங்க முடியும்? குடும்பத்தினர் எப்படி நிம்மதியாக இருப்பர்? இது அடுத்த நாளுக்கான திட்டமிடலை செய்யாமல் போய்விடும். இதுமாதிரியான குறைகளை சொல்பவர்களின் வீடுகள் வடக்கு, கிழக்கு மூடப்பட்டும், தென்மேற்கு கழிவறை மற்றும் தென்கிழக்கு படுக்கையறை என இருக்கும். இதை முறைப்படி சரிசெய்தாலே போதும்.

- ✓ எனவே, வணிகத்தில் வெற்றி பெற உழைப்பு முக்கியம்தான். ஆனால், அதிக உழைப்பு என்று சொல்லி உங்கள் உடல்நலனை கெடுத்துக் கொள்ளக்கூடாது. தேவையான உழைப்பும், அளவான தூக்கமும், குடும்பத்தினருடன் செலவிட போதுமான நேரம் என இருந்தாலே போதும். இதுவே வணிகத்திலும், வாழ்க்கையிலும் வெற்றியை தரும். வீடு வேறு, வணிகம் வேறல்ல. வீட்டை கவனித்தாலே, வணிகம் வசப்படும்.

- ✓ எனவே, வீட்டை கவனியுங்கள். அனைவரிடமும் மனம் விட்டு பேசுங்கள். வெற்றி தோல்விகளை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுங்கள். நீங்கள் உங்கள் வீட்டாரால் மதிக்கப்படுவீர்கள். அதன்பின் பாருங்கள், உங்கள் வெற்றியை..! எவராலும் நெருங்க இயலாத உயரத்தில் இருப்பீர்கள்.

## அதிர்ஷ்டமான வாழ்விற்கு வாஸ்து அவசியமா?

- ✓ இந்த பிரபஞ்சமே நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்சபூதங்களால்தான் இயங்கி வருகிறது. ஒருவர் வீடு கட்டுவதற்காக இடத்தை தேர்வு செய்யும்போது, அந்த இடத்தில் பஞ்சபூதங்களின் ஆளுமை எப்படி அமைந்துள்ளது? அந்த அமைப்பானது அந்த இடத்தில் வளர்ச்சியை உண்டாக்குமா? என்பதையெல்லாம் கணித்து சொல்வது தான் வாஸ்து.

- ✓ 'காலமெல்லாம் கஷ்டப்பட்டு வாங்கிய ஓர் இடம் சரியாக அமைய வேண்டுமே...' என்ற கவலையும் நியாயமானதுதான். ஆனால், தேவையற்ற செலவுகளை வைக்கும் விஷயமாக வாஸ்து சாஸ்திரம் இருக்கக்கூடாது என்பதும் பலரின் விருப்பமாகவும், எதிர்பார்ப்பாகவும் உள்ளது. எனவே, அவர்களுக்கு தெளிவு ஏற்படுத்த நினைத்து,

எப்படிப்பட்ட நிலத்தை வாங்கலாம். அங்கு எப்படி வீடு கட்டலாம்? என்பது போன்ற அடிப்படை வாஸ்து விஷயங்கள் பற்றி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

- ✓ அந்த வகையில் 'நீங்கள் வாங்கும் நிலம் செவ்வகமாக இருப்பது நல்லது. ஒருவேளை அது செவ்வகமாக இல்லை என்றால், அதற்கு உரிய வாஸ்து விஷயங்களை அமைத்து வீடு கட்டலாம். நீங்கள் வாங்கும் நிலத்தில் வடகிழக்கு மூலையைவிட, தென்மேற்கு மூலை உயர்ந்து இருக்க வேண்டும். அதுவே நல்ல இடமாகும். அந்த நிலத்தில்தான் நல்ல வளர்ச்சியும், நல்ல நீரோட்டமும் இருக்கும் என்பது உண்மை.

கிழக்கு பகுதியில் முக்கியமாக கவனிக்க வேண்டியவைகள் :

- ✓ மிக உயரமான கட்டிடங்கள், மலை, குன்று போன்றவை இல்லாமல் இருப்பது
- ✓ போர்டிக்கோ அமைப்பு மிக நீளமாக இல்லாமல் இருத்தல்
- ✓ சூரியஒளி படும்படியான அமைப்பு
- ✓ உயரமான மரங்கள் இல்லாமல் இருப்பது
- ✓ மேலும், வடகிழக்கில் கிணறு, நிலத்தடி நீர்த்தேக்க தொட்டி, போர்வெல் போன்ற அமைப்புகள் இருப்பது.
- ✓ இதுபோன்ற மேலும் சில விஷயங்களை கவனத்தில் கொண்டு நாம் நமது வீட்டை அமைக்கும்போது சிறப்பான வாழ்வு அமையும்.

## வாடகை வீட்டில் வசிப்பவர்கள், வாஸ்து பலத்துடன் சொந்த வீடு அமைய என்ன செய்யலாம்?

- ✓ தற்போது குடியிருக்கும் வீட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு போன்ற பகுதிகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அங்கு எந்த பொருட்களையும் வைக்கக்கூடாது.
- ✓ வீட்டின் வடக்கு, கிழக்கு ஜன்னல்களை திறந்தால் நல்ல காற்றோட்டமும், வானமும் தெரிய வேண்டும். குறைந்தது மூன்று அடி காலி இடம் இருக்க வேண்டும்.
- ✓ வாடகை வீடாக இருந்தாலும் தென்மேற்கில் சமையலறை இருக்கக்கூடாது. அங்கு படுக்கையறை மட்டுமே இருக்க வேண்டும்.

- ✓ வீட்டின் சுவர்களில் போட்டோக்களை வைக்கலாம். நேர்மறையான எண்ணங்களுடன் இருப்பது, நல்ல வார்த்தைகளை பேசுவது போன்றவை மிகவும் நன்மைகள் தரக்கூடியது.

- ✓ தற்போது குடியிருக்கும் வீட்டில் வாஸ்து தவறுகள் இருந்தாலும் அதற்குண்டான நிவர்த்தி தரக்கூடிய கோவில்களுக்கு சென்று வரவேண்டும்.

- ✓ நாம் ஒரு சில வீடுகளில் குடியேறிய உடன் நன்றாக இருப்பதாக உணர்ந்தால் அந்த வீடு வாஸ்து பலத்துடன் இருக்கும். அதனால் நமக்கு சொந்த வீடு பாக்கியம் உண்டாகும்.

- ✓ வீடு கட்ட வாங்கும் மனை சிறந்த அமைப்பில் உள்ளதா? என அறிந்து வாங்குதல் நன்று. பூமியை பெண் வடிவாக போற்றப்படுவதால் நிலத்தை பெண்கள் பெயரில் வாங்குவது சிறப்பு.

- ✓ இது வீட்டில் உள்ள ஆண்களின் ஆயுளை அதிகரிக்கும். வீடு கட்ட துவங்கும் முன் வீட்டிற்கான வரைபடம் வாஸ்துபடி உள்ளதா? என அறிந்து நமது முன்னோர் வாக்குப்படி 'சிறுக கட்டி பெருக வாழ்' என நமக்கான ஒரு சிறந்த வீட்டை அமைத்து கொள்வது சிறப்பு.

## வாஸ்துபடி அமையாத படிக்கட்டினால் ஏற்படும் பாதிப்புகள்

- ✓ ஒரு இடத்திற்கு தலைவாசல் அமைப்பதில் எந்த அளவுக்கு கவனம் செலுத்துகிறோமோ அதேபோல்தான் ஒரு கட்டிடத்திற்கு படிக்கட்டு அமைக்கும்போது மிகவும் கவனமாக திட்டமிட வேண்டும்.

- ✓ பெரிய அளவில் பணத்தை முதலீடு செய்து கனவு இல்லத்தில் அனைத்தையும் சரியாக வாஸ்துபடி அமைத்துவிட்டு, படிக்கட்டு வாஸ்து முறைப்படி அமைக்காவிட்டால் பல இன்னல்களை சந்திக்க நேரிடும்.

- ✓ வீட்டின் உள்ளே படிக்கட்டு அமைக்கும்போது, தெற்கு அல்லது மேற்கு நடுப்பகுதியில் தான் படிக்கட்டு வரவேண்டும்.

- ✓ சில பேர் ஃபேஷனுக்காக பிரம்மஸ்தானத்தில் படிக்கட்டு அமைத்து விடுவார்கள். அது பல பெரிய தவறான விளைவுகளை ஏற்படுத்தும் என விழிப்புணர்வு இல்லாமல் இப்படி செய்கிறார்கள்.

- ✓ ஒரு வீட்டின் வெளிப்புறத்தில் படிக்கட்டு அமைக்க விரும்பினால் அதனை தென்கிழக்கு, தென்மேற்கு மற்றும் வடமேற்கு மூலையில் திறந்தவெளி படிக்கட்டாக கேண்டிலிவர் முறையில் மட்டுமே அமைக்க வேண்டும். அதுவும் வடகிழக்கு பகுதியில்

படிக்கட்டு வரவே கூடாது. அது வீட்டின் முன்னேற்றத்திற்கே முட்டுக்கட்டை ஆகிவிடும். பிள்ளைகளின் வேலை, படிப்பு, திருமணம் போன்ற நிகழ்வுகளில் பாதிப்பை ஏற்படுத்தும். வெளிமூலை படிக்கட்டிற்கு கீழே அறைகள் வரக்கூடாது. பில்லர் அமைப்புடன் இருக்கக்கூடாது.

- ✓ படிக்கட்டுகள் தாய் சுவரையோ, தந்தை சுவரையோ சார்ந்து இருக்கக்கூடாது. ஒவ்வொன்றும் அதற்குரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

- ✓ இந்த விதி தொழிற்சாலை, வியாபார ஸ்தலம், வீடு, திருமண மண்டபம், பள்ளிக்கூடம், உணவகம் அனைத்திற்கும் பொருந்தும்.

- ✓ பொதுவாக வாஸ்துவில் படிக்கட்டு என்பது வாஸ்து பலம் குறைவை உண்டாக்கும் அமைப்பு. ஆனால், இக்காலத்தில் படிக்கட்டு இல்லாமல் வீடு கட்ட முடியாது. அதை எப்படி கட்டினால் நல்லது? என்று ஆலோசனைப்படி செய்தால் அதன் கெடுபலனை தவிர்த்து, முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துக் கொள்ளலாம்.

## வாஸ்துவிற்கும், பணத்திற்கும் நேரடி தொடர்பு உள்ளதா?

- ✓ ஒரு வீடு அல்லது தொழில் செய்யும் இடம் வெறும் செங்கல், மணல் போன்ற கட்டுமான பொருட்களில் மட்டும் கட்டப்படுவதில்லை. அவர்களது இதயத்தில் காட்சிப்படுத்தி அதில் பெறும் சந்தோஷத்தினால் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு கட்டப்படும் ஒரு அழகிய அமைப்பு ஆகும்.

- ✓ ஒரு வீடு அல்லது தொழில் கூடம் ஒருவருக்கு பொருத்தமாக அமைந்துவிட்டால் அதுபோல அவரை உயர்த்தி வாழ வைக்கக்கூடியதும், அதுவே தவறாக இருக்கும்பட்சத்தில் மிகப்பெரிய மோசமான நிகழ்வுகளை மிக அமைதியாக நிகழ்த்தும் சக்தி கொண்டது. மேலும், அதனை அவர் உணர்வதற்குள் அனைத்து தீமைகளும் நடந்தேறிவிடும். பிறகு இப்படி நிகழ்ந்துவிட்டது என்று புலம்புவதாக இருக்கும்.

- ✓ ஒரு வீட்டில் கிழக்கும், வடக்கும் பலம் பெற்றிருந்தால் பணமும், மனமும் சம்பந்தமாக நல்ல சம்பவங்கள் தினமும் நிகழ்த்தி அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கும்.

- ✓ உதாரணமாக ஒரு வீட்டில் கிழக்கிலும், வடக்கிலும் அதிகமான காலியிடம் மற்றும் ஜன்னல்கள் இருந்தால் லட்சுமி அதிர்ஷ்டத்தை கொடுத்துக்கொண்டே இருப்பாள். மேலும், அவர்களின் மகிழ்ச்சி எல்லையற்றதாக இருக்கும். அதுவே ஒரு வீட்டில் தென்மேற்கு பகுதியில் ஏதேனும் தவறு இருந்தால் பணம் மற்றும் உறவுகள் அதிகப்படியாக பாதிக்கும்.

- ✓ உதாரணமாக, வீட்டில் சமையலறை அல்லது கழிவறை தென்மேற்கில் இருந்தாலோ அல்லது தொழில் கூடங்களில் தவறான பார்வை அல்லது தெருக்குத்து இருக்கும் பட்சத்தில் பணமுடக்கம், பணவிரயம் அதிகப்படியாக ஏற்படும்.

- ✓ இதுபோன்று ஏதேனும் குறைகள் உங்கள் வீட்டிலோ, தொழில் கூடங்களிலோ இருக்குமேயானால் அதை சரிசெய்து மகாலட்சுமியின் துணையுடன் தொழில் மேன்மை பெற்று செல்வ செழிப்புடன், குடும்ப உறவுகளுடன் மகிழ்ச்சியாக வாழுங்கள்.

## வீட்டில் வாஸ்து குறைபாடு இருந்தால் அந்த வீட்டில் குழந்தைகள் பாதிக்கப்படுவார்களா?

- ✓ தாய்க்கு குழந்தை என்பது அவன்/அவள் சிறு வயது முதல் திருமணம் ஆகும் வரை குழந்தைதான். ஆகையால் ஒவ்வொரு திசையும் ஒவ்வொரு நிலையில் குழந்தைகளுடைய வாழ்க்கையில் நன்மை, தீமையை தீர்மானிக்கிறது.

- ✓ குழந்தைகளுக்கு படிப்பு தடைபடுதல் அல்லது பாதிப்படைதல் போன்று ஒரு வீட்டில் இருந்தால் நிச்சயம் அந்த வீட்டில் வடகிழக்கு, வடக்கும், கிழக்கும் பாதிக்கப்பட்டிருக்கும்.

- ✓ உதாரணமாக வடகிழக்கில் படிக்கட்டு அல்லது கழிவறை போன்று ஏதேனும் இருக்கும் பட்சத்தில் குழந்தைகளுக்கு படிப்பு முற்றிலும் பாதிக்கும். அதேபோல் குழந்தைகளுக்கு எதிர்மறையான சிந்தனைகள் தோன்றும்.

- ✓ அதேபோல் படித்து முடித்துவிட்டு வேலைக்கு செல்லும் வயது வந்த பிறகு வேலை கிடைக்காமல் இருப்பது அல்லது நிரந்தர வேலை அமையாமல் இருப்பது மற்றும் தீய நண்பர்களுடன் சேர்ந்து தீய பழக்கங்களுக்கு அடிமையாவது போன்ற விஷயங்களால் குழந்தைகள் பாதிக்கப்பட்டால் அந்த வீட்டில் வடகிழக்கிலும், வடமேற்கிலும் ஏதோ ஒரு தவறு நிச்சயம் இருக்கும்.

- ✓ அடுத்ததாக நல்ல வேலை கிடைத்து பிறகு திருமணம் என்று வரும்போது திருமணத்தடை அல்லது காதல் விவகாரங்களில் மாட்டிக்கொள்வது.

- ✓ ஏதேனும் சூழ்நிலை காரணத்தால் அந்த வீட்டில் வடமேற்கு திசையும், கிழக்கு திசையும் பாதிக்கப்பட்டிருக்கும்.

- ✓ உதாரணமாக ஒரு வீட்டில் வடமேற்கு அறையில் குழந்தைகள் உறங்குவது மற்றும் தென்கிழக்கில் படுத்து உறங்குவது போன்று ஏதேனும் இருப்பின் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படும்.

- ✓ இப்படி ஒவ்வொரு கட்டங்களில் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். அதேபோன்று ஒவ்வொரு திசையும் ஒவ்வொரு குழந்தைகளையும் பாதிக்கும்.

- ✓ வீட்டில் ஏற்படும் சிறு சிறு வாஸ்து குறைபாடுகளால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்.
- ✓ உங்கள் வீட்டில் வாஸ்து குறைபாடுகள் இருக்கும் பட்சத்தில் வாஸ்து நிபுணர்களைக் கொண்டு சரி செய்து குழந்தைகளின் எதிர்காலத்தை சிறப்பாக்குங்கள்.

## வியாபார நிறுவனங்களுக்கு வாஸ்து உண்டா?

- ✓ நம் வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் அலுவலகம் மற்றும் தொழில் கூடங்கள் லட்சணமாக இருப்பது மட்டுமல்லாமல், அதை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்? என்பதும் மிக முக்கியம். ஒவ்வொரு திசையில் இருக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு அமைப்பு உள்ளது.

- ✓ இப்போது வளர்ந்து வரும் மக்கள் தொகையால் ஒரே கட்டிடத்தில் பல வியாபார நிறுவனங்கள் இருந்தாலும், ஒருவருக்கு நல்ல வியாபாரம் நடந்துகொண்டே இருக்கும். இதற்கு என்ன காரணம்? என்று ஆராய்ந்து பார்த்தால், அவர் உட்காரும் முறை, அங்கு இருக்கும் பொருட்கள் இயற்கையாகவே சரியான இடத்தில் அமைந்திருக்கும். அத்துடன் அவருடைய வாஸ்து பற்றிய அணுகுமுறை அந்த இடத்தில் கை கொடுத்திருக்கும். எப்படி ஒரு வீட்டிற்கு கிழக்கும், வடக்கும் திறந்திருக்க வேண்டும் என்று கூறுகிறோமோ? அதேபோல் வியாபார நிறுவனங்களுக்கும் ஏற்புடையது.

- ✓ உதாரணமாக, மேற்கு பார்த்த அமைப்பு கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு மேனேஜர் அல்லது சூப்பர் வைசர் தென்மேற்கு மூலையில் அமர்ந்து பணி செய்வது மிகவும் நல்லது. அதேபோல் தங்கள் வியாபாரத்திற்காக வைத்திருக்கும் பொருட்கள் வடமேற்கில் சேமித்து வைத்திருந்தால் மிகப்பெரிய விற்பனையை கொடுக்கும்.

- ✓ வியாபார நிறுவனத்தில் பணப்புழக்கம் குறைகிறது என்றால், அங்கு தென்மேற்கில் பூஜை செய்யும் அமைப்பால் ஏற்படுகிறது என தெளிவாக அறியலாம்.

- ✓ தொழில் நிறுவனமோ அல்லது வியாபாரமோ ஒரு சிலர் மட்டும் பெரிய அளவில் வெற்றி பெறுகின்றனர். ஏனென்றால், அவர்கள் மிக நல்ல பலன்களை வழங்கக்கூடிய மனை அமைப்பில் இருப்பார்கள். வெற்றி பெறுபவர்களுக்கு இயற்கையாக அவ்வாறு அமைந்துவிடுகிறது.

- ✓ வியாபாரத்தில், வெற்றி பெற நல்ல மனை அமைப்பை தேர்வு செய்து வாஸ்து முறைப்படி கட்டிடம் கட்டி வெற்றி பெறுவோம்.

- ✓ ஒரு வீட்டின் பொருளாதாரம் அவர் செய்யும் தொழில் சார்ந்தே இருக்கும். எனவே, தாங்கள் தொழில் புரியும் இடங்களில் வாஸ்து குறைபாடு இருப்பின் அதை நல்ல வாஸ்து நிபுணர் கொண்டு சரி செய்து கொள்ளவும்.

## பூர்வீக நிலம் பயன்படுத்தாமல் இருந்தால் வரும் பிரச்சனைகள்

- ✓ நாம் வாங்கும் நிலம் ஆனாலும் சரி, பூர்வீக நிலம் ஆனாலும் சரி, வாஸ்துப்படி சரியாக இருக்கும் பட்சத்தில் நாம் நம் பூர்வீக நிலத்தை உபயோகிக்கலாம். சில வீடுகளில் பழங்காலத்தில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து இருப்பார்கள். அதில் ஒரு சிலரே அந்த இடத்தில் இருப்பார்கள். ஒரு சிலர் வேலை நிமிர்த்தமாக வேறு ஊருக்கு போய் செட்டில் ஆகிவிடுவார்கள். பிறகு அவர்கள் வாழும் இடத்தில் வாஸ்து பலத்தால் ஜெயித்தாலும், பூர்வீக வீட்டில் வாஸ்து குறைபாடு இருந்தால் இவர்களையும் பாதிக்கும்.

- ✓ பூர்வீக இடம் வேண்டாம், என் அண்ணன் பிள்ளைகள் எடுத்துக் கொள்ளட்டும் என்று சொன்னாலும் அது இவர்களை பாதிக்கும்.

- ✓ இவர்கள் லண்டன், USA போன்ற இடத்தில் நிறைய பணம் சம்பாதித்தாலும் இழப்புகள் நிச்சயமாக இருக்கும்.

- ✓ குழந்தைகள், கணவன்-மனைவி, உடல்நலம் பாதிக்கப்படும்.

- ✓ பூர்வீக இடம் வேண்டாம் என்றால் எழுத்து வழியில் அதாவது பத்திரம் வழி வேண்டாம் என்று கூறினால் தான் பாதிக்கப்பட மாட்டார்கள்.

- ✓ சில வீடுகளில் சொத்துக்கள் பயன்படுத்தாமல் ஊரில் இருக்கும். தாய், தந்தை இருக்க மாட்டார்கள் அனைத்து பிள்ளைகளும் வேறு வேறு ஊரில் செட்டில் ஆகி இருப்பார்கள். அவர்கள் அந்த நிலத்தை வேண்டாம் என்று சொன்னாலும் அது யாரும் உபயோகப்படுத்தாமல் இருப்பதால் பாதிப்பு அவர்களையே சேரும்.

- ✓ ஆகையால், அப்படி ஒரு பூர்வீக நிலம் இருந்தால் நேரில் சென்று அவர்களுக்கு அந்த நிலம் வேண்டாம் என்ற பட்சத்தில் கோவிலுக்கு அல்லது ஆசிரமத்துக்கு எழுதி வைக்க வேண்டும். இல்லையெனில் அதை விற்று பங்கு போட்டுக்கொள்ள வேண்டும். ஆதரவற்ற நிலம் சந்ததியை நிச்சயம் பாதிக்கும்.

- ✓ மேலும் சில வீடுகளில் முன்னோர்கள் கோவிலில் வேலை செய்திருப்பார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு நிலமும், வீடும் அளித்திருப்பார்கள். ஆனால் அவர்கள் பிள்ளைகள் படித்து வேலைக்கு சென்றுவிட்டால் அந்த இடத்தை கோவிலுக்கு கொடுத்து விட வேண்டும். அப்படி கொடுக்காமல் அதை விற்று அந்தப் பணத்தை உபயோகித்தால் சந்ததியை பாதிக்கும்.

- ✓ ஆகையால் வீட்டில் பூர்வீக சொத்து எப்படி வந்தது? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். கோவில் சொத்து கோவிலில் வேலை பார்க்கும் வரை தான் உபயோகிக்க வேண்டும்.

- ✓ மேலும் சிலர் பூர்வீக வீட்டில் தவறான மாற்றம் செய்திருப்பார்கள். ஆகையால் பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

- ✓ பூர்வீக இடத்தில் நிலமோ அல்லது வீடு வாஸ்துப்படி இல்லாமல் இருந்து வேலை நிமிர்த்தமாக வெளியூரில் இருப்பவர்கள் அங்கு வசிக்கும் இடத்தில் வாஸ்துபடி இல்லாமல் இருந்தால் பிரச்சனையை சந்திக்கும்போழுது ஏதாவது ஒரு இடத்தில் வாஸ்துபடி மாற்றி அமைத்தால் சரி இல்லாததும் நாளடைவில் சரியாகும்.

## பெண்ணுக்கு திருமணம் ஆனவுடன் பிறந்த வீட்டு வாஸ்து பாதிக்குமா?

- ✓ பெண்ணுக்கு திருமணம் ஆனவுடன் பிறந்த வீட்டு வாஸ்து பாதிப்பு நிச்சயமாக இருக்கும். ஒரு பெண் திருமணமாகும் முன் எந்த வீட்டில் இருக்கிறாரோ அதே வாஸ்து ஒத்த வீட்டில்தான் வரன் அமையும்.

- ✓ பிறந்த வீட்டின் பாதிப்பால் கூட குழந்தையின்மை, கணவன்-மனைவி பிரச்சனை, உடல்நலம் பாதிப்பு, கணவருக்கு வேலையின்மை போன்ற போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடலாம்.

- ✓ எப்படி ஒரு பெண்ணை திருமணம் செய்யும் பொழுது அவர்கள் கொடுக்கும் பொருள் பிள்ளை வீட்டாருக்கு உதவுமோ, அதேபோல் பெண் வீட்டு வாஸ்து தவறுகளும் பாதிக்கும்.

- ✓ பெண் நன்றாக படித்திருப்பாள், சம்பாத்தியமும் செய்திருப்பாள், திருமணமும் மிகச் சிறப்பாக நடந்தேறி இருக்கும். பின்பு, கணவரின் தீய பழக்கங்கள், வேலை அல்லது தொழில் பாதிப்புகள், குழந்தையின்மை போன்றவை அந்த பெண்ணை மன உளைச்சலுக்கு ஆளாக்கும். இந்த சூழலில் திருமணம் செய்த இடம் தான் சரி இல்லை என்று பெண் வீட்டார் நினைப்பார்கள்.

- ✓ பெண் வீட்டில் தென்கிழக்கு செப்டிக்டேங்க் அல்லது தென்கிழக்கு பாத்ரூம் போன்ற தவறுகளும் மற்றும் நல்ல உச்சவாசல், வடக்கு, கிழக்கு திறப்பு உள்ள வீட்டில் வளர்ந்து இருப்பாள். இதை ஒத்த வாஸ்து குறைபாடு உள்ள வரன் தான் அமைந்து இருக்கும். வாஸ்துவின் நல்ல பலத்தால் பல வெற்றிகளும், வாஸ்து தவறுகளால் சில தோல்விகளும் சந்திப்பர்.

- ✓ பொதுவாக பெண்ணின் பெற்றோர்கள் பல வெற்றிகள் கண்ட என் பெண்ணின் தோல்விக்கு, மாப்பிள்ளையும் அவரின் வீடும் தான் காரணம் எனவும் எண்ணுவர். ஆனால், இருவர் வீடுகளிலும் உள்ள வாஸ்து குறைபாடுகளும், அவர்களின் பாதிப்புக்கு காரணமாக அமைகிறது.

- ✓ இதன்மூலம் இரு வீட்டாருக்கும் பல மன வேற்றுமைகள் ஏற்பட்டு உறவுகளில் விரிசல்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு. இதனை தவிர்க்க இரு வீட்டாரும் தங்களது வீட்டை வாஸ்து முறைப்படி சரி செய்யும்போது அவர்களது வாழ்க்கையில் இழப்பில்லாமல் வெற்றிகள் மட்டுமே அமையும். மேலும், குடும்ப உறவுகள் சிறந்து நல்லதொரு வாழ்வை பெறலாம்.

## ஒரு வீட்டின் வாஸ்துவிற்கும், அங்கு வசிக்கும் நபர்கள் எதிர்கொள்ளும் நோய்களுக்கும் சம்பந்தம் உண்டா?

- ✓ தற்பொழுது எங்கு பார்த்தாலும் பல அடுக்குகளில் பல்துறை மருத்துவமனைகள் தான் காண்கிறோம். நம் முன்னோர்கள் மருத்துவமனைக்கு சென்றது இல்லை. 80 வயது ஆனாலும் கைதடி கூட பயன்படுத்தமாட்டார்கள். பற்கள் ஆரோக்கியமாக இருக்கும். அவர்கள் தேவையை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். சுறுசுறுப்பாகவும் இருப்பார்கள். அதற்கு காரணம் அவர்கள் வசித்த வீடு தான்.

- ✓ முன்பெல்லாம் அனைவரின் வீடும் ஒரே மாதிரி தான் இருக்கும். சூரிய ஒளி வீட்டினுள் வரும் வகையில் வீடு கட்டுவார்கள். கிணறு, குளம் போன்றவை சரியான திசையில் இருக்கும். ஆகையால், நோயை எதிர்கொள்ளும் சக்தி அவர்களுக்கு இருந்தது. ஆனால், தற்போது ஒரு சிறிய இடத்தில் பல அடுக்குமாடி வீடு கட்டுகிறார்கள். அதுவும் வாஸ்து பலம் இல்லாமல் கட்டுகிறார்கள்.

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு பலவீனம் அடைந்தால் கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, உடல் பருமன், வேலையின்மை, எதிர்மறை எண்ணங்கள் தோன்றுதல், எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வரலாம்.

- ✓ தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பலவீனம் அடைந்தால் மன அழுத்தம், பெண்களுக்கு மன பாதிப்பு வருதல், பெண்கள் பூப்படைதலில் பிரச்சனைகள், குழந்தைபேறு தள்ளிப் போகுதல், அடிக்கடி கரு கலைதல், வயிற்றில் அறுவை சிகிச்சை, மன இறுக்கம் அல்லது மன வளர்ச்சி இன்றி குழந்தை பிறத்தல், சளி சம்பந்தப்பட்ட பிரச்சனை, தோல் நோய்கள், புற்றுநோய், மாரடைப்பு, சர்க்கரை நோய், சிறுநீரக கோளாறு, நரம்பு, முதுகுத்தண்டு பாதிப்புகள், மூட்டு வலி பிரச்சனை, விபத்து போன்றவை இப்பொழுது சர்வ சாதாரணமாக மாறிவிட்டது.

- ✓ இப்பொழுது வீடுகள் வாஸ்துபடி உள்ளதா? என்பது சந்தேகமே. ஆகையால், அதிக மக்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

- ✓ வாஸ்துபடி வீட்டை அமைத்துக் கொண்டால் நிச்சயம் ஆரோக்கியமாக வாழலாம். இப்பொழுது உடல் பாதிக்கப்பட்டு இருந்தாலும் வாஸ்துபடி வீட்டை மாற்றினால் உடல் ஆரோக்கியம் பெற வழிபிறக்கும்.

## வாஸ்து எதற்கு பார்க்க வேண்டும்? அதன் முக்கியத்துவம் என்ன?

- ✓ சூரியனை ஆதாரமாகக்கொண்டு உயிரற்ற பொருட்களான செங்கல், சிமெண்ட், மணல், கம்பிகள், மரம் போன்ற பொருட்களை சரியான விகிதத்தில் கலந்து நிலத்தின் மேல் கட்டிடமாக எழுப்பி உயிரோட்டம் கொடுப்பது வாஸ்து.

- ✓ இந்த நிலையில் நமக்கு இயற்கையின் அடித்தளமான சூரிய வெளிச்சத்தை நாம் நம் வீட்டில் சரியான முறையில் பயன்படுத்தினாலே நமது அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்பது வாஸ்து சாஸ்திரத்தின் உண்மை.

- ✓ இன்றைய சூழ்நிலையில் நாம் எப்போதுமே பிரச்சனைகளோடு வாழ பழகிவிட்டோமே தவிர, ஆற அமர்ந்து பிரச்சனைகளை தீர்த்து பிரச்சனையின்றி வாழ இயலாமல் போய்விட்டது. இதற்கு காரணம் இயற்கையோடு ஒன்றிருக்கும் வாஸ்துவை பின்பற்றாமல் போனதுதான்.

- ✓ நாம் வாழும் பூமியானது நேராக இல்லாமல் தன் அச்சிலிருந்து 23.5 டிகிரி கீழாக சாய்ந்துள்ளது. பூமி இப்படி இருப்பதால் தான் சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றி வர முடிகிறது. மேலும் பூமி சூரியனை சுற்றி செல்லும்பொழுது பூமியின் மேற்பரப்பில் ஈசான பகுதி சற்று தாழ்ந்தும், தென்மேற்கு பகுதி உயர்ந்தும் உள்ளது.

- ✓ அதனால் தான் நம் வீட்டினை அமைக்கும்போது தென்மேற்கு மூலை உயரமாகவும், வடகிழக்கு மூலையை பள்ளமாகவும் அமைக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இவ்வாறு திசைகளையும், மூலைகளையும் அடிப்படையாகக்கொண்டு அதற்கு ஏற்றார்போல் நல்ல முறையில் ஒரு வீடோ, தொழில் நிறுவனமோ கட்டும்பொழுது மனிதனின் வாழ்வில் தடுமாற்றம், குழப்பம், பிரச்சனைகளை சந்திக்காமல் இழப்பில்லாமல் நிறைவான வாழ்வை அமைத்துக் கொள்ளலாம்.

- ✓ வீட்டின் மதிற்சுவர், சீலிங், பரணை, தண்ணீர் தொட்டி, ஜன்னல்கள், மின் இணைப்பு பெட்டி, கழிவுநீர் தொட்டி போன்றவை எங்கெங்கே அமைக்க வேண்டுமென்று இயற்கையோடு ஒன்றிட்டு திட்டமிடுவது தான் வாஸ்து.

- ✓ அனைத்து திசைகளுக்கும் ஒரு ஆற்றல் உள்ளது. எந்த திசையில் எதை அமைத்தால் சரியாக இருக்கும்? என்று வாஸ்துவில் கூறப்பட்டுள்ளது.

- ✓ ஒரு மின் இணைப்பு பெட்டி கூட தவறாக இடத்தில் அமைத்துவிட்டோம் என்றால் அந்த தவறின் இன்னல்களை எதிர்கொள்ள வேண்டும்.

- ✓ ஆகையால், அனைவரும் வாஸ்துபடி இயற்கையோடு ஒன்றி வீட்டையோ, தொழில் நிறுவனத்தையோ அமைத்துக்கொண்டு உங்களுக்கு வரும் வெற்றிகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## தொழிலில் நஷ்டம் அல்லது பண விரயம் ஏற்படக் காரணம் என்ன?

- ✓ இன்று தொழில் செய்வது என்பது குதிரைக்கொம்பாகிவிட்டது. போட்டிகள் நிறைந்த இந்த உலகில் தொழிலை நடத்துவது மிக சவாலாக உள்ளது.

- ✓ ஒருவர் செய்யும் தொழிலை இரண்டு விதமாக பார்க்கிறோம். முதலாவதாக, பாரம்பரியமாக தாத்தா, அப்பா செய்து வந்த தொழிலை அவர்கள் எந்த ஒரு விரிவாக்கமும் செய்திருக்க மாட்டார்கள். மகன் பொறுப்பேற்ற பின் தொழிலை விரிவுப்படுத்தும்போது அதில் முக்கியமாக அவர்களது தென்மேற்கு திசை அல்லது வடமேற்கு திசையில் தவறு செய்ய அதிக வாய்ப்புகள் உள்ளது.

- ✓ அதுதவிர, புதிதாக தொழில் செய்ய எண்ணுபவர்கள் இப்போதுள்ள காலக்கட்டத்திற்கு வாடகைக்கு இடம் கிடைப்பது பெரிய சிரமமாக உள்ள நிலைமையில் ஏதோ ஒரு இடம் கிடைத்தால் போதும் என்று தொழிலை செய்கிறார்கள். இதனால் பல சமயங்களில் பல தொழில் நிறுவனங்கள் மிக விரைவில் காணாமல் சென்று விடுகிறது. இதற்கு முக்கியமான காரணம் அங்கு வடக்கு திசை அல்லது கிழக்கு திசை பாதிக்கப்பட்டிருக்கும். அதைத்தவிர தவறான தெருக்குத்து அமைப்பு இருக்கும்பட்சத்தில் மிக விரைவில் அந்த தொழிலின் தன்மை மாறி அவர்களின் பொருளாதார நிலைமை மோசமாகி விடுகிறது.

- ✓ நாம் இப்போது உன்னிப்பாக பார்த்தோமென்றால் எங்கெல்லாம் கிழக்கு திசை பாதிக்கப்பட்டிருக்கிறதோ? அந்த நிறுவனங்கள் அனைத்திலும் பெண்கள் மிக அதிகமாக அதாவது, ஆண்களை விட அதிகமான எண்ணிக்கையில் பெண்களின் ஆதிக்கம் நிச்சயமாக இருக்கும். ஆகையால், வாஸ்து என்பது வீட்டிற்கு மட்டுமல்லாமல் தொழில் நிறுவனங்களுக்கும் நிச்சயம் பார்த்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

- ✓ ஒரு நல்ல வாஸ்து நிபுணரை அணுகி உங்களது தொழில் நிறுவனத்தையும், தொழிற்சாலைகளையும் அமைத்து வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றியையும், செல்வத்தையும் பெற்றிடுங்கள்.

## ஒரு வீட்டில் பெண்கள் பாதிக்கப்படுவதற்கு வாஸ்து காரணமாக இருக்குமா?

- ✓ பெண் என்பவள் போற்றுதலுக்கு உரியவள். அவள் அமைதியாகவும், நேர்மறையாகவும் இருந்தால் மட்டுமே ஆண்களால் மிகப்பெரிய வெற்றியை ஈட்ட முடியும். உதாரணமாக ஒரு வீட்டில் உள்ள பெண் எதிர்மறை எண்ணங்களுடனோ அல்லது தற்கொலைக்கு முயற்சித்தல் அல்லது விபத்து ஏற்படுமேயானால், அந்த வீட்டில் நிச்சயம் தென்கிழக்கிலும், வடமேற்கிலும் தவறு செய்திருப்பார்கள்.

- ✓ வடமேற்கில் கட் போன்ற அமைப்பு, கழிவறையின் மேல் பரணை போன்ற அமைப்புகள் மற்றும் தென்கிழக்கில் செப்டிக்டேங்க் அல்லது போர் போன்ற அமைப்புகள் இருப்பின் அந்த வீட்டில் பெண்கள் நிச்சயமாக எதிர்மறையான எண்ணங்களுடன் இருப்பார்கள். மேலும், அவர்களுக்கு குடல், வயிறு சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது.

- ✓ ஒரு வீட்டில் பெண் தன்னம்பிக்கையாக இருக்கும்பட்சத்தில் மட்டுமே ஒரு ஆணால் மிகப்பெரிய வெற்றியடைய முடியும். ஆகையால்தான், நமது முன்னோர்கள் ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் நிச்சயமாக இருப்பாள் என்று கூறினார்கள். அது தாயாக இருந்தாலும் சரி அல்லது மனைவியாக இருந்தாலும் சரி அல்லது மகள், தங்கை போன்ற உறவுகளாக இருந்தாலும் சரி.

## நம் வாழ்க்கையும், வீட்டின் வடகிழக்கும்..!!

- ✓ நமது வாழ்க்கைமுறையை நாம் அறிந்து கொள்ளும் வழியே வாஸ்து. நம்முடைய குணாதிசயங்கள், தொழில், செல்வ நிலை மற்றும் நம் குடும்ப உறுப்பினர்கள் என அனைத்தையும் தீர்மானிக்கும் வீட்டு அமைப்பே வாஸ்து. இதனை அறிந்து கொண்டால் நம்மை நாம் அறிந்து கொள்வது மிக சுலபம்.

- ✓ வாஸ்துவில் நான்கு மூலைகளில் மிக முக்கியமானது ஈசான்ய மூலை என்கிற வடகிழக்கு மூலை. இதன்வழியே சகல சௌபாக்கியங்களும் வீட்டிற்குள் வருகிறது எனலாம். எனவே, இம்மூலையை சுத்தமாக வைக்க வேண்டும். வரவேற்பறை, உணவருந்தும் அறை மற்றும் குழந்தைகளின் படிப்பறையை இங்கு அமைக்கலாம். இந்த மூலையை எப்போதும் சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும்.

- ✓ அம்மி, ஆட்டுக்கல், விறகு சுமை, தேவை இல்லாத பழைய பொருட்கள் போன்றவை வைக்கக்கூடாது. வீட்டின் பிரதானமான ஈசான்ய மூலையில் கழிப்பறை, குளியலறை, செப்டிக்டேங்க், துணி துவைக்கும் கல் போன்றவைகள் இருத்தல் கூடாது.

- ✓ வீட்டின் வடகிழக்கு உள்மூலை அல்லது வெளிமூலையில் படிக்கட்டு வருவதை அறவே தவிர்த்தல் வேண்டும்.

- ✓ கீழ்நிலைத்தொட்டி, கிணறு போன்றவை அமைக்க வேண்டிய இடம் வீட்டின் ஈசான்ய மூலை ஆகும்.

- ✓ ஈசான்ய மூலையில் நீரோட்டம் இல்லாதபோது தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு தவிர்த்து வடக்கிலும், கிழக்கிலும் வாஸ்து நிபுணரின் ஆலோசனைப்படி தகுந்த இடத்தில் அமைக்கலாம்.

- ✓ மேலும் வீட்டின் வடக்கிலும், கிழக்கிலும் ஜன்னல் இருப்பது மிக முக்கியம்.

- ✓ வீட்டில் உள்ள ஆண்களின் வருமானத்தை தீர்மானிப்பதிலும், குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் மேம்படவும் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள ஜன்னல் முக்கிய பங்கு வகிக்கிறது. ஜன்னல் இருந்தாலும் அதனை எப்போதும் திறந்து வைக்க வேண்டும். இதனால் வீட்டிற்கான நேர்மறை சக்திகளை ஈர்த்து சிறப்பான வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

வடகிழக்கு வாஸ்துபடி அமைக்காவிட்டால் கீழ்க்கண்ட பாதிப்புகள் ஏற்படலாம்.

- ✓ குழந்தையின்மை

- ✓ ஆண் வாரிசு இல்லாமல் போகுதல்

- ✓ நிரந்தர தொழில் அல்லது வேலை இல்லாமல் இருத்தல்

- ✓ வீட்டில் மூத்த வாரிசு இருக்கும்போது அவர் குடும்பத்தை விட்டு விலகி இருத்தல்

- ✓ வீட்டில் உள்ள ஆண்களுக்கு உடல்நலம் பாதித்தல் போன்றவை இருக்கலாம்.

## கார் போர்டிக்கோ அமைப்புக்கும், வீட்டில் நிகழும் நிகழ்ச்சிக்கும் தொடர்புண்டா?

- ✓ இப்போது அனைவருக்கும் இரண்டு சக்கர வாகனமும், காரும் இன்றியமையாத ஒன்றாக ஆகிவிட்டது. பல லட்சம் செலவு செய்து வாங்கிய காரை போர்டிக்கோ கட்டி அதில் நிறுத்துகிறார்கள். கார் போர்டிக்கோ வாஸ்து பலம் இல்லாத இடத்தில் கட்டும் பட்சத்தில் பல இன்னல்களை சந்திக்க நேரிடும்.

- ✓ இன்பமயமாக சென்றுகொண்டிருக்கும் வாழ்க்கை அவர்கள் அறியாமையால் செய்யும் தவறால் பாதிக்கப்படுவார்கள். ஒரு வீட்டின் எந்த மூலையையும், பகுதியையும் உடைத்து போர்டிக்கோ அமைக்கக்கூடாது. கேரேஜ் கேண்டிலிவர் முறையில் தூண் இல்லாமல் அமைக்க வேண்டும்.

- ✓ ஒரு இடத்தின் தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு மூலையில் போர்டிக்கோ அமைக்கலாம். வடகிழக்கு மூலையில் நிச்சயமாக கேரேஜ் அமைக்கக்கூடாது. கேரேஜ் தாய் சுவரையும், தந்தை சுவரையும் தொடாமல் தனியாக அமைக்க வேண்டும். மேற்கூரை சமமாக அல்லது தெற்கு/மேற்கு உயர்த்தியும், வடக்கு/கிழக்கு தாழ்த்தியும் அமைக்க வேண்டும்.

- ✓ இதே விதிதான் அனைத்து இடத்திற்கும் பொருந்தும். வடகிழக்கில் கேரேஜ் இருந்தால் பல இன்னல்கள் சந்திக்க நேரிடும். திருமணத்தடை, வியாபார முன்னேற்றத்தடை, விபத்துகள் போன்றவை உண்டாகும். வாஸ்து பொருந்திய இடமில்லை என்றால் வீட்டின் வெளியிலேயே வாகனங்களை நிறுத்துவது சாலச் சிறந்தது.

- ✓ வாஸ்து பலம் இல்லாத இடத்தில் காரை நிறுத்தி பணவரவை முடக்கி விடாதீர்கள். கார் போர்டிக்கோவை வாஸ்து நிபுணரின் துணைக்கொண்டு அமைத்து உங்களுக்கு வரும் அதிர்ஷ்டத்தை எந்தவித இழப்பும் இல்லாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

## திருமணதடைக்கு முக்கிய காரணிகளாக இருப்பவை இவைதான்..!!

- ✓ ஒருவரின் சிறப்பான வாழ்க்கைக்கு அஸ்திவாரம் வெற்றிகரமான மணவாழ்வு மட்டுமே. மலர்கள் உள்ள கொடிகள், பழங்கள் உள்ள மரங்கள் எப்படி பார்ப்பதற்கு அழகாக இருக்கிறதோ அதைப்போலவே திருமணம் செய்து குடும்பமாக இருக்கும்போது கிடைக்கும் மதிப்பு, மரியாதை அற்புதமானது.

- ✓ இப்படிப்பட்ட திருமணங்கள் இன்று ஏனோ சிலருக்கு விரைவில் கைகூடாமல், தள்ளிக்கொண்டே செல்கிறது. இதற்கான காரணங்கள் சில :

- ✓ திருமணத்தில் விருப்பமின்மை

- ✓ வேலை கிடைக்காமை

- ✓ லட்சியம் பூர்த்தி அடையாமை

- ✓ உடன் பிறந்தவர்களின் தாமத திருமணம் என முக்கியமாக சொல்லலாம்.

- ✓ இந்த பிரபஞ்சத்திலேயே மனிதன் வசிக்கக்கூடிய அமைப்பு (அளவான வெப்பம், குளிர், காற்று) பூமிக்கு இருப்பதால்தான் நாம் இங்கு வாழ முடிகிறது. அதுபோல தான் வீடும்.

- ✓ உங்கள் வீட்டின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியை கூர்ந்து கவனித்தாலே பாதிப்பிரச்சனை முடிந்துவிடும். இந்த பகுதியில் உள்ள

- ✓ கிழக்கு ஜன்னல்கள் - சூரிய வெளிச்சம்

- ✓ வடக்கு ஜன்னல்கள் - காற்றோட்டம் போன்றவற்றை வீட்டிற்குள் அனுப்பி துடிப்புடன் நம்மை இருக்கச் செய்கிறது. குறிப்பாக கிழக்குக்கும், தாம்பத்தியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

- ✓ மேலும், தென்மேற்கு பகுதியில்

- ✓ சம்ப்

- ✓ கழிவறை
- ✓ சமையலறை

- ✓ பூஜையறை

- ✓ உள்மூலை படிக்கட்டு

- ✓ தென்கிழக்கில் சம்ப்

- ✓ கழிவறைத்தொட்டி போன்றவையும் திருமணத்தடைக்கு முக்கிய காரணிகளாகிறது.

- ✓ எனவே, உங்களது வீட்டை வாஸ்து முறைப்படி சரிசெய்தாலே போதும் வீட்டில் கெட்டி மேளம் கொட்டும். மேலும் வேலை, லட்சியம் என எல்லாம் எண்ணியபடி நடக்கும்.

## ஒரு மனையை தேர்வு செய்வதற்கு வாஸ்து அவசியமா?

- ✓ 'வரும்முன் காப்போம்' என்ற பழமொழிக்கு ஏற்ப மனையை தேர்வு செய்யும்போதே வாஸ்து விதிப்படி செய்துவிட்டால் பின்பு அந்த மனையில் எந்த இடையூறும் இல்லாமல் கட்டுமான பணி செவ்வனே நடந்தேறும். பின்பு அந்த கட்டிடத்தில் இழப்பில்லாமல் வெற்றி பெறலாம்.

- ✓ நமது கனவு இல்லமோ, தொழில் நிறுவனமோ, பள்ளிக்கூடமோ, மருத்துவமனையோ கட்டிடம் கட்டுவதற்கு முன் மனை வாங்கும்போது வாஸ்து விதிப்படி வாங்கிவிட்டால் பொருட்சேதத்தையும், மன வருத்தத்தையும் தவிர்க்கலாம்.

- ✓ ஒரு மனை வாங்கும் முன் அதன் திசையை அறிந்து வாங்குவது உத்தமம். மனையை தேர்வு செய்யும் பொழுது அதன் வடிவம் சதுரம் அல்லது செவ்வகமாக இருக்க வேண்டும். வேறு வடிவில் வாங்கினால் அதனை கட்டிடம் கட்டுவதற்கு முன் சதுரம் அல்லது செவ்வகமாக அமைத்துவிட்டு மற்ற இடத்தை உபயோகப்படுத்தாமல் விட்டுவிட வேண்டும்.

- ✓ மனைக்கு வடகிழக்கு பகுதி பள்ளமாகவும், தென்மேற்கு பகுதி உயரமாகவும் இருக்க வேண்டும். இயற்கையாகவே தென்மேற்கு பகுதியில் குன்றுகளோ, கோவில் கோபுரமோ, தொலைபேசி கோபுரமோ, உயர்ந்த மரங்களோ அமைந்தால் சிறந்தது. வடகிழக்கு பகுதியில் இயற்கையாகவே ஏரி, குளம், பொதுக்கிணறு அமைந்தால் உத்தமம்.

- ✓ வடகிழக்கு பக்கம் பள்ளமாகவும், தென்மேற்கு பக்கம் உயரமாகவும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், வடக்கு பக்கம் உயரமான அமைப்பு, தென்மேற்கு பக்கம் தாழ்வான அமைப்பு பொருந்திய மனை வாங்குவதை 100% தவிர்க்கவும்.

- ✓ அதுபோல குன்றுகளும், குளங்களும் தவறான திசையில் இருந்தால் அந்த மனையை வாங்கக்கூடாது. ஒரு ஊரே வடகிழக்கில் மலை மற்றும் தென்மேற்கு பள்ளமாக தான் இருக்கிறது. அங்கு மக்கள் இல்லையா? என்று பலர் கேள்வி தொடுப்பார்கள்.

- ✓ அந்த ஊரில் உள்ளவர்கள் இழப்புடன் வெற்றி பெறுவார்கள். இந்த மாதிரியான தவறான மனையை காண நேர்ந்தால், 'எனக்கு இந்த சமிஷ்சையை காண்பித்தாயே' என கடவுளிடம் நன்றி கூறி வேறு ஒரு நல்ல வாஸ்து அம்சம் பொருந்திய மனையை தேர்வு செய்து அதில் எந்தவித இழப்பும் இல்லாமல் ஆனந்தமாக வாழுங்கள்.

## தொழிற்சாலைக்கும் வாஸ்து தேவையா?

- ✓ வாஸ்து சாஸ்திரம் பிரபஞ்சத்தோடு ஒட்டியிருக்கிறது. அதை சரிவர யார் பயன்படுத்துகிறார்களோ? அவர்கள் நிச்சயமாக வெற்றியை எட்டிப்பிடிப்பர்.

- ✓ 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற பழமொழிக்கேற்ப யார் ஒருவர்? வாஸ்துபடி தன் வீடு, தொழிற்சாலை போன்ற அமைப்பை அமைத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு வெற்றி நிச்சயம்.

- ✓ தொழிற்சாலை சிறியதோ, பெரியதோ எந்தெந்த திசையில் எந்தெந்த டிபார்ட்மெண்ட் வர வேண்டுமோ? அதை சரிவர அமைக்க வேண்டும். சில தொழிற்சாலைகள் வியாபாரம் பெருகும்போது இடவசதி தேவைப்பட்டு செய்யக்கூடாத இடத்தில் விரிவுப்படுத்தி வாஸ்து குறைபாடு செய்து நஷ்டத்தை சந்திப்பர்.

- ✓ உதாரணமாக, விற்பனைக்கு ஏதுவான பொருட்களை வடமேற்கு அறையில் அடுக்குவர். பின்னர் விற்பனை பெருக்கத்தால் நிறைய பொருட்களை உற்பத்தி செய்து அவர்கள் அறியாமலேயே வடகிழக்கில் ஒரு அறை கட்டி அங்கும் அடுக்கி விடுவார்கள். பிறகு நன்றாகப் போய்க் கொண்டிருக்கும் வியாபாரத்தில் சரிவு ஏற்பட்டு அந்த பொருட்கள் தொழிற்சாலையிலேயே தங்கி நஷ்டத்தை சந்திப்பர்.

- ✓ இதுதான மக்களின் அறியாமை. வாஸ்து பலம் இருக்கும்போது பல லட்சம் புரட்டும் நான் இப்பொழுது கடன்பட்டு ஒரு பத்தாயிரம் பணம் பார்ப்பதற்கே கடினமாகி விட்டது என்று வருந்துவர்.

- ✓ வடமேற்கு விரிவு, வடகிழக்கு படிக்கட்டு போன்ற மாற்றங்களை தொழில் செய்வதற்கு சௌகரியமாக நினைத்துக்கொண்டு அமைத்துவிடுவர். ஆனால், அதுவே அவர்கள் நன்றாக நடத்திக் கொண்டிருக்கும் தொழிலுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடும்.

- ✓ அதேபோல் தென்கிழக்கு, தென்மேற்கு போன்ற பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்தினால் தீ விபத்து, திருடு போதல் போன்ற இழப்புகளை சந்திக்கலாம்.

- ✓ பிரபஞ்சம் யாரையும் உடனே கீழே தள்ளிவிடாது. சில சமிக்ஞையை காட்டும். உதாரணமாக, ஒரு தொழிற்சாலைக்கு வியாபாரம் நன்றாக இருக்கும். ஆனால், லாபம் எடுக்க முடியாமல் வரவும், செலவும் சரியாக இருக்கும். அப்போது அவர்கள் வாஸ்துபடி தங்களது தொழிற்சாலையை அமைத்துக்கொண்டால் லாபம் அடைந்து வெற்றி அடைவார்கள்.

## இல்லத்தில் மகிழ்ச்சி, வெற்றியை பெற்று தரும் வாஸ்து..!!

- ✓ ஒரு குடும்பம் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தால்தான் அந்த வீட்டில் உள்ளவர்கள் அடுத்த கட்டத்திற்கு பயணித்து வெற்றி பெற முடியும்.

- ✓ எல்லா வெற்றிகளுக்கு பின்னால் நிச்சயமாக ஒரு பெண் இருப்பாள். இயற்கையாகவே பெண்களுக்கு தன்னம்பிக்கையும், மன உறுதியும் அதிகமாகவே இருக்கும்.

- ✓ ஆணும், பெண்ணும் ஒரு வீட்டில் முக்கியம். ஆனால், ஆண்களைவிட பெண்கள் நலமுடன் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வீடும், நாடும் முன்னேறும்.

- ✓ வீட்டில் ஒரு ஆண் சரியில்லை என்றால்கூட அந்த வீடு அதிகம் பாதிக்கப்படாது. ஏனென்றால் அந்த வீட்டுப் பெண் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ்க்கையில் வெற்றி பெற்று விடுவாள். ஆனால், ஒரு பெண் வீட்டில் சரியில்லை என்றால் அந்த வீடு நிம்மதி இழந்துவிடும்.

- ✓ நாம் பூமாதேவி, லட்சுமிதேவி, பாரதமாதா என அனைவரையும் பெண் வடிவம் கொண்டே வணங்குகிறோம். பெண் நினைத்தால் எதையும் சாதித்து விடுவாள். பெண்கள் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தை சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டுவர முக்கிய பங்காற்றுகிறார்கள்.

- ✓ அப்படி பெண்ணுக்கு திடமான மனமும், உடல்நலமும் அமைய வீட்டின் தென்கிழக்கு மற்றும் வடமேற்கு பகுதியை வாஸ்துபடி அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ✓ வீட்டின் தென்கிழக்கும், வடமேற்கும் பாதிக்கப்பட்டால் பெண்களுக்கு உடல் மற்றும் மனநிலை பாதிக்கும். உதாரணமாக தென்கிழக்கில் குளியலறை, கழிவறை, கழிவுநீர் தொட்டி, கிணறு, ஆழ்துளை கிணறு, தெரு பார்வை போன்ற அமைப்புகள் இருத்தல்.

- ✓ வடமேற்கில் கிணறு, ஆழ்துளை கிணறு, தெருபார்வை போன்ற அமைப்புகள் இருத்தல். இதனால் அவர்கள் தேவையில்லாமல் சண்டை போடுவது, உடல் உபாதையால் மனக்குழப்பம் அடைவது என அந்த வீடு அதிகம் பாதிப்படையும்.

- ✓ மேலும், வீட்டில் மேற்கண்ட அமைப்புகளால் பெண்கள் மன அழுத்தம், வயிற்றில் அறுவை சிகிச்சை, குழந்தையின்மை, கெட்ட கனவு காணுதல், மனநிலை பாதிப்படைதல், சர்க்கரை வியாதி, மூட்டு வலி, தைராய்டு பாதிப்புகள், தீ விபத்து, நீரிழிவு நோய், புற்று நோய், கர்ப்பப்பை பிரச்சனை, எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சனை, உடல் பருமன் அடைதல், இளம் விதவைகள் உருவாதல், காதல் திருமணம் செய்தல், கணவன்-மனைவி பிரிவு போன்ற பல இன்னல்களுக்கு உள்ளாவார்கள்.

- ✓ வீட்டிலுள்ளவர்கள் சற்று விழிப்புணர்வுடன் இந்த குறைகளை கண்டறிந்து சரி செய்யும்போது பெண்களுக்கு மேன்மையை உண்டாக்கி அனைவரும் மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும் வாழ்க்கையை வாழ்ந்து வெற்றியை வசப்படுத்தும்.

## நம் தொழிலுக்கு ஏற்றாற்போல் வாஸ்து மாறுமா?

- ✓ இயற்கையோடு ஒட்டி அமைந்தது தான் வாஸ்து. வாஸ்து விதி அனைத்து இடத்திற்கும் ஒரே மாதிரி தான் இருக்கும். சிறு தொழில் நிறுவனமோ, பெரிய தொழிற்சாலையோ, ஏஜென்சி நிறுவனமோ, சூப்பர் மார்க்கெட்டோ அனைத்திற்கும் ஒரே விதியை தான் கடைபிடிக்க வேண்டும்.

- ✓ தெற்கு, மேற்கு பகுதியை விட வடக்கிலும், கிழக்கிலும் அதிக காலியிடம் அமைய வேண்டும். தென்மேற்கு உயர்ந்தும் கனமாகவும், வடகிழக்கு பள்ளமாகவும் கனமில்லாமலும் அமைத்துக்கொள்ள வேண்டும். தென்மேற்கு மூலையில் அலுவலகத்தில் முதன்மை மேலாளர் அறை அமைய வேண்டும்.

- ✓ விற்கும் பொருட்கள் வைக்கும் அறை மற்றும் வியாபாரம் பேசும் அறையை வடமேற்கில் அமைக்க வேண்டும். உதாரணமாக தொழிற்சாலையில் பாய்லர், ஆயில் டேங்க் போன்றவை தென்கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கு போன்ற இடத்தில் அமைக்கக்கூடாது. ஆயில் சேமிக்கும் கீழ்நிலை தொட்டி, தண்ணீர் சம்ப் போன்றவற்றை தென்மேற்கில் அமைக்கக்கூடாது.

- ✓ தென்கிழக்கில் டாய்லெட், வடகிழக்கில் படிக்கட்டு போன்ற தவறான அமைப்பால் தொழிற்சாலை பாதிக்கப்படும். அதேசமயத்தில் ஒரு நல்ல தெருக்குத்து, உச்சவாசல்

போன்ற நல்ல வாஸ்து வளமும் இருக்கும்பட்சத்தில் அந்த தொழிற்சாலையில் லாபம் இருக்காது, நஷ்டமும் இருக்காது. இதனால் முதலாளி தொழிற்சாலையை மூடி விடலாமா இல்லை தொடர்ந்து நடத்தலாமா? என்ற சந்தேகத்தில் நடத்துவார். ஆகையால் அப்படிப்பட்ட சூழலை எதிர்கொள்ளும்போது வாஸ்துபடி சரியில்லாத இடத்தை சரி செய்தால் அந்த தொழிற்சாலை நல்ல லாபத்தில் வழிநடத்தி செல்ல இயலும்.

- ✓ தொழிற்சாலையில் எந்த குறைபாடு இருந்தாலும் அதன் பாதிப்பு தொழிலாளர்களையும் பாதிக்கும். ஒரு தொழிற்சாலையில் வடமேற்கு பகுதி பாதிக்கப்பட்டால் விபத்துக்கள் ஏற்படும். வடக்கு, கிழக்கு, மேற்கு பாதிக்கப்பட்டால் உயரதிகாரி பேச்சுக்கு மதிப்பு இருக்காது. மேலும், அவர்கள் பணத்தையும், அறிவையும் செலுத்திவிட்டு அவமானத்திற்கு ஆளாவார்கள்.

- ✓ 'யாவும் இருக்கும் இடத்தில் இருந்துவிட்டால் எல்லாம் சௌக்கியமே' என்ற வாக்கியத்திற்கு ஏற்றாற்போல் அனைவரும் இயற்கையோடு ஒட்டிய வாஸ்து விதிப்படி தன் இடத்தை அமைத்துக் கொண்டால் தனக்கு வரும் வெற்றியை நிம்மதியாக பெற்றுக் கொள்ளலாம்.

## வீட்டிற்கு தலைவாசல் உச்சத்தில் அமைப்பது அவசியமா?

- ✓ ஒரு வீட்டிற்கு தலைவாசல் உச்சத்தில் அமைப்பது அவசியம். ஒரு மனிதனுக்கு மூளை எவ்வளவு அவசியமோ அதுபோல வீட்டிற்கு தலைவாசல்.

- ✓ ஒரு வீட்டிற்கோ அல்லது தொழில் நிறுவனத்திற்கோ அமைக்கப்படும் தலைவாசல் ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு என்ற எண்ணிக்கையில் வருமாறு அமைக்க வேண்டும். மேலும், கட்டிடத்திற்குள் அமைக்கும்போது அறைகளின் வாசல்களும் உச்சத்தில்தான் அமைக்கப்பட வேண்டும்.

- ✓ வடக்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் வடக்கு திசையில் கிழக்கு ஒட்டியும்,

- ✓ கிழக்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் கிழக்கு திசையில் வடக்கு ஒட்டியும்,

- ✓ தெற்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் தெற்கு திசையில் கிழக்கு ஒட்டியும்,

- ✓ மேற்கு பார்த்த கட்டிடத்திற்கு தலைவாசல் மேற்கு திசையில் வடக்கு ஒட்டியும் அமைக்க வேண்டும்.

- ✓ மக்கள் அறியாமையால் வீட்டை புதுப்பிக்கும்போது அல்லது வீட்டை விரிவாக்கம் செய்யும்போது வாஸ்து விதிக்கு உட்படாமல் தங்கள் வசதிக்கு கட்டி கெடுபலனை பெறுகிறார்கள். உதாரணத்திற்கு

- ✓ தென்மேற்கு மூலை படிக்கட்டு
- ✓ வடகிழக்கு பில்லர் போட்ட படிக்கட்டு
- ✓ படிக்கட்டு கீழ் டாய்லெட் அமைப்பு.
- ✓ சதுரம், செவ்வகம் இல்லாமல் வேறு வடிவில் அமைத்து விடுவது.
- ✓ சில நபர்கள் பணம் கையில் வரும்போது வீட்டை விரிவாக்கம் செய்வார்கள். அவர்கள் தென்மேற்கு மூலையிலோ, வடமேற்கு மூலையிலோ, தென்கிழக்கு மூலையிலோ, வடகிழக்கு மூலையிலோ ஒரு அறையை உருவாக்கும்போது அந்த வீடு சதுரம், செவ்வகம் அமைப்பை மீறி ஏதாவது ஒரு மூலை நீண்டோ அல்லது குறைந்தோ அமையப்பெறும். அதனால் அவர்களுக்கு கெடுபலன் தான் ஏற்படும்.
- ✓ வாஸ்துபடி வீட்டை அமைத்து 'நம் நல்வாழ்வு நம் கையில்' என்ற கூற்றுப்படி வாழ்வோம்.

## வாஸ்துவின் அதிமுக்கியமான விதிகள்

- ✓ இப்பொழுது இருக்கும் வாழ்க்கை சூழ்நிலையில் மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாஸ்துவை கடைபிடிக்க தவறி பல இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள். எதை கடைபிடிக்காவிட்டாலும் வாஸ்துவின் இந்த முதன்மையான விதிகளை நிச்சயமாக கடைபிடித்து வெற்றியை பெற்றுக்கொள்ளுங்கள்.
- ✓ வீட்டில் வடக்கிலும், கிழக்கிலும் அதிக காலியிடம் இருக்க வேண்டும்.
- ✓ வீட்டின் வடக்கிலும், கிழக்கிலும் உச்ச பகுதியான வடக்கு சுவரில் கிழக்கு ஒட்டிய ஜன்னலும், கிழக்கு சுவரில் வடக்கு ஒட்டிய ஜன்னலும் அமைக்க வேண்டும்.
- ✓ வடகிழக்கு பகுதியில் பாரம் இல்லாமல் இருக்க வேண்டும்.
- ✓ வடகிழக்கு பகுதியில் சமையலறை, பூஜையறை, பெட்ரூம் போன்றவை அமைக்கக்கூடாது.
- ✓ வடகிழக்கு பகுதியில் இருக்கும் அறையை படிக்கும் அறையாக பயன்படுத்த வேண்டும்.
- ✓ தென்மேற்கு மூலையில் பெட்ரூம் அமைத்துவிட்டு அந்த பெட்ரூமில் வடகிழக்கில் டாய்லெட் அமைக்கக்கூடாது.

- ✓ வடகிழக்கில் படிக்கட்டு, மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைக்கக்கூடாது.
- ✓ வடகிழக்கு மூலையில் மின்சார இணைப்பு பெட்டி அமைக்கக்கூடாது.
- ✓ வடகிழக்கு சரிவர இருந்தால் பணவரவு நன்றாக இருக்கும்.
- ✓ தோல் சம்பந்தப்பட்ட வியாதி, கண் நோய், மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்ளாமல் இருக்க வடகிழக்கு குறைபாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ✓ வடகிழக்கு கட்டமைப்பு, வடக்கு காம்பவுண்ட் இல்லாமல் இருக்கும் அமைப்பால் மனநோய், மன அழுத்தம், அண்டை அயலாருடன் சண்டை சச்சரவு, பொருளாதார குறைபாடு, தேவையில்லாத செலவுகள், குழந்தைகள் படிப்பில் ஆர்வம் குறைதல், தீய பழக்கவழக்கங்கள், கடன் பிரச்சனைகள், வேலை இல்லாமை, கணவன்-மனைவி வாழ்க்கையில் கருத்து வேறுபாடு, பணம் வீட்டில் தங்காமல் இருத்தல் போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும். ஆகையால் மேற்கண்ட விதிகளை நிச்சயமாக கடைபிடிக்க வேண்டும்.
- ✓ ஒருவரின் வீட்டில் வடக்கு, கிழக்கு சரிவர இருந்தால் எதையும் எதிர்கொள்ள தைரியம் கிடைக்கும்.

## சமையல் அறை சரியாக இல்லாமல் போனால் என்ன நேரும்?

- ✓ நாள்தோறும் தன் கணவருக்கு இது பிடிக்கும், தன் பிள்ளைகளுக்கு இது பிடிக்கும் என்று பார்த்து பார்த்து அறுசுவை உணவுகளோடு ஆரோக்கியமான உணவுகளையும் வழங்குவதிலேயே தன் வாழ்நாளில் பாதி நாட்களை சமையலறையிலேயே கழிந்து விடுகிறது பெண்களுக்கு...
- ✓ அப்படி அவர்கள் இருக்கும் சமையலறையானது தென்கிழக்கு மூலையில் வாஸ்துபடி சரியாக இல்லாமல் போனால் என்ன நேரும்?
- ✓ சமையல் ருசியற்று போகும்..
- ✓ கணவன்-மனைவிக்கிடையே அன்யோன்யம் குறைந்துவிடும்...
- ✓ பெண்களுக்கு தொப்பை விழுந்து விடும்...
- ✓ கை, கால்களில் அடிக்கடி சுட்டு கொள்வார்கள்...

- ✓ பெண்களுக்கு உடல் உபாதைகள் அடிக்கடி நேரிடும்...
- ✓ மேற்கண்ட இந்த பிரச்சனைகள் உங்கள் வீட்டில் இருக்கிறதா?...
- ✓ அது உங்கள் மனைவியின் பிழையில்லை... உங்கள் வீட்டில் தென்கிழக்கில் சமையலறை இல்லாமல் போனதுதான் பிழை...
- ✓ பெண்கள் வீட்டை பராமரிப்பதால்தான் ஆண்களால் பல துறைகளில் சாதிக்க முடிகிறது என்றால் அது மிகையாகாது..
- ✓ ஒரு பெண்ணின் நிர்வாகம், ஆளுமை, திறமை என்பது அவளை சார்ந்தது மட்டுமல்ல அவள் முழுநேரமும் அடைந்து கிடக்கும் சமையலறையே சார்ந்ததே...

## பழைய வீட்டை இடிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள்

- ✓ நமது முன்னோர்கள் வீடு கட்டும்போது இயற்கையை சார்ந்தே அமைத்தனர். நாம் நமது வசதிக்கேற்ப அதை மாற்றி அமைத்து அதனை வாஸ்து பலம் இல்லாத வீடாக மாற்றி இருப்போம். அதனை சரி செய்யும் வகையில் அந்த வீட்டை இடித்தோ அல்லது ஒரு பகுதியில் மாற்றி அமைக்கவோ முற்படும்போது சில விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- ✓ ஒரு வீட்டின் வடகிழக்கு பகுதியை சரி செய்யும் பொழுது அந்த வீட்டில் உள்ள மூத்தவருக்கு விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம்.
- ✓ வீட்டின் தென்கிழக்கு பகுதியை சரி செய்யும் பொழுது நீதிமன்ற வழக்குகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும், விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கும். மேலும் வீட்டு பெண்களுக்கு மன பாதிப்புகளும், உடல்நிலை பாதிப்புகளும் ஏற்பட காரணமாக இருக்கும்.
- ✓ வடமேற்கு பகுதியில் வாஸ்து குறைபாடு காரணமாக வீட்டை இடிக்கும்போதும், புதிய அமைப்புகள் ஏற்படுத்த முயலும்போதும் வீட்டின் உரிமையாளர் பொருளாதார வகையில் பாதிப்பு ஏற்பட்டு திடீர் தொழில் நஷ்டம், பணவரவு பாதிப்பு போன்றவை ஏற்படலாம்.
- ✓ வீட்டின் தென்மேற்கு பகுதியில் மாற்றம் செய்ய இடிக்கும்போதோ அல்லது புதிதாக கட்டும்போது அதில் வேலை செய்யும் தொழிலாளர்களான கொத்தனார், கட்டிட மேற்பார்வையாளர் மற்றும் பொறியாளர் போன்றோருக்கும், வீட்டின் உரிமையாளர்களுக்கும் பாதிப்புகள் ஏற்படலாம்.

- ✓ வீட்டை மாற்றி அமைக்கும்போதும், புதிதாக அமைக்கும்போதும் மேற்கண்ட விஷயங்களை கவனத்தில் கொண்டு ஒரு அனுபவமிக்க வாஸ்து ஆலோசகரின் துணைக்கொண்டு ஒரு நல்ல வாஸ்து பலமிக்க வீட்டை உருவாக்கி வாழ்ந்து வாழ்வில் பல வெற்றிகளை பெறுங்கள்.

## வீட்டில் வாஸ்து தவறுகளால் கடன் வருவதற்கான காரணம்

### தென்மேற்கு பகுதி :

- ✓ வீட்டின் தென்மேற்கில் மாஸ்டர் பெட்ரூம் தவிர மற்ற அமைப்புகள் வருவது.
- ✓ தென்மேற்கு பகுதியில் ஆறு, ஓடை, குளம், குட்டை, கிணறு, ஆழ்துளைக்கிணறு, மலக்குழி போன்ற பள்ளமான அமைப்புகள் வருவது.
- ✓ தென்மேற்கில் தலைவாசல் அமைப்புகள் வருவது.
- ✓ தெற்கு காலியிடம் அதிகமாகவும், வடக்கு காலியிடம் மிக மிக குறைவானதாகவும் உள்ள அமைப்பு.
- ✓ நம்முடைய இடத்திற்கு தெற்கு மற்றும் மேற்கில் உள்ள இடத்தை விலைக்கு வாங்குவது.
- ✓ தென்மேற்கில் தெருக்குத்து, தெருப்பார்வை போன்ற அமைப்புகள் வருவது.

### வடகிழக்கு பகுதி :

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் ரோடு உயரமாகுதல், மேம்பாலம் வந்துவிடுதல்.
- ✓ வடக்கு முழுவதும் மூடிய அமைப்பு, வடக்கு மற்றொருவருடைய கட்டிடத்தில் சேர்ந்த அமைப்பு.

### வடமேற்கு பகுதி :

- ✓ பள்ளமான அமைப்புகளான கிணறு, ஆழ்துளைக்கிணறு, தரைக்குகீழ் தண்ணீர் தொட்டி போன்றவைகள் வருவது.
- ✓ வடமேற்கில் வளர்ந்த கட்டிட அமைப்புகள் வருவது.
- ✓ கொடுக்கல், வாங்கலில் நாணயம் இழந்த நபர்களின் வீட்டு அமைப்பும் மேலே குறிப்பிட்ட சில அமைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்று அமைந்திருக்கும்.

## மதில்சுவர் உங்கள் வீட்டிற்கு மட்டுமல்ல... வாஸ்துபடி உங்களுக்கும் பாதுகாப்பு - எப்படி?

- ✓ ஒவ்வொரு வீட்டிற்கும் மதில்சுவர் என்பது மிக மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.
- ✓ ஒரு வீட்டில் நான்கு புறமும் உள்ள சுவரை தாய் சுவர் என்றும், அந்த வீட்டின் மதில்சுவரை தந்தை சுவர் என்றும் வாஸ்துவில் அழைக்கப்படுகிறது. வீட்டில் தாய், தந்தை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமாக வீட்டின் மதில்சுவர் உள்ளது என இதன் மூலம் அறியலாம்.
- ✓ நம் வீட்டிற்கு மதில்சுவர் இல்லாதபோது நமக்கு தென்மேற்கில் உள்ள வீட்டின் அமைப்பில் அவர்களின் வடகிழக்கு கீழ்நிலை தொட்டி நமக்கு தென்மேற்கு பள்ளமாக அமைந்து நமக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும்.

### மதில்சுவர் அமைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் :

- ✓ மதில்சுவர் சதுரம் அல்லது செவ்வகமாக இருக்க வேண்டும்.
- ✓ எந்த மூலையிலும் மதில்சுவர் நீண்டு இருக்கக்கூடாது.
- ✓ வடக்கிலும், கிழக்கிலும் அதிக காலியிடம் உள்ளவாறு அமைக்க வேண்டும்.
- ✓ தெற்கிலும், மேற்கிலும் குறைவான காலியிடம் இருக்க வேண்டும்.
- ✓ மதில்சுவர் அமைக்கும்போது தென்மேற்கு சற்று உயரமாகவும், வடகிழக்கு சற்று தாழ்வாகவும் அமைக்கலாம்.
- ✓ சிலர் மதில்சுவர் அமைக்கும்போது வீட்டின் ஜன்னலை விட உயரமாக அமைத்து விடுவார்கள். அப்படி அமைக்கும்போது வீட்டின் காற்றோட்டம் பாதிக்கும்.
- ✓ பக்கத்து வீட்டின் மதில்சுவரும், நமது சுவரும் பொதுசுவர் இல்லாமல் இருப்பது நன்மை பயக்கும்.

## பெண்களின் வளர்ச்சி வீட்டின் வாஸ்து குறையால் பாதிக்கப்படுமா?

- ✓ பெண் என்பவள் மிகவும் மென்மையானவள். அவள் மிகப்பெரிய தன்னம்பிக்கையின் அடையாளமாக திகழ்பவள். சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தன்னை தானே செதுக்கி கொள்பவள்.

- ✓ ஒரு வீட்டில் தென்கிழக்கு பாதிக்கப்பட்டால், அந்த வீட்டு பெண் உடல் ரீதியாக பாதிக்கப்படுவாள். உதாரணமாக, வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளும், கர்ப்பப்பை கோளாறுகளும் ஏற்படும்.

- ✓ வடமேற்கு அல்லது கிழக்கு பாதிப்பு இருந்தால், அந்த வீட்டில் மிக மோசமான மனநிலைக்கு அந்தப் பெண் தள்ளப்படுவார். உதாரணமாக, முயற்சி செய்யும் அனைத்து செயல்களும் தடைபடும். பொருளாதார ரீதியான பிரச்சனைகளையும் எதிர்கொள்ள நேரிடும். அவர்கள் எதிர்மறையான எண்ணங்களுக்கு தள்ளப்படுவார்கள். சில சமயங்களில் தற்கொலை, விபத்து போன்ற எதிர்மறை செயல்கள் நிகழும்.

- ✓ ஒரு வீட்டில் ஆண் தொடர்ந்து மிகப்பெரிய வெற்றியை பெறுகிறான் என்றால் அந்த வீட்டில் பெண் மிக பலம் பொருந்தியவளாக இருக்கிறாள் என்று அர்த்தம்.

## பரிகாரம் செய்தால் வாஸ்து குறை நீங்குமா?

- ✓ ஆதி கலையின் உன்னதமான கலை வாஸ்து. இது உடல், மனம், செயல் மூன்றும் ஒன்று சேர்ந்து பயணிக்க நம் முன்னோர்களால் வகுக்கப்பட்ட ஒரு சிறந்த சாஸ்திரம்.

- ✓ வாஸ்து மனிதனுக்கும், பஞ்சபூதத்திற்கும் நேரடியான தொடர்பை வீட்டின் மூலம் ஏற்படுத்தக்கூடிய ஒன்று.

- ✓ இயற்கையோடும், இயற்கை நியதியோடும் வாழ வழிவகுக்கும் வாஸ்துவில் பரிகாரம் என்பது நிச்சயமாக பலன் அளிக்காது.

- ✓ எப்படி மனிதனுக்கு உடலில் கை, கால், கண், மூக்கு, வாய் போன்ற உறுப்புகள் அதற்கான இடத்தில் இருந்தால்தான் அவை செயல்புரிய முடியுமோ, பயன்பெற முடியுமோ அதுபோன்றுதான் ஒரு வீட்டில் தென்கிழக்கில் சமையலறை, பூஜையறை தென்மேற்கில் மேல்நிலை உயரமான அமைப்பில் நீர் தேக்கத்தொட்டி, படுக்கையறை என வருவது இயற்கை விதித்த விதியாகும்.

- ✓ அதேபோல் வடகிழக்கில் பள்ளம், கிணறு போன்றவையும், வடமேற்கில் கழிவறை, மலக்குழி போன்றவையும் வர வேண்டும். இதை மீறி தவறாக இருந்தால் அதை சரி செய்ய வேண்டும்.

- ✓ நம் வீட்டிற்கும் வாஸ்து குறைபாடு நீக்க வேறு மாற்றாக எந்த பரிகாரம் செய்தாலும் உபயோகமில்லை, பண விரயம் மட்டுமே!

## வீட்டில் திருமணத்தடை இருப்பதற்கு வாஸ்து காரணமாக இருக்குமா?

- ✓ நிச்சயமாக வாஸ்து திருமணம் சார்ந்த பிரச்சனைகளுக்கு மிகப்பெரிய தீர்வை கொடுக்கும். ஒரு வீட்டில் ஆணுக்கு திருமணம் தடைபட்டாலும் அல்லது தள்ளிப்போனாலும் அந்த வீட்டில் வடக்கு, வடகிழக்கு சார்ந்த பிரச்சனைகள் இருக்கும்.

- ✓ அதேபோன்று பெண்ணுக்கு திருமணம் தள்ளிப்போகிறது என்றால் அந்த வீட்டில் கிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதி மிகப்பெரிய அளவில் வாஸ்துபடி பாதிப்பு இருக்கலாம்.

- ✓ உங்கள் வீட்டிலும் திருமணத்தடை உள்ளதா? - கீழ்க்கண்ட அமைப்புகளில் தங்களின் வீடும் இருக்கிறதா? என தெரிந்து கொள்ளுங்கள்.

1. வடக்கு மற்றும் கிழக்கில் போதிய திறப்புகள் இல்லாமல் மூடிய அமைப்பில் இருப்பது.

2. தெற்கிலும், மேற்கிலும் அதிக இடம் விட்டு கிழக்கிலும், வடக்கிலும் குறைந்த இடத்துடன் வீட்டை அமைப்பது.

3. குடும்ப தலைவர் மற்றும் தலைவி பயன்படுத்த வேண்டிய படுக்கையறை தென்மேற்கு பகுதியில் இல்லாமல் இருப்பது.

4. தெரு தாக்கம், தெருப்பார்வை போன்ற அமைப்புகள் தவறான இடத்தில் வருவது.

5. வீட்டின் பூஜையறை அல்லது சமையலறை வடகிழக்கில் அமைத்து இருப்பது.

6. வீட்டின் வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதியில் மாடிக்கு செல்ல படிக்கட்டுக்கான அமைப்புகள் வருவது.

7. தென்கிழக்கு அல்லது வடகிழக்கு பகுதியில் போர்டிக்கோ அமைத்து இருத்தல்.

8. வீட்டிற்கான கிணறு, ஆழ்துளை கிணறு, நிலத்தடி நீர்த்தொட்டி போன்ற அமைப்புகள் தென்கிழக்கு அல்லது வடமேற்கில் வருவது.

இது மட்டுமல்லாமல் மேலும் சில தவறான அமைப்புகள் இருக்கும்போது திருமணத்தடை ஏற்படலாம்.

## வாடகை வீட்டிற்கு வாஸ்து மற்றும் உளவியல் தீர்வுகள்

- ✓ வாடகை வீடாக இருந்தாலும் குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிலில் முன்னேற்றம், சரளமான பணவரவு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் இவையெல்லாம் இருந்தால்தான் வீட்டில் உள்ளவர்கள் நிம்மதியாக இருக்க முடியும். இதெல்லாம் கிடைக்க நாம் இருக்கும் வீட்டையும், சுற்றுச்சூழலையும், சுத்தமாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

- ✓ வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு வாஸ்து சரியில்லாமல் இருந்தால், நீங்கள் அடிக்கடி பார்க்கும் இடத்தில் மீன்தொட்டி வாங்கி வையுங்கள். சின்னச் சின்ன வண்ண மீன்கள் நீரில் துள்ளி துள்ளி திரியும். அவை, வீட்டின் தீயசக்திகளை விரட்டி, நம் மனதில் மகிழ்ச்சியை கொண்டு வரும்.

- ✓ மூன்று மாதத்திற்குள் ஒரு பொருளை நீங்கள் பயன்படுத்தாத பட்சத்தில் அவற்றை பிறகு தேவைப்படுமே என வீட்டில் அடைத்து வைக்காதீர்கள்.

- ✓ வீட்டில் வெளிச்சமும், காற்றோட்டமும் மிக முக்கியமான இரண்டு அம்சங்கள் ஆகும். அவற்றுக்கு எந்த தடையும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

- ✓ தென்கிழக்கில் சமையலறையும், தென்மேற்கில் பணப்பெட்டி வைக்கும் அறையும் இருக்கும் விதமான வீட்டை, வீடு தேடும்போதே கவனத்தில் வைத்துக்கொண்டு பாருங்கள். வாடகை வீடுதானே என்று அலட்சியமாக வீடு தேடாதீர்கள். உங்களுக்கு சொந்த வீடு அமையும் வரை அதுதான் உங்கள் சொந்த வீடென பாவியுங்கள். அதுவே உங்களுக்கு சொந்த வீடாக அமையலாம்.

- ✓ வீட்டில் எப்போதும் உங்களின் மனதிற்கு பிடித்த இசைநயமிக்க பாடல்களை ஒலிக்கச்செய்வது நல்ல சூழ்நிலையையும், மனநிலையையும் உருவாக்கும்.

- ✓ பௌர்ணமி அன்று திருச்செந்தூர் சென்று முருகனை வழிபடுவது பெரும்பலனை அளிக்கும். கடலில் குளித்தால் நமக்கு வாழ்க்கை மாற்றம் நிச்சயம் வந்தே தீரும்.

- ✓ காலையில் எழுந்ததும் மனைவியின் நெற்றியை பார்ப்பதும், கணவனின் முகத்தை மனைவி பார்ப்பதும் சிறப்பான விஷயம். கணவன், மனைவி மனம்விட்டு பேசுவது மிகவும் முக்கியம். ஒருவருக்கொருவர் அன்பாக இருக்க வேண்டும். கணவன்தான் மனைவியிடம் நிபந்தனையில்லாத அன்பை வைக்க வேண்டும். ஒருநாளில் அடிக்கடி மனைவிக்கு 'நன்றி' எனும் வார்த்தையை சொல்ல வேண்டும்.

- ✓ வாடகை வீட்டை தற்போதைய சூழ்நிலையில் உடனே மாற்ற முடிவதில்லை என்றாலும், வாஸ்து சரியில்லாத வீடாக இருந்தாலும், மகிழ்ச்சியை நாம்தான் நம் வீட்டில் கொண்டு வந்து நிரப்ப வேண்டும்.

## வீட்டில் பணப்பெட்டியை எந்த இடத்தில் வைத்து பணத்தை எடுத்து செலவு, வரவு செய்ய வேண்டும்?

- ✓ வீட்டின் தென்மேற்கில் உள்ள அறையில் தான் நாம் பணப்பெட்டியை வைக்க வேண்டும். 'பணத்தை எப்போதும் மரப்பெட்டியில் தான் வைத்து எடுக்க வேண்டும். எதையும் தேக்கி வைத்துக்கொள்ளும் என்பதால்தான் 'தேக்கு மரம்' என்று பெயர் வந்தது. அதன் உறுதியான நிலைத்தத்தன்மை நம்மிடம் பணத்தை தங்கிட செய்யும்.'

- ✓ வாஸ்துபடி பணம் எப்போதும் ஒருவரின் கையில் தவழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் வீட்டின் வடக்குச்சுவர் ஜன்னலுடன் இருக்க வேண்டும். கதவு என்பது மூடப்பட்டிருக்க வேண்டும். ஜன்னல் எப்போதும் திறந்தே இருக்க வேண்டும். காற்றோட்டமும், சூரியவெளிச்சமும் வாஸ்து சாஸ்திரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால், ஜன்னல்கள் திறந்திருப்பது நல்லது.

- ✓ பணம் எப்போது வந்தாலும் அதை எந்த காரணத்தை கொண்டும் பூஜையறையில் வைக்காதீர்கள். பணம் நூறு, ஆயிரம், லட்சம் எனப் பல பேர்களின் கைகளுக்கு சென்று மாறி வந்திருக்கலாம். பூஜையறையை நாம் தெய்வத்தன்மையுடன் வைத்திருப்பதால் அதை பூஜையறையில் வைக்க வேண்டாம்.

- ✓ பணம் நம் கைக்கு வருகிறதென்றால் அது நம் வீட்டிற்குள் வந்து பறந்துபோகும் சிட்டுக்குருவியை போன்றது. அதை சுதந்திரமாக பறக்கவிடுங்கள். நல்ல விஷயங்களுக்கு தாராளமாக செலவு செய்யுங்கள்.

- ✓ உங்களை எப்போதும் செல்வந்தராகவே எண்ணிச் செலவு செய்யுங்கள். அப்போதுதான் பணம் உங்களை தேடி மீண்டும் மீண்டும் வரும்.

- ✓ அளவுக்கு மீறி பணம் வந்தாலும் 'சிக்கனமாக இருக்கிறேன்' என்று பணத்தை இறுக்கிப்பிடித்து வைத்திருந்தால், அதை அவர்கள் ஒருநாளும் அனுபவிக்கமாட்டார்கள். வேறொருவர்தான் அந்த பணத்தை செலவு செய்து வாழ்வார்.

- ✓ உங்களுக்கு வருகிற பணத்தை சிவப்பு நிறத் துணியில் சுற்றி மரப்பெட்டியில் வைக்கும்போது, அந்தப் பணம் பல மடங்காக பெருகும்.

- ✓ பணத்தை வைக்கும்போது சில்லறையாக வைக்காதீர்கள். நிறை நிறையோடு சேரும், குறை குறையோடு சேரும் என்பதால், 2000 ரூபாய் நோட்டாக வையுங்கள்.

- ✓ பணத்தை ஒருவரிடம் கொடுக்கும்போது பணத்தை மடித்துக் கொடுக்க வேண்டும். மடிப்பு அவர்களின் பக்கமும் திறப்பு நம்முடைய பக்கமும் இருக்கும்படி கொடுங்கள்.

- ✓ பணப்பெட்டியில் எப்போதும் ஒரு நறுமணம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். பணத்திற்கு நாம் அடிமை ஆகாமலும் நமக்குப் பணத்தை அடிமையாக்காமலும் ஒரு நண்பனைப்போல் பணத்தை பாவித்தோமென்றால், பணம் எப்போதும் நம்மைவிட்டு போகாமல் தங்கியிருக்கும்.

## வீட்டில் வாஸ்து கோளாறுகளை சரிசெய்வது எப்படி?

- ✓ நாம் வாழும் வீடு சொந்த வீடாக இருந்தாலும் சரி, வாடகை வீடாக இருந்தாலும் சரி வாஸ்து குறைபாட்டுடன் இருந்தால், அதை சரிசெய்து மாற்றியமைத்து வெற்றி பெறலாம். சொந்த வீடாக இருந்தால், வீட்டின் தவறான பாகத்தை இடித்து புதிதாக கட்டி சரிசெய்து விடமுடியும்.

- ✓ வாஸ்து குறைபாடுகளுக்கு பரிகாரங்கள் என்று எதுவும் கிடையாது.

- ✓ பிரபஞ்சம் நாம் எதை தீவிரமாக நினைக்கின்றோமோ அதை நமக்கு தரும். படைக்கப்பட்டவை யாவும் படைத்தவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தே நடக்கும்.

- ✓ நாமிருக்கும் வீட்டில் ஏதோ ஒரு மூலையிலோ, பிரம்மஸ்தலத்திலோ, ஜன்னல் வைத்ததிலோ, தெருக்குத்திலோ தவறு இருக்கிறது என்றால் அதை எப்படி சரிசெய்ய வேண்டும்?

- ✓ தானம், நிதானம், சமாதானம் என்ற மூன்று மந்திரங்களை நாம் கடைபிடிக்க வேண்டும்.

### தானம் :

- ✓ நம்மால் முடிந்தளவு நம் சக்திக்கு உட்பட்டு தானம் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு கொடுக்குமளவு என்னிடம் பணமில்லை என்றே நாம் பெரும்பாலான நேரங்களில் நினைக்கிறோம். யாசகம் பெற்று வாழ்பவர்கூட தெருவோரமாக உட்கார்ந்து சாப்பிடும்போது தன்னிடம் வரும் நாய்க்கு சிறிதளவு உணவை அளிக்கிறார். அதனால் நம்மால் முடிந்தளவு தானம் கொடுத்தால்கூட போதும். அதனுடைய பலன் மிகுதியாக இருக்கும்.

### நிதானம் :

- ✓ சென்னையிலிருந்து, திருச்செந்தூருக்கு போகவேண்டுமென்றால் உடனே போய்விட முடியாது. ஒவ்வொரு அடியாகத்தான் கடந்து செல்ல வேண்டியிருக்கும். அதனால் நமக்கு வேண்டியது நிதானம். பொறுமையும், சகிப்புத்தன்மையும் உள்ளவர்களை காலம் ஒருநாளும் கைவிட்டதில்லை.

சமாதானம் :

- ✓ நம் மனதிற்குள் இருந்தால்தான் நம்மால் மற்றவர்களுக்கு அதை தர முடியும். அந்த சமாதானம் எங்கிருந்து வரும்? போட்டியும், பொறாமையும் நிறைந்த உலகம் நம் மனதில் வன்மத்தை விதைக்கும். ஆனால், அதை வேரோடு களைந்தெறிந்துவிட்டு தீமை செய்தவர்களையும் மனதார வாழ்த்துங்கள். உங்களுக்கு பெருவாழ்வு நிச்சயம் கிடைக்கும்.

நல்ல மனையை தேர்வு செய்வது எப்படி?

- ✓ வீடாக இருந்தாலும் சரி, தொழில் நிறுவனமாக இருந்தாலும் சரி... அவற்றை கட்டும்போது சில அடிப்படையான வாஸ்து விதிகளை கடைபிடிப்பது நல்லது. அதுவே அந்த இல்லத்தில் இருப்பவர்கள் சுபிட்சமாக வாழ்வதற்கும், அந்த நிறுவனம் வளர்ச்சியடையவும் வழிவகை செய்யும். வாஸ்துபடி மிக முக்கியமாக கடைபிடிக்க வேண்டிய அடிப்படை விதிகள் உண்டு.
- ✓ காலியாக உள்ள ஒரு மனையில் அமைக்கப்படும் கட்டிடம், சதுரம் அல்லது செவ்வகமாக இருத்தல் அவசியம்.
- ✓ மனையின் தெற்கு மற்றும் மேற்கு பகுதியைவிட, வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் அதிக அளவிலான காலியிடம் இருத்தல் அவசியம்.
- ✓ மனையின் வடகிழக்கு பகுதி பள்ளமாகவும், கனமில்லாமலும் இருக்க வேண்டும்.
- ✓ தென்மேற்கு பகுதி உயரமாகவும், கனமாகவும் இருக்க வேண்டும்.
- ✓ அதேபோல் தலைவாசல் கட்டாயம் உச்சத்தில்தான் இருக்க வேண்டும்.

## வாஸ்து அடிப்படையில் ஒரு மனையை தேர்வு செய்வது எப்படி?

- ✓ மனையை வாங்கும்போது அதன் திசையை அறிந்து வாங்குவது சிறந்தது. மனையின் திசையை, திசைக்காட்டி மூலம் அறிந்துக்கொள்ளலாம். கிழக்கு மற்றும் வடக்கு பார்த்த மனையை வாங்குவது சிறந்தது. ஏனெனில், கிழக்கு மற்றும் வடக்கு பார்த்த மனைகளில் வாஸ்துபடி கட்டிடம் கட்டுவது சுலபமாக இருக்கும்.
- ✓ இயற்கையாகவே ஓர் இடத்தின் வடகிழக்கு பகுதி பள்ளமாகவும், தென்மேற்கு பகுதி உயர்ந்தும் இருந்தால், அந்த மனை விசேஷமானது எனலாம். மேலும், மனையின் வடகிழக்கு பகுதியில் இயற்கையாகவே ஏரி, குளம், பொதுக்கிணறு ஆகியவை இருந்தால் நல்லது.

- ✓ மனையின் தென்மேற்கு பகுதியில் குன்றுகள், தொலைப்பேசி கோபுரம், உயர்ந்த மரங்கள் போன்றவை இருந்தால் மிகவும் சிறப்பு. வீடு கட்டும் முயற்சியில் இறங்கும்போது, இப்படிப்பட்ட விதிகளையெல்லாம் கவனித்து அதற்கேற்ப மனை வாங்கி வீடு கட்டினால், நம் குடும்பமும், நாமும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம்.

- ✓ ஒரு மனைக்கு தெருக்குத்து முக்கிய பங்கு வகிக்கிறது. மேற்கண்ட அனைத்தையும் கவனத்தில் கொள்ளும் முன் நல்ல தெருக்குத்து உள்ளதா? என பார்த்து மனையை தேர்வு செய்ய வேண்டும்.

## புது வீடு கட்ட இருக்கிறீர்களா? - உங்களுக்கான சில வாஸ்து தகவல்கள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் சொந்த வீடு கட்டுவது என்பது வாழ்நாள் கனவாக, லட்சியமாக இருக்கிறது. அவ்வாறு கட்டும் வீடு நல்ல வாஸ்து அமைப்பில் இருக்கும்போது அந்த வீடு, வீட்டில் உள்ளவர்களை அடுத்த கட்டத்திற்கு முன்னேற அழைத்துச் செல்லும். வாஸ்து அமைப்பு சரியில்லாதபோது அவர்களை பல பாதிப்புகளுக்கு உட்படுத்தும்.

வீடு கட்டுவதற்கு முன்பாக கீழ்க்கண்ட விஷயங்களை கவனத்தில் கொள்ளும்போது சிறப்பானதொரு வாஸ்து அமைப்பில் வீடு அமையும் :

- ✓ மனை சதுரம் அல்லது செவ்வகமாக இருத்தல்
- ✓ மனைக்கு நல்ல தெருக்குத்து, தெருத்தாக்கம் இருத்தல்
- ✓ வடகிழக்கு தாழ்வு - குளம், கிணறு, நீர்த்தொட்டி, ஆழ்துளைக்கிணறு
- ✓ தென்மேற்கு உயரம் - மலை, செல்பேசி கோபுரம், மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி
- ✓ வடமேற்கில் கழிவுநீர் தொட்டி, கழிவறை
- ✓ தென்கிழக்கில் சமையலறை
- ✓ தென்மேற்கில் படுக்கையறை
- ✓ வீட்டின் வாசல்கள் உச்சப்பகுதியில் வருதல்
- ✓ வடக்கிலும், கிழக்கிலும் அதிக காலியிடம்
- ✓ தென்கிழக்கில் பூஜையறை
- ✓ வீட்டின் பிரம்மஸ்தானம் பாதிப்பில்லாமல் இருத்தல்

- ✓ வீடு, மனையை பெண்களின் பெயரில் பதிவு செய்தல்
- ✓ வீட்டின் கட்டிட வரைபடம் வாஸ்து அமைப்பில் இருத்தல்
- ✓ வடக்கிலும், கிழக்கிலும் சூரிய ஒளி வரும்படி அதிக ஜன்னல் இருத்தல், மேலும் 24 மணி நேரமும் திறந்து இருத்தல்.
- ✓ வீட்டிற்கு பொது சுவர் இல்லாமலும், சுற்று சுவருடன் இருக்குமாறு அமைத்தல்.
- ✓ வீடு கட்ட துவங்கும் முன் எந்த வேலையை முதலில் தொடங்க வேண்டும் என தீர்மானித்தல்.
- ✓ நமது எண்ணம், சொல், செயல் ஒருங்கிணைத்தல்
- ✓ மேற்க்கண்டவை போல வாஸ்து சூட்சமங்களை அறிந்து செயல்படுங்கள்.

## தொழில் செய்யும் இடம் எப்படி இருக்க வேண்டும்?

- ✓ போட்டி நிறைந்த இந்த உலகில் ஒரு மனிதனை உயர்ந்தவராக பார்க்க வைப்பதும், அவருடைய புகழ் பாட வைப்பதும், அவரிடம் உள்ள பணம்தான் முடிவு செய்யும்.
- ✓ பணம் ஒருவர் செய்யும் தொழிலின் மூலமாக வருகிறது என்றால் அதன் மதிப்பு மிக மிக உயர்ந்ததாக இருக்கும்.
- ✓ தொழில் செய்யும் தொழிற்சாலையோ அல்லது கடையோ எப்படி இருக்க வேண்டும்?
- ✓ ஒரு தொழில் நிறுவனம் நல்ல தெருக்குத்து உள்ள அமைப்பில் இருப்பது சாலச் சிறந்தது. உதாரணமாக வடகிழக்கு, கிழக்கு அல்லது வடக்கு போன்ற அமைப்புகள் இருக்க வேண்டும்.
- ✓ மேலும், கீழ்கண்ட அமைப்புகள் இருப்பது சிறப்பு.
- ✓ தென்மேற்கில் பணம் சார்ந்த விஷயங்கள் செய்யவும், வடமேற்கு உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் பொருட்களை அடுக்கி வைக்கும் இடமாகவும் இருத்தல்.
- ✓ ஒரு தொழிற்கூடமாக இருக்குமேயானால் மிக பாரமான பொருட்கள் முடிந்தவரை தென்மேற்கு பகுதியில் இருப்பது நல்லது.

- ✓ மின் சாதனம் சம்பந்தமான அனைத்து விஷயங்களும் தென்கிழக்கு அல்லது வடமேற்கு பகுதியில் இருப்பது நல்லது. தொழிற்சாலையாக இருந்தால் அவர்களுடைய கூரை அமைப்பு வடக்கு, கிழக்கு தாழ்வாகவும் தெற்கு, மேற்கு பகுதிகள் உயர்வாக அமைப்பது மிக மிக நல்லது. வடகிழக்கு மிக சுத்தமாக வைத்திருப்பது நல்லது.

- ✓ ஒரு சில நிறுவனங்கள் நல்ல நிலையில் இயங்கி கொண்டிருக்கும். ஆனால், பொருளாதார நிலையில் மிக மோசமான சூழ்நிலையை சந்தித்துக் கொண்டிருப்பார்கள். உதாரணமாக, அதிக கடன் சுமை அல்லது அதிகம் முதலீடு செய்து கொண்டே இருப்பது போன்றவை இருக்கும்.

- ✓ இதற்கான காரணத்தை நாம் ஆராய்ந்தோம் என்றால் அவர்களுக்கு ஒரு தவறான தெருக்குத்து அல்லது தெற்கிலும், மேற்கிலும் ஏதேனும் பாதிப்பு இருக்கும். உதாரணமாக வடமேற்கு, வடக்கு தெருக்குத்து அல்லது தெருப்பார்வையோ இருக்கும்.

- ✓ மேற்கண்ட நிகழ்வுகள் நிச்சயம் நடக்க வாய்ப்புள்ளது. ஆகையால், தொழிற்கூடம் நல்ல அமைப்பில் இருப்பது வெற்றிக்கு வழி வகுக்கும்.

## ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண்-அப்போ முன்னால் இருப்பது வாஸ்துவா?

- ✓ இந்த உலகில் வெற்றி என்பது ஆண்களுக்கு மட்டும் சொந்தமா? என்றால் கேள்விக்குறிதான். ஏனென்றால் வெற்றி என்பது ஆண்களுக்கு ஒவ்வொரு கட்டங்களிலும் அவர்களது வாழ்க்கையில் கட்டாயம் ஆக்கப்படுகிறது.

- ✓ அதனால்தான் ஆண்கள் வெற்றிக்காக மிகப்பெரிய சவால்களையும், சந்தர்ப்பங்களையும், சூழ்ச்சிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

- ✓ முதற்கட்டமாக கல்வி பயிலும் சமயத்தில் வெற்றி கட்டாயம் கிடைக்க ஒருவரது வீட்டில் வடகிழக்கு மூலை சரியானதாக இருத்தல் வேண்டும். அடுத்தக்கட்டமாக வேலை கிடைத்து பணம் ஈட்ட ஒருவரது வீட்டில் வடக்கு, கிழக்கு, வடமேற்கு பகுதிகள் சரியாக இருத்தல் வேண்டும்.

- ✓ அடுத்ததாக மிக முக்கியமான புதிய வாழ்க்கையின் தொடக்கம் என்று சொல்லக்கூடிய திருமண வாழ்க்கை. எந்தவொரு இன்னல்களும் இல்லாமல் சந்ததிகள் மிகப்பெரிய வெற்றியை பெற ஒருவரது வீட்டில் தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு சரியாக இருத்தல் வேண்டும்.

- ✓ மேலும் ஒருவரது இருப்பிடத்தில் உள்ள ஒவ்வொரு திசையும், அதன் அமைப்பும் பல்வேறு காலக்கட்டத்தில் அவருக்கு வெற்றியை மிகப்பெரிய அளவில் பெற்றுக் கொடுக்கும்.

- ✓ ஒரு குடும்பத்தில் ஆண் வெற்றி பெற வாஸ்து முறைப்படி அமைந்த இருப்பிடமும், அதன் மூலம் அவரின் பின்னால் ஒரு பெண்ணும் இருப்பாள்.
- ✓ அவ்வாறாக வெற்றி பெற்றால் அவரை சுற்றி இருக்கும் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் மிக சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வாஸ்து வழி வகுக்கும்.

## தென்மேற்கில் படுக்கையறை - நாம் இதில் காட்ட வேண்டிய மிகுந்த அக்கறை

- ✓ ஒரு மனிதனுக்கு தூக்கம் என்பது மிக முக்கியமானது. ஒருவருடைய உடல் உழைப்பு, மனஅசதியை போக்க ஆழ்ந்த நித்திரை நிச்சயம் தேவை.
- ✓ நித்திரை குறைந்தால் அவர் மிக மோசமான நிலைக்கு தள்ளப்படுவார். ஒரு சிலர் எனக்கு தூக்கம் சரியாக இல்லை என்றும், நிம்மதி போய்விட்டது என்றும் கூறுவார்கள்.
- ✓ அப்போதே நாம் முடிவு செய்து கொள்ளலாம். அவர்கள் வீட்டின் தென்மேற்கு பகுதியில் உறங்குவது இல்லை அல்லது தென்மேற்கு சம்பந்தமான பிரச்சனைகள் அவர்களுக்கு இருக்கும் என்று.
- ✓ ஒரு வீட்டின் குடும்ப தலைவர், தலைவி இருவரும் தென்மேற்கு அறையில்தான் உறங்க வேண்டும்.
- ✓ தென்மேற்கு பகுதி மட்டுமே ஒருவருடைய சந்ததியை உருவாக்கும். மேலும், அவருக்கு பணம் மற்றும் புகழை கொடுக்கும்.
- ✓ ஆகையால் தென்மேற்கு மூலையில் படிக்கட்டுகள், கழிவறை அல்லது சமையலறை இருந்தால், அது அந்த வீட்டின் ஆண்மகனை பாதிக்கும்.
- ✓ குடும்பத் தலைவர் வீட்டின் தென்மேற்கு அறையை பயன்படுத்தாதபோது வீட்டில் சில பாதிப்புகளை ஏற்படுத்தும். அவை,
- ✓ கணவன்-மனைவி உறவில் விரிசல்
- ✓ அடிக்கடி சண்டை ஏற்படுதல்
- ✓ இல்லற சுகம் இல்லாமல் இருத்தல்
- ✓ குழந்தை பிறப்பு தள்ளி போகுதல் அல்லது இல்லாமல் இருத்தல்

- ✓ பணம் சம்பந்தமான பிரச்சனைகள்
- ✓ வீட்டில் நிம்மதி இல்லாமை
- ✓ உடல் ஆரோக்கிய பாதிப்புகள் ஆகியவை ஏற்படும்.
- ✓ தென்மேற்கு அறையில் வடமேற்கு பகுதியில்தான் கழிவறை அமைப்பு இருக்க வேண்டும்.
- ✓ தென்மேற்கு அறையில் தென்கிழக்கு பகுதியில் கழிவறை இருந்தால் குடும்ப தலைவியை பாதிக்கும்.
- ✓ தென்மேற்கு மூலையில் வடக்கு பார்த்த அமைப்பில் பீரோ வைக்க வேண்டும்.
- ✓ தென்மேற்கு பகுதியில் எந்த வாஸ்து குறைபாடும் இல்லையென்றால் அந்த வீட்டில் நிச்சயம் அனைத்து சகல செல்வங்களும், சந்தோஷமும் நிறைந்து காணப்படும். மேலும், கணவன்-மனைவி உறவு மிக சிறப்பாக இருக்கும்.

## பூஜையறை தென்கிழக்கில் மட்டும்தான் அமைக்க வேண்டுமா ஏன்? எதற்காக? எப்படி?

- ✓ கடவுளை அனைத்து இடங்களிலும் வழிபடலாம் என்றாலும் குடியிருக்கும் வீட்டில் உள்ள பூஜையறையை வாஸ்துபடி அமைத்தால்தான் ஒரு குடும்பம் மிக செழிப்பாகவும், சந்தோஷமாகவும் இருக்கும்.
- ✓ வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்ய வேண்டும். அப்படி வாசம் செய்தாலும் அவள் அந்த வீட்டில் குடியிருக்க சரியான இடம் வேண்டும்.
- ✓ தனி வீடாக இருந்தாலும் சரி, அடுக்குமாடி குடியிருப்பாக இருந்தாலும் சரி, வீட்டில் பூஜையறையை தென்கிழக்கிலும், சுவாமி படங்களை கிழக்கு நோக்கி இருக்கும்படியும் அமைக்க வேண்டும்.
- ✓ தென்கிழக்கு என்பது பொதுவாக பெண்களின் மனம் மற்றும் தன்னம்பிக்கை சம்பந்தப்பட்ட இடமாகும். ஆகையால்தான் தென்கிழக்கில் சமையலறை அமைக்க அறிவுறுத்தப்படுகிறது.
- ✓ அப்படி அமைக்கும்போது பெண்கள் மிக மகிழ்ச்சியாகவும், புத்துணர்ச்சியுடனும் இருப்பார்கள். அத்துடன் அங்கு பூஜையறை சேர்த்து அமைக்கப்படும்போது இவை அனைத்துடன் மகாலட்சுமியின் அருளும் கிடைக்கப்பெறும்.

- ✓ அதனால் அந்த குடும்பம் மிக சந்தோஷத்துடன் மிகப்பெரிய மகிழ்ச்சியும் பெற்று வாழ்வார்கள். பொதுவாக சிலர் வாஸ்துபடி பூஜையறை வடகிழக்கில் அமைப்பதுதான் நல்லது எனவும், அதுவே ஈசானிய மூலை, ஈசனுக்கு உரியது. அதனால் அங்கு வருவதே சிறப்பு என கூறுவர்.

- ✓ ஆனால் பூஜையறையில் விளக்கு ஏற்றும்போது வடகிழக்கில் நீர் சார்ந்த அமைப்பு மட்டுமே வர வேண்டிய இடத்தில் நெருப்பு இருக்கும்போது அந்த வீட்டில் உள்ள ஆண்கள் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

- ✓ அதனால்தான் தென்கிழக்கில் சமையலறை மற்றும் பூஜையறை வருவது மேன்மை தரும் என கூறுவர். தென்கிழக்கில் சமையலறை அமைக்க முடியாதவர்கள் வடமேற்கில் அமைத்துக்கொள்ளலாம்.

- ✓ நிச்சயம் பூஜையறையை வடகிழக்கு மற்றும் தென்மேற்கில் அமைக்கக்கூடாது. ஏனென்றால் அந்த வீட்டின் ஆண், பெண் இருவரையும் அது போன்ற அமைப்புகள் பெரிய அளவில் பாதிப்பை கொடுக்கலாம்.

## ஜன்னல்களின் பங்கு இவ்வளவு உண்டா?

- ✓ நிச்சயம் எப்படி மனிதனின் உடலில் கண், காது, மூக்கு எவ்வளவு முக்கியமோ, அதைப்போல் வாஸ்துவில் ஜன்னலும் முக்கியமான ஒன்று. சில சமயங்களில் வீட்டில் உள்ளவர்களின் பணம், திருமணம், உடல் உபாதைகள் போன்றவற்றை தீர்மானிப்பதில் ஜன்னல்கள் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது.

- ✓ உதாரணமாக, வடக்கு பகுதியில் ஜன்னல் என்பது வருமானத்தை குறிப்பது. வருமானம் என்றாலே முதலில் அது ஆண்கள் சம்பந்தப்பட்டது.

- ✓ கிழக்கு பகுதி என்பது பணம், குணம் சம்பந்தப்பட்டது. இவை வீட்டு பெண்களுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளது. ஆகையால் வடக்கிலும், கிழக்கிலும் அதிக அளவில் ஜன்னலின் பங்கு உண்டு.

- ✓ அதேபோல் வடகிழக்கில் ஜன்னல் அமையப்பெற்றால் அந்த வீட்டில் நிச்சயம் எந்தவொரு தீய சக்தியும் உள்ளே வர வாய்ப்புகள் இல்லை. மேலும், அந்த வீட்டில் உள்ள ஆண் மற்றும் பெண்ணுக்கு எப்போதும் எந்தவொரு தடையும் நிச்சயம் ஏற்படாது. திருமணம், வேலை, பணம், குழந்தை பாக்கியம் போன்றவை மிக விரைவாகவும், விமர்சையாகவும் நடைபெறும்.

- ✓ அதேபோல் வடக்கில் ஜன்னல்கள் அமைக்கும்போது அது வடமேற்கு பகுதியில் சென்று விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தெற்கிலும், மேற்கிலும் ஜன்னல்கள்

அமைக்க வேண்டும். ஆனால், அது தவறான அமைப்பில் அமைத்துவிட்டால் அது மிகப்பெரிய தீங்கை விளைவித்துவிடும்.

## நல்ல மனை - உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு நிற்கும் துணை

- ✓ இந்த உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் தனக்கான இருப்பிடத்தை தேர்வு செய்கிறது. அதுபோல மனிதனும் தனக்கான இருப்பிடமான வீட்டை தேர்ந்தெடுப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறான். மேலும், அதுவே தனது வாழ்நாள் சாதனையாகவும், வெற்றியாகவும் காண்கிறான்.

- ✓ நல்ல வீடு அமைய சிறந்த மனையை தேர்ந்தெடுப்பது மிக முக்கியமானதாகும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் மனை ஒரு நல்ல வாஸ்துபடி வீடு அமைப்பதற்கு முதல் படியாக அமைகிறது.

- ✓ மனையை தேர்வு செய்யும்போது சில முக்கிய விஷயங்களை கவனிக்க வேண்டியுள்ளது.

- ✓ மனையை தேர்வு செய்யும்போது அதன் வடிவம், சதுரம் அல்லது செவ்வகமாக இருக்க வேண்டும். வேறு வடிவில் வாங்கினாலும் அதனை கட்டுவதற்கு முன் சதுரம் அல்லது செவ்வகமாக அமைத்துவிட்டு மற்ற இடத்தை உபயோகப்படுத்தாமல் விட்டுவிட வேண்டும்.

- ✓ மனைக்கு வடகிழக்கு பகுதி பள்ளமாகவும், தென்மேற்கு பகுதி உயரமாகவும் இருக்க வேண்டும். இயற்கையாகவே தென்மேற்கு பகுதியில் குன்றுகளோ, கோவில் கோபுரமோ, தொலைபேசி கோபுரமோ, உயர்ந்த மரங்களோ அமைந்தால் சிறந்தது. வடகிழக்கு பகுதியில் இயற்கையாகவே ஏரி, குளம், பொதுக்கிணறு அமைந்தால் உத்தமம்.

- ✓ மனைக்கு கிழக்கு திசையிலும், வடக்கு திசையிலும் தெருக்கள் இருக்க வேண்டும். அந்த தெருக்கள் மனைக்கு வடகிழக்கு கிழக்கிலோ அல்லது வடகிழக்கு வடக்கிலோ தெருக்குத்து அமையும் வகையில் இருத்தல் வேண்டும். அவ்வாறு அமையப்பெற்று இருந்தால் அந்த மனையை வாங்குவது நல்லது.

- ✓ நன்மை தராத தவறான தெருக்குத்து எனப்படும் வடமேற்கு-வடக்கு, தென்கிழக்கு-கிழக்கு, தென்மேற்கு-தெற்கு, தென்மேற்கு-மேற்கு இந்த திசைக்கு எதிரே தெரு போனால் அந்த மனையை 100% நிச்சயமாக வாங்கக்கூடாது. மனை சரியாக அமைப்பில் இல்லாவிட்டால், அதில் எவ்வளவு சரியான வாஸ்து முறைப்படி வீடு கட்டினாலும், நற்பலன்களை தராது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

- ✓ வாஸ்து என்பது இயற்கையை அனுசரித்து செல்லும் எண்ண மாற்றமே. உதாரணமாக, உங்களது வீட்டின் கிழக்கு பகுதி இயற்கையோடு ஒத்த வாஸ்து அமைப்பில் இருந்து

சூரிய ஒளியானது வாஸ்து முறைப்படி உங்கள் வீட்டில் உட்புகுந்தால் உங்கள் வாழ்வில் எல்லாம் சாத்தியமே.

## வீட்டில் வாஸ்து நிறைகளும், குறைகளும் எப்படி அறியலாம்?

- ✓ வீடு கட்டுவது என்பது ஒருவருடைய வாழ்க்கையில் மிகப்பெரிய லட்சியமாக இன்றைக்கு மாறிவிட்டது. கையில் இருக்கும் பணத்தை வைத்து வீடு கட்ட முடியாத நிலையில் கடன் வாங்கியாவது வீடு கட்டும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதுபோன்று கடன் பெற்று கட்டும் வீடுகளில் வடமேற்கு அல்லது தென்மேற்கு பகுதிகளில் பாதிப்பு இருக்கும்.

- ✓ அந்த சூழ்நிலையில் வீடு கட்டுவதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்ளும். அதேபோன்று கட்டி முடித்த பிறகு கடனை செலுத்த முடியாமல் அந்த வீட்டை விற்கவும் நேரிடலாம். உதாரணமாக, வடமேற்கில் உள்மூலை படிக்கட்டு அல்லது தென்மேற்கில் கழிவுநீர்த்தொட்டி அமைத்துவிட்டால் இதுபோன்ற பாதிப்பு ஏற்படும்.

- ✓ ஒரு வீட்டில் வடகிழக்கு மற்றும் வடமேற்கு பகுதி சரியாக அமைந்துவிட்டால் அந்த வீட்டில் வசிக்கும் ஆணின் வளர்ச்சி மிக அசுர வேகத்தில் இருக்கும். மிக சாதாரணமாக இருந்த அந்த ஆண் ஒரு குறிப்பிட்ட வருடத்திற்குள் யாரும் நினைத்துப் பார்க்காத வளர்ச்சியும், சுப யோகங்களும் பெற்று மிக சிறப்பான வாழ்க்கை வாழ்வார். உதாரணமாக, வடகிழக்கில் கீழ்நிலை தண்ணீர் தொட்டி அல்லது போர் அமைப்பது, வடமேற்கில் கேண்டி லீவர் முறையில் படி அமைப்பது என்பது சிறந்த அம்சமாகும்.

- ✓ வடகிழக்கு பகுதியில் தரைக்குமேல் வரும் தொட்டி போன்ற அமைப்புகளால் ஏற்படும் பாதிப்பு எப்பொழுதுமே வீட்டின் மூத்த வாரிசு மீதே இருக்கும். தென்கிழக்கு பகுதியில் தரைக்கு கீழ் மற்றும் தரைக்குமேல் வரக்கூடிய தண்ணீர் தொட்டி அமைப்பால் வீட்டில் உள்ள அனைவரின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

- ✓ ஆகையால், வாஸ்துபடி வீடு கட்டுவது என்பது வருமுன் காப்போம் என்பதாகும். எனவே, நமக்கு வரும் பாதிப்புகளை தவிர்க்க சரியான அமைப்பில் நம் வீட்டை அமைப்பது நமக்கு நல்லது எனலாம்.

## கட்டி முடிக்க முடியாமல் பாதியில் நிற்கும் வீட்டிற்கு வாஸ்து காரணமாக இருக்குமா?

- ✓ ஜோதிடம் பார்த்து, நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, வாஸ்து நாள் பார்த்து, எல்லாம் சரியாக பார்த்து தொடங்கிய கட்டிடம் பல காரணங்களால் நிற்பதை நாம் பலர் கண்டிருக்கலாம்.

- ✓ அந்த கட்டிடம் வாஸ்து முறைப்படி இல்லாமல் இருக்கலாம். ஏனெனில் கட்டிட பணியில் கட்டும் முறையில் இது மிகப்பெரிய பங்காற்றுகிறது.

- ✓ வாஸ்து என்பது பஞ்சபூதங்களை உள்ளடக்கியது. அந்த பஞ்சபூதங்களுக்கு எந்தவிதமான இடையூறுமின்றி சரியான முறையில் கட்டிடங்களையும், அறைகளையும் அமைப்பதுதான் வாஸ்து.

- ✓ வீடு கட்ட ஒருவர் சிறந்த வரைபடம் பெற்றாலும், அந்த வீட்டை கட்டுபவர்களின் மனநிலை, அவர்களின் சூழ்நிலைகள், எதை முதலில் செய்ய வேண்டும்? மற்றும் எதை கடைசியில் செய்ய வேண்டும்? என்ற பக்குவம் தெரிந்திருந்தால் மட்டுமே ஒரு சிறந்த கட்டிடத்தை குறிப்பிட்ட நாட்களுக்குள் கட்டி முடிக்க முடியும்.

- ✓ உதாரணமாக, வீடு கட்ட தொடங்கும் முன் கட்டுமான பொருட்களை சேமிக்க சிறிய அளவில் ஒரு அறையை நமது மனையிலோ அல்லது பக்கத்திலோ நாம் உருவாக்குவோம். இது அமையும் திசையும், நம் கட்டிட தேவைகளுக்காக ஒரு நிலத்தடி நீர் தொட்டி தேவைப்படும்போது அதற்காக செப்டிக் டேங்க்-ஐ முதலில் கட்டுதல் போன்றவையும் வீடு பாதியில் நிற்பதற்கான சில காரணங்களாக கொள்ளலாம்.

- ✓ பணம் இருக்கிறது என்பதால் எல்லோராலும் எல்லா நேரங்களிலும், எல்லா வேலைகளையும் செய்து முடிக்க முடியாது. காரணம், ஒரு நகரத்தின் அடையாளமே அந்த நகரில் அமைந்துள்ள உயர்ந்த கட்டிடங்களில் பெரிய கட்டிடங்களை அடையாளமாக காண்பர்.

- ✓ உங்கள் வீட்டு கட்டிடப்பணி தீர்வு பெற, புதிதாக தங்களுக்கென்று வீடு கட்ட ஒரு சிறந்த அனுபவமிக்க வாஸ்து நிபுணர்கள் தங்களுக்கான தக்க ஆலோசனைகளை வழங்கும்போது தாங்கள் சிறப்பானதொரு வீட்டை அமைத்து கொண்டு நல்லதொரு வாழ்வை வாழலாம்.

## காதல் திருமணம் செய்தவர்களின் வீட்டு அமைப்பு இப்படிதான் இருக்குமா?

1.வடமேற்கு தெருக்குத்து, தெருப்பார்வை போன்ற அமைப்புகள் வருவது.

2.தங்களது வீட்டின் வடமேற்கு பகுதியில் நீர் நிலைகள் வருவது. உதாரணமாக, குளம், குட்டை, ஆறு, ஓடை, கிணறு, போர்வெல் போன்ற அமைப்புகள்.

3.வடமேற்கு தாழ்வான அமைப்பில் இருப்பது.

4.வடமேற்கு பகுதியில் தாழ்வான போர்டிக்கோ அமைப்பு வருவது.

5.வடமேற்கு உள்மூலை படி அமைத்து இருப்பது.

- ✓ பத்து மாதம் சுமந்து கற்பனைகளுடனும், கனவுகளுடனும் ஈன்றெடுத்த குழந்தைகளை பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி, பார்த்து பார்த்து வளர்த்த பின்னர் காதல் என்ற வலையில் சிக்கியபின் குடும்பத்தை விட்டு பிள்ளைகள் விலகும்போது, குடும்பம் எண்ணிலடங்கா துயரங்களை அடைகிறது. மேலும், குடும்ப கௌரவம் பாதிக்கப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வுகள் நடக்க காரணம் நமது வீடுதானா?

- ✓ அனைவருக்கும் பிறப்பும், இறப்பும் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. விதியின் அமைப்பை யாராலும் மாற்ற முடியாது. ஆனால், நமது வீடு எனும் கட்டிட அமைப்பை நிச்சயமாக மாற்ற முடியும். காதலுக்கும், வீட்டிற்கும் சம்பந்தம் இருக்குமா? என பலர் ஏளனமாக கேட்பர். நிச்சயமாக உண்டு. ஒவ்வொரு வீட்டின் அமைப்பிற்கும், ஒரு வகையான தொடர்பு இருக்கிறது. வடக்கும், மேற்கும் சந்திக்கும் வடமேற்கு மூலை ஒரு வீட்டில் காதலை நிர்ணயிக்கும் அமைப்பாகும்.

- ✓ கற்றறிந்த வாஸ்து நிபுணர் மட்டுமே உங்கள் வீட்டின் அமைப்பை மாற்றவும், அதனால் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை சிறந்தாக மாற்ற முடியும்.

**நம் வாழ்க்கையில் வசந்தங்கள் வர கொஞ்சம் நம் வீட்டின் வடமேற்கு பகுதியையும் கவனிக்கலாமே!!**

- ✓ பணமும், புகழும் கோடி கோடியாக இருந்தாலும் ஒரு வீட்டில் உள்ள பெண்கள் சரியாக இருந்தால்தான் அந்த வீடும் நிம்மதியாக இருக்கும்.

- ✓ வடமேற்கு திசை மிக பலமாக இருந்தால் இதைப்போல் நன்மையளிக்கும் திசை வேறு ஒன்றுமில்லை. அதுவே தவறான அமைப்பாக இருந்தால் தீமையாக முடியும் வாய்ப்புகள் அதிகம்.

- ✓ வீட்டில் வடமேற்கு சரி இல்லையென்றால் அந்த வீட்டு பெண்களுக்கு நல்ல குணமும், மனமும் இல்லாமல் அனைத்தையும் தவறாக புரிந்து கொண்டு அவர்களும் நிம்மதியாக வாழமாட்டார்கள், சுற்றியுள்ளவர்களையும் வாழ விடமாட்டார்கள்.

- ✓ வடமேற்கு மற்றும் வடகிழக்கு பகுதி சரியாக அமைந்துவிட்டால் அந்த வீட்டில் வசிக்கும் ஆணின் வளர்ச்சி மிக அசுர வேகத்தில் இருக்கும். மிகச் சாதாரணமாக இருந்த அந்த ஆண் ஒரு குறிப்பிட்ட காலத்தில் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத வளர்ச்சியும், சுப யோகங்களும் பெற்று மிகச் சிறப்பான வாழ்க்கை வாழ்வார். உதாரணமாக, வடகிழக்கில் கீழ்நிலை தண்ணீர் தொட்டியை அல்லது போர் அமைப்பது, வடமேற்கில் கேண்டிலீவர் முறையில் படி அமைப்பது என்பது சிறந்த அம்சமாகும்.

- ✓ வீட்டின் வடமேற்கு பகுதி சரிவர அமையப்பெற்றால் ஒரு நல்ல வாஸ்து பலம் பொருந்திய அமைப்பில் சந்தோஷமாக குடியிருப்பார்கள். இல்லையெனில் வீடு கட்டும்போதே வேலை பாதியில் நிற்கும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஹோட்டல், மருத்துவம், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், டைலர், இரும்பு சம்பந்தப்பட்ட தொழில், ஏஜென்சி நடத்துபவர் போன்றவர்கள் மேன்மை அடைவார்கள்.

வடமேற்கு பகுதியில் வரக்கூடாத அமைப்புகள் :

- ✓ மேல்நிலை தொட்டி
- ✓ போர்
- ✓ உள் மூலை படிக்கட்டு
- ✓ லிப்ட் போன்றவை அமைக்கக்கூடாது.
- ✓ மேற்கில் அதிக காலியிடம் இருந்தால் ஆண்கள் என்னதான் தன் கடமையை சரிவர செய்தாலும் அந்த வீட்டில் ஆண்களுக்கு புகழ் குறைந்து அவமரியாதை ஏற்படும்.
- ✓ நமக்கு வரும் பாதிப்புகளை தவிர்க்க சரியான அமைப்பில் நம் வீட்டை அமைப்பது நமக்கு நல்லது எனலாம்.

## வாஸ்துப்படி பணவரவை தரும் அமைப்பு..!!

- ✓ பணம் பணம் எல்லாம், பண மயம். வாஸ்து அமைப்பில் நம் வீடு இருந்தால் மட்டுமே சாத்தியம்.
- ✓ காலத்தின் ஓட்டத்தில் குடும்பத்தின் ஆரோக்கியத்தையும், ஆனந்தத்தையும் பற்றி கவலைப்படாமல் வேலை நிமிர்த்தமாக இன்று தீப்பெட்டி போல் அடுக்கப்பட்ட குடியிருப்புகளில் வசித்து வருகிறோம்.
- ✓ முன்னோர்களின் வாழ்வியல் முறைப்படி இயற்கை வழங்கும் ஒளி ஆற்றலையும், காற்று ஆற்றலையும் நாம் வசிக்கும் வீட்டில் தகுந்த முறைப்படி உள்வாங்கும்போது அங்கு வாழ்பவர்களின் எண்ணமும், செயலும் தனித்துவம் அடைகிறது.
- ✓ இயற்கையோடு இசைந்த வாஸ்து அமைப்பு உள்ள இல்லங்களே ஆரோக்கியமான, ஆனந்தமான, வளமான வாழ்வு தரும் என்பதற்கு 100 வயதுக்கு மேல் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த, வாழ்ந்து காட்டிய நம் முன்னோர்களே சான்று.

- ✓ பணத்தை தேடாத மனிதன் இன்று உலகில் உண்டா? அப்படி இல்லையென்றால் பணம் படைத்த அனைவரும் வாழ்க்கை முழுமை அடைந்ததாக எண்ணுகிறார்களா? தேடல் தொடர்ந்து கொண்டுதானே இருக்கிறது.

- ✓ உதாரணமாக, ஒரு வீட்டில் கிழக்கிலும், வடக்கிலும் அதிகமான காலியிடம் மற்றும் ஜன்னல்கள் இருந்தால் லட்சுமி கடாட்சம் ஏற்படுத்தும். மேலும் அதிர்ஷ்டத்தை கொடுத்துக்கொண்டே இருப்பாள். அவர்களின் மகிழ்ச்சி எல்லையற்றதாக இருக்கும். அதுவே ஒரு வீட்டில் தென்மேற்கு பகுதியில் ஏதேனும் தவறு இருந்தால் பணவரவுகள் அதிகப்படியாக பாதிக்கும். உதாரணமாக, வீட்டில் சமையலறை அல்லது கழிவறை தென்மேற்கில் இருந்தாலோ அல்லது தொழில் கூடங்களில் தவறான பார்வை அல்லது தெருக்குத்து இருக்கும் பட்சத்தில் பண முடக்கம், பணவிரயம் அதிகப்படியாக ஏற்படும்.

- ✓ ஒருவேளை மற்றவர்களுக்கு கடனாக கொடுப்பதோ அல்லது ஜாமீன் கையெழுத்து போன்று ஏதேனும் இருந்தால் அதுவும் விரயமே. நிச்சயம் உங்கள் வீட்டில் வடக்கும், மேற்கும் சந்திக்கக்கூடிய வடமேற்கு மூலையில் மிகப்பெரிய தவறு இருக்கலாம். உதாரணமாக, வடமேற்கு கூரை பகுதி தாழ்வாக (Low Ceiling) இருப்பது.

- ✓ வாழ்க்கையில் பணம் என்பது மிக இன்றியமையாதது. அதுவும் நம் உழைப்பின் மூலமாக வரும் பணம் நல்ல சுபச் செலவுகளுக்காக செலவு செய்ய வேண்டுமே தவிர, விரைய செலவாகவும், வீண் செலவாகவும் இருக்கக்கூடாது.

## வாஸ்துவில் இதை பார்க்காமல் நீங்கள் கருத்தரிப்பு மையம் போனால் எப்படி குழந்தை கிடைக்கும்?

- ✓ ஒருவருக்கு குலம் செழிக்க குலதெய்வம் எப்படி முக்கியமோ அதுபோல, குலம் காக்க நிச்சயம் அந்த வீட்டில் ஒரு குழந்தை எனும் தெய்வம் வேண்டும்.

- ✓ இவ்வுலகில் ஒருவர் எவ்வளவு பணம், பொருள், புகழ் என அனைத்தும் வீட்டில் இருந்தாலும் அந்த வீட்டில் குழந்தைச் செல்வம் இல்லையெனில் அதைவிட மிகப்பெரிய துன்பம், துயரம் வேறு ஏதுமில்லை. இதில் ஆண்களைவிட பெண்கள் சந்திக்கும் அவமானங்கள் மிக கொடியது.

- ✓ ஒரு வீட்டிற்கு அனைத்து திசைகளும் மிக முக்கியம். அதில் தென்கிழக்கு மற்றும் வடமேற்கு பகுதி குழந்தை பிறப்பை உறுதி செய்யும் திசைகளாகும். வீட்டின் தென்கிழக்கு என்பது பெண்கள் தொடர்பான இடமாகும். ஆகையால், அங்கு சமையலறை அமைத்து நம் முன்னோர்கள் வாழ்ந்தனர். அதேபோன்று தென்மேற்கு திசையில்தான் கணவன், மனைவி உறங்கும் படுக்கையறை இடமாக இருக்க வேண்டும். இவை இரண்டு திசைகளும் குழந்தை பிறப்பை உறுதி செய்யும்.

- ✓ ஒரு வீட்டில் குழந்தை இல்லை என்பதை விட குழந்தை பிறப்பு தாமதமாகுதல் என கொள்ளலாம். வாஸ்து தவறுகள் கீழ்க்கண்ட அமைப்பில் இருக்கலாம்.
- ✓ வீட்டின் தென்கிழக்கு பகுதியில் கழிவறை அல்லது பள்ளம் போன்ற அமைப்புகள்.
- ✓ தென்கிழக்கு நீண்டு அல்லது கட் போன்ற அமைப்புகள்.
- ✓ வடகிழக்கு பகுதி மூடிய அல்லது உயர்ந்த அமைப்புகள்.
- ✓ வடமேற்கு படிக்கட்டு அடியில் கழிவறை அமைப்பு.
- ✓ படுக்கையறை வடமேற்கில் இருந்து, அங்கு கணவன், மனைவி உறங்குவது.
- ✓ தென்மேற்கு படுக்கையறையில் தென்கிழக்கு கழிவறை அல்லது தென்மேற்கில் பூஜையறை போன்ற அமைப்பு வருவது.
- ✓ மேலும், இதுபோன்ற சில தவறுகள் இருப்பின் அதை சரி செய்து கொள்ளுங்கள்.

## நாம் வசிக்கும் வீட்டிற்கு மட்டும்தான் வாஸ்துவா? இல்லை... வாடகை வீட்டில் உள்ள வாஸ்து பாதிப்பு நம்மை பாதிக்குமா?

- ✓ எப்படி ஒரு மனிதனின் உடலில் பல பாகங்கள் ஒன்றாக சேர்ந்தால் மட்டுமே இயங்க முடியுமோ, அதை போன்றுதான் ஒருவர் வசிக்கும் வீடும்.
- ✓ வீடு மட்டும் இல்லாமல் அவர்களுக்கு சொந்தமான நிலங்கள், வாடகைக்கு விடப்பட்ட வீடு, வணிக நிறுவனங்கள் போன்றவையும் வாஸ்து குறைபாடு இருந்தால் அவர்களை பாதிக்கும்.
- ✓ அப்படி இருக்கும்போது ஒருவர் வசிக்கும் வீடு நல்ல தெருக்குத்துடன் நல்ல வாஸ்து பலம் பொருந்தியதாக இருந்தாலும் அவருடைய மகனுக்கோ, மகளுக்கோ திருமணம், குழந்தை பாக்கியம், வேலை சரியாக அமையாமல் இருத்தல் அல்லது மனநிலை பாதிப்பு போன்றவை இருக்கும்.
- ✓ உதாரணமாக, அவர் வாடகைக்கு விடப்பட்ட வீட்டின் தென்மேற்கில் கழிவறை அல்லது போர் போன்ற அமைப்புகள் இருந்தால் திருமண தாமதம், குடும்ப வாழ்க்கை மற்றும் வேலை பாதிப்பு போன்றவை இருக்கலாம்.
- ✓ அதுபோல தென்கிழக்கு, வடமேற்கு பகுதி தவறான அமைப்பாக இருந்தால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுதல், குழந்தை பாக்கியம், மனைவியின் உடல்நல மற்றும் மனநல பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

- ✓ எனவே, நாம் வசித்தால் தான் நமக்கு நமது வீட்டின் வாஸ்து தவறுகள் பாதிக்கும் என இல்லாமல், வாடகைக்கு விடப்பட்ட தவறான அமைப்புடன் உள்ள நமது வீட்டினை வாஸ்துபடி சரி செய்து நிறைவான வாழ்வை வாழ்வோம்.

## வாஸ்துவும், ஆண்வாரிசும் - ஒரு வாஸ்து பார்வை..!!

- ✓ ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண்வாரிசு வேண்டும் என்ற ஏக்கத்தை மட்டும் எத்தனை வளர்ச்சி இருந்தாலும் அதை இன்னும் தகர்த்த முடியவில்லை. ஒரு வீட்டில் ஆண்வாரிசு இல்லாததற்கும், வாஸ்துவிற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? என்பதை அறிவியல் பூர்வமாக பார்ப்போம்.

- ✓ அண்டமும், பிண்டமும் பஞ்சபூதங்களால் ஆனவை என்பது போல் நாம் வசிக்கும் இல்லமும் பஞ்சபூதங்களால் ஆட்சி செய்யப்படுகின்றன. அந்த வகையில், ஒரு வீட்டின் வடகிழக்கு மூலையை நீரும், தென்கிழக்கு மூலையை நெருப்பும், தென்மேற்கு மூலையை நிலமும், வடமேற்கு மூலையை காற்றும், பிரம்ம ஸ்தானத்தை ஆகாயமும் ஆட்சி செய்கின்றன.

- ✓ நம்மை சுமக்கின்ற நிலமாகிய பூமித்தாய் தென்மேற்கு மூலையை ஆள்வதன் அடிப்படையிலேயே ஒரு பெண் சுமக்கின்ற வாரிசு ஆணா, பெண்ணா? என்பதும் அந்த பெண்ணின் வீட்டின் தென்மேற்கு மூலையை பொறுத்தே அமையும்.

- ✓ ஒரு வீட்டின் குடும்ப தலைவர், தலைவி இருவரும் தென்மேற்கு அறையில் உறங்க வேண்டும். தென்மேற்கு பகுதி மட்டுமே அவனுடைய சந்ததியை உருவாக்கும். அவனுக்கு பணம், புகழை கொடுக்கும். ஆகையால் தென்மேற்கு மூலையில் படிக்கட்டுகள், கழிவறை அல்லது சமையலறை என தவறான அமைப்பில் இருந்தால் அது தீய விளைவை கொடுக்கும்.

- ✓ மேலும் மனையின் வடக்கு மற்றும் கிழக்கு சுற்றுச்சுவர்களில் கட்டிடங்கள் அமைத்து ஈசானிய மூலை மூடப்பட்டால் உரிமையாளரின் உடல்நலம் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகும். வம்ச வளர்ச்சி தடைபட்டு தீய விளைவுகளே ஏற்படும். மனையின் வடகிழக்கு மூலை குறைவுபட்டலோ, வீட்டு அமைப்பில் வடகிழக்கு குறைவுபட்டலோ ஆண்வாரிசு இல்லாமல் போகும்.

- ✓ எனவே, ஆண்வாரிசு வேண்டும் என்று விரும்புவோர் அனைவரும் வீட்டின் தென்மேற்கு பகுதியை நன்றாக ஆய்ந்து கவனியுங்கள். அதில் தேவையானவற்றை வைத்தும், தேவையில்லாதவைகளை நீக்கியும் உங்கள் வீட்டின் தென்மேற்கு மூலையை வாஸ்து பலம் மிகச் செய்தால் உங்களின் வேண்டுதல்கள் நிறைவேற்றப்படும் இயற்கையின் அருளால்!

## ஒரு வாஸ்து நிபுணரின் பங்கு இப்படியெல்லாம் இருக்குமா?

- ✓ எல்லா நிலங்களிலும் விவசாயம் செய்ய முடியாது. அதுபோல எல்லா இடங்களும் மக்கள் ஆனந்தமாய் வசிப்பதற்கு ஏற்ற இடங்கள் அல்ல.

- ✓ பெரும்பான்மையான மக்கள் கவனிப்பது, தான் வாங்கப்போகும் இடம் தங்கள் அலுவலகம் மற்றும் தங்கள் குழந்தைகளின் பள்ளிக்கு அருகில் இருக்கின்றதா?.. மருத்துவமனை, பேருந்து நிலையம் பக்கத்தில் உள்ளதா?.. சொந்தபந்தங்களின் வீடு அருகில் உள்ளதா?.. என்பதை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர்.

- ✓ தங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளியை/கல்லூரியை தேர்ந்தெடுப்பதில் உள்ள கவனம்கூட வாழும் இடத்தை தேர்ந்தெடுப்பதில் இருப்பது இல்லை.

1. மலைகள், குன்றுகள், கோவில், செல்போன் டவர், ஓடை, ஆறு, கிணறு, உயரமான மரங்கள், பொது குளம், பாலம், பள்ளிக்கூடம், பூங்கா, பொது போர் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, பெரிய கட்டிடங்கள், கல்லூரி, ரயில்வே தண்டவாளம், மின்மயானம், காவல் நிலையம். இவை நாம் வாங்கும் இடத்திற்கு அருகில் வரலாமா?.. வருவதாய் இருந்தால் எந்த திசையில் வர வேண்டும்? எந்த திசையில் வரக்கூடாது? எவற்றின் அருகே நாம் குடியிருக்கக்கூடாது?

2.சாலை\தெரு, நம் இடத்திற்கு எந்த பக்கம் வருகிறது?

3.தெருக்குத்து அல்லது தெருப்பார்வை நம் இடத்திற்கு இருக்கின்றதா?

4.பக்கத்தில் உள்ள கட்டிடங்கள் நம் இடத்திற்கு நல்ல விளைவுகளை கொடுக்குமா?

5.இடத்தின் வடிவத்தை கவனிக்க வேண்டுமா?

- ✓ இதுபோன்ற பலநூறு நுணுக்கங்களை ஆராய்ந்து, தெளிந்த பின்னரே இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.

- ✓ ஒரு இடத்தை பார்த்து, அங்கு வாழப்போகும் மக்கள் எப்படி இருப்பார்கள்? அந்த இடம் எந்த வகை தொழில் செய்பவர்களுக்கு உகந்தது? எந்த குணநலன்கள் உடையவர்கள் அவ்விடத்தில் வாழலாம்? என்பனவற்றை ஒரு சிறந்த வாஸ்து நிபுணர்கள் கூறிவிடுவார்கள்.

- ✓ தெருக்குத்து, தெருப்பார்வையை ஒரு சிறந்த வாஸ்து நிபுணரால் மட்டுமே கண்டுபிடித்து சொல்ல முடியும்.

- ✓ உதாரணமாக சொல்ல போனால், நாம் வாங்கும் காரில் பிரேக் இல்லாமல் இருந்தால் பயணத்தின் முடிவு எப்படி இருக்குமோ அதுபோன்றதுதான் மிக மிக அழகாய், வண்ணமயமாய், மாடிகளுடன் கட்டப்பட்ட வீடு தவறான இடத்தில் இருப்பது.

- ✓ எனவே, ஒரு சிறந்த வாஸ்து வல்லுநரின் துணைக்கொண்டு, இடத்தை தேர்வு செய்வதில் கவனம் செலுத்துங்கள்.

## இந்த அமைப்புகளை தவிர்த்தால் வீட்டில் மங்கள இசை கேட்குமா?

திருமணம் ஆவதற்கு ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் மிக முக்கிய பங்கை வீட்டின் கிழக்கு திசையும், வடக்கு திசையும் தீர்மானிக்கும் என்பதை அறிந்து, மேலும் சில அமைப்புகளை வாஸ்துப்படி அமைத்து கொள்வது நல்லது.

கீழ்க்கண்ட அமைப்புகள் ஒரு வீட்டில் இருக்கும்போது உங்கள் வீட்டிலும் மங்கள நிகழ்வு நடைபெற தாமதப்படலாம் :

- ✓ வீட்டின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதி மூடிய அமைப்புடன் இருத்தல்.

- ✓ வீட்டின் நுழைவு வாயில் உச்ச பகுதியில் இல்லாமல் இருப்பது.

- ✓ மேல்மாடிக்கு செல்லும் படி அமைப்பு வடகிழக்கில் அல்லது தவறாக இருத்தல்.

- ✓ வடகிழக்கில் பூஜையறை அல்லது சமையலறை அமைப்புடன் இருத்தல்.

- ✓ தெருக்குத்து, தெருப்பார்வை தவறான அமைப்பில் வருவது.

- ✓ வீட்டிற்கு சுற்று சுவர் இல்லாமல் இருத்தல் அல்லது சரியான அமைப்பில் இல்லாமல் இருத்தல்.

- ✓ கிணறு, போர், சம்ப் போன்றவை வீட்டின் தென்கிழக்கில் அல்லது வடமேற்கில் இருத்தல்.

- ✓ தென்மேற்கு அறையை படுக்கையறையாக பயன்படுத்தாமல் வேறு பயன்பாட்டில் இருப்பது.

- ✓ வடக்கு மற்றும் கிழக்கில் மரம், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, கோவில் கோபுரம் போன்ற அமைப்புகள் வருதல்.

- ✓ வீட்டின் தெற்கு மற்றும் மேற்கு பகுதியில் வடக்கு, கிழக்கு பகுதியை விட அதிக காலி இடம் இருத்தல்.

- ✓ மேலும், இதுபோல சில நுணுக்கமான விஷயங்களை கண்டு அதனை சரி செய்யும்போது உங்கள் வீட்டிலும் மங்கள இசை கேட்கும்.

## தொடர்ந்து கட்ட முடியாமல் பாதியில் நிற்கும் வீடு... வாஸ்து காரணங்கள்

- ✓ வாஸ்து என்பது பஞ்சபூதங்களை உள்ளடக்கியது. அந்த பஞ்சபூதங்களுக்கு எந்தவிதமான இடையூறுமின்றி சரியான முறையில் கட்டிடங்களையும், அறைகளையும் அமைப்பதே வாஸ்து.

- ✓ வீடு கட்ட சிறந்த வரைபடம் பெற்றாலும், அந்த வீட்டை கட்டுபவர்கள், அவர்களின் மனநிலை, அவர்களின் சூழ்நிலைகள், எதை முதலில் செய்ய வேண்டும்? எதை கடைசியில் செய்ய வேண்டும்? என்ற பக்குவம் தெரிந்திருந்தால் மட்டுமே ஒரு சிறந்த கட்டிடத்தை குறிப்பிட்ட நாட்களுக்குள் கட்டி முடிக்க முடியும்.

- ✓ உதாரணமாக, வீடு கட்ட தொடங்கும் முன் கட்டுமான பொருட்களை சேமிக்க சிறிய அளவில் ஒரு அறையை நமது மனையிலோ அல்லது பக்கத்திலோ நாம் உருவாக்குவோம். இது அமையும் திசையும், நம் கட்டிட தேவைகளுக்காக ஒரு நிலத்தடி நீர்த்தொட்டி தேவைப்படும்போது அதற்காக செப்டிக் டேங்கை முதலில் கட்டுதல் போன்றவை வீடு பாதியில் நிற்பதற்கான சில காரணங்களாக கொள்ளலாம்.

- ✓ பணம் இருக்கிறது என்பதால் எல்லோராலும், எல்லா நேரங்களிலும், எல்லா வேலைகளையும் செய்து முடிக்க முடியாது!

வீடு, கட்டிடம் பாதியிலே நிற்பது கீழ் கண்ட சில காரணங்களால் இருக்கலாம்.

- ✓ வீடு கட்டும் மனை சதுரம், செவ்வகம் இல்லாமல் இருப்பது.

- ✓ தென்மேற்கு பகுதியில் கிணறு, ஆள்துளை கிணறு, நீரோடை போன்ற அமைப்புகள் இருப்பது.

- ✓ தென்மேற்கு தாழ்வாக இருப்பது.

- ✓ தெருக்குத்து, தெருப்பார்வை போன்ற அமைப்புகள் தென்மேற்கு பகுதியில் வருவது.

- ✓ வடக்கு, கிழக்கு பகுதியில் மதில் சுவர் பொதுவாக இருப்பது.

- ✓ வடக்கு, கிழக்கு அதிக இடமில்லாமல் இருப்பது.

- ✓ இந்த தவறுகள் நீங்கள் கட்டும் வீட்டில் இருந்தால் சரி செய்து கொள்ளுங்கள்.

## அப்படி என்னதான் செய்துவிடும்? இந்த தெருக்குத்தும்... தெருப்பார்வையும்..!!

- ஒருவர் இடம் வாங்க வேண்டும் என்று யோசிக்கும்போது முதலில் அவர் மனதில்,
- நல்ல மனையை வாங்க வேண்டும்.
- சுற்றிலும் பள்ளி, கல்லூரி, மருத்துவமனை மற்றும் கடைகள் இருக்க வேண்டும்.
- நல்ல வளர்ச்சி மிகுந்த இடமாக இருக்க வேண்டும் என தேடுவர்.
- ஆனால், ஒரு வாஸ்து அறிமுகம் உள்ள ஒருவர்,...
- மனை சதுரம் அல்லது செவ்வகமாக இருத்தல் வேண்டும்.
- மனையின் வடகிழக்கு பகுதி தாழ்வாகவும், தென்மேற்கு பகுதி உயரமாகவும் இருக்க வேண்டும்.
- முக்கியமாக தெருக்குத்தல் ஏதும் இல்லாத இடமாக இருக்க வேண்டும் என நல்ல மனையை தேர்வு செய்வார்.
- அதேபோல் லே-அவுட் விற்றவர் என்றால் மற்ற இடத்தை விட தெருக்குத்து இருக்கும் இடத்தை முதலில் விற்க பல சலுகைகளை வாரி வழங்குவார்கள்.

### அப்படி என்ன செய்துவிடும் இந்த தெருக்குத்து?

- பொதுவாக தெருக்குத்து என்பது திசையை பொறுத்து பலன்கள் வேறுபடும். சில திசைகள் வரும் தெருப்பார்வை அல்லது தெருக்குத்து மிகப்பெரிய அளவில் அவர்களை உச்சத்தில் அமர வைத்து அழகு பார்க்கும். மேலும், அவர் கனவிலும் எதிர்பார்க்காத பலன்களை கொடுக்கும். உதாரணமாக, ஒருவர் வடகிழக்கு, கிழக்கு அல்லது வடக்கு தெருக்குத்து அமைப்பில் இருககும்போது அவரது வாழ்க்கை வளமாகவும், பென்ஸ் காரில் போவது போல் மிகவும் சுகமாகவும் இருக்கும்.

- அதேபோல் ஒருவருக்கு தவறான தெருக்குத்து அமைப்பு அல்லது தெருப்பார்வை அமைந்துவிட்டால் அவர் மிக சீரும், சிறப்புமாக இருந்தாலும் கனவிலும் நினைத்து பார்க்காத சங்கடங்களை சந்திக்க நேரிடும். உதாரணமாக, அவர் வடமேற்கு, வடக்கு தெருக்குத்தில் இருந்தால் பணம், கடன் போன்ற சுமைகள் அதிகமாகி அதிலிருந்து மீண்டு வந்தால் போதும் அடுத்த ஜென்மமே எடுக்க தேவையில்லை என்பது போன்ற உணர்வை அவருக்கு ஏற்படுத்திவிடும்.

- ✓ நல்ல வாஸ்து நிபுணர் தங்களுக்கான ஒரு சிறந்த மனையையும், அதில் அதிசிறந்த ஒரு வீட்டையும் அமைக்க உதவுவார்.

## கடன் வாங்கி கட்டிய வீட்டை கடனுக்காகவே விற்பது - வாஸ்து காரணமா?

- ✓ இந்த சமூகத்தில் பணம் மட்டுமே ஒருவரது வாழ்க்கை தரத்தை அளவீடு செய்கிறது. ஒரு மனிதன் பணக்காரன் எனவும், கடன்காரன் எனவும் அதுவே தீர்மானிக்கிறது. கடன் வாங்கியும் கட்டப்படும் வீடுகள் உண்டு. அப்படி கட்டிய வீடு அவரை சமூகத்தில் அவரது நிலையை மேலும் உயர்த்துகிறது.
- ✓ அப்படி கட்டிய வீட்டை கடனுக்காகவே ஒருவர் விற்கிறார் என்றால் கீழ்க்கண்ட வாஸ்து காரணங்கள் இருக்கலாம்.
- ✓ வீட்டின் தென்மேற்கு பகுதி தவறான அமைப்பில் இருப்பது. உதாரணமாக, படுக்கையறை தென்மேற்கில் இல்லாமல் இருப்பது.
- ✓ பூஜையறை, குளியலறை வடகிழக்கில் வருவது.
- ✓ வீட்டிற்கு சுற்று சுவர் இல்லாமல் இருப்பது.
- ✓ வீட்டின் நுழைவாயில் வடக்கில் நீச்சப்பகுதியில் அமைத்திருப்பது.
- ✓ வீட்டில் தென்மேற்கு வாசல் மற்றும் மாடிபடி அமைப்புகள் வருவது.
- ✓ வீட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதி தென்மேற்கை விட உயரமான அமைப்பில் இருப்பது.
- ✓ வீட்டின் வடமேற்கில் போர்வெல், கிணறு, நீர்தேக்கத்தொட்டி போன்றவை வருவது.
- ✓ வீட்டின் கூரை உயரமான அமைப்பில் இருப்பது.
- ✓ வீட்டின் செப்டிக்டேங்க் வடமேற்கில் இல்லாமல் மற்ற இடங்களில் வருவது.
- ✓ தென்மேற்கு பகுதியில் தெருக்குத்து, தெருப்பார்வை போன்ற அமைப்புகள் இருத்தல்.
- ✓ எனவே, வீடு கட்டும் முன் வாஸ்து நிபுணரை அணுகி தக்க ஆலோசனை பெற்று நிறைவான ஒரு வீட்டை கட்டி நிம்மதியாக வாழுங்கள்.

## வீட்டின் அழகை மட்டும் கூட்டினால் என்னென்ன விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்? - வாஸ்து விளக்கங்கள்

- ✓ இப்பொழுது வாஸ்து பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் வந்துவிட்டது. ஒரு வீடு கட்டும்போது வாஸ்துவிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ? அதைவிட அதிகமாக வீட்டின் அழகிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

- ✓ அவ்வாறு வீட்டின் அழகை கூட்டும்போது அந்த இடத்தில் வாஸ்து பலம் குறைந்து விடுகிறது.

- ✓ உதாரணமாக, வீட்டின் உள்ளே மாடிபடி தெற்கு அல்லது மேற்கு பகுதியில் தான் அமைக்க வேண்டும். ஆனால், அழகிற்காகவும், இடம் பெரியதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் வடகிழக்கு அல்லது வேறு ஏதேனும் மூலையில் படியை அமைத்துவிடுகின்றனர். இதனால்தான் பாதிப்பு வந்தது என்று இவர்களால் உணர கூட முடியவில்லை.

- ✓ ஒரு வீட்டில் வடமேற்கு மூலையில் படி அமைந்துவிட்டால் அவர்களுக்கு பணம் சம்பந்தமான பிரச்சனைகள் வந்துவிடும். வம்பு, வழக்கு போன்றவையும் சேர்த்து கடன் சுமை அல்லது இவர்களுடைய பணம் வேறு ஒருவரிடம் தங்கி விடுவது போன்ற பிரச்சனைகள் உருவாகிவிடும்.

- ✓ வீட்டின் தென்மேற்கு படுக்கையறையில் இருந்து பால்கனி அமைப்பது அல்லது போர்டிக்கோ அமைப்பது போன்ற செயல்களை செய்யும் பொழுது அங்கு பில்லர் அமைப்புடன் ஏற்படுத்தி விடுவார்கள். அதனால் அங்கு வயதுக்கு வந்த ஆணும், பெண்ணும் இருந்தால் அவர்களுக்கு திருமணத்தடை ஏற்படுதல், கணவன்-மனைவி என்றால் அவர்களுடைய உறவுகளில் விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

- ✓ ஆகையால், வீட்டிற்கு அழகு தேவைதான். ஆனால் அதை எப்படி அமைத்துக்கொள்வது? என்று ஒரு நல்ல வாஸ்து நிபுணரை அணுகி சரி செய்துக் கொள்ளவும்.

## வீட்டின் எந்த பகுதியில் சமையலறை அமைக்கலாம்?

சமையலறை வீட்டின் தென்கிழக்கு மூலையில் அமைப்பதே சிறந்தது. நல்ல காற்றோட்டமும், வெளிச்சமும் கிடைக்கும். வடமேற்கு மூலை இரண்டாவது வாய்ப்பு.

### தென்கிழக்கு :

- ✓ இந்த பகுதியில் சமையலறை வருவது மிகவும் சிறப்பு. தென்கிழக்கில் சமையலயறை அமைக்க முடியாதவர்கள் வடமேற்கில் அமைத்துக்கொள்ளலாம். வீட்டில் உள்ள பெண்களின் உடல்நலம், மனநிம்மதி, மகிழ்ச்சியும், செல்வமும் பெருகும்.

### வடமேற்கு :

- ✓ வடமேற்கு பகுதியில் சமையலறை அமைக்கும்போது கிழக்கு நோக்கி நின்று சமையல் செய்வது மிகவும் அவசியமானது. புதிய நண்பர்களும் அவர்களால் தொழிலில் முன்னேற்றமும் அமையும். கட்டிட வடிவமைப்பில் தோஷம் எதுவும் இல்லாமல் இருந்தால் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறலாம்.

### வடகிழக்கு :

- ✓ இந்த பகுதியில் சமையலறை அமைக்கக்கூடாது. அப்படி அமைத்தால் வீட்டில் செலவுகள் அதிகரித்து வறுமை நிலை உண்டாகும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள், உடல்நல பாதிப்புகள், விபத்து, குடும்பத்தில் நிம்மதியின்மை ஏற்படும். ஆண்களை பயனற்று போகச் செய்யும். வீட்டில் உள்ள ஆண் வாரிசு பல பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும். வீட்டு பெண்களுக்கு குழந்தையின்மை பிரச்சனை ஏற்படலாம். அப்படி வாய்ப்பு இருந்தாலும், ஆண் குழந்தைகள் பெறும் வாய்ப்பு அரிதாகும்.

### தெற்கு :

- ✓ தெற்கு பகுதியில் சமையலறை வருவதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு அமைக்கும்போது வறுமையை வழிய வர வழைக்கும். மன உளைச்சல் பெருகும். நிம்மதி கெடும்.

### தென்மேற்கு :

- ✓ தென்மேற்கில் சமையலறை அமைக்கக்கூடாது. ஏனென்றால் அந்த வீட்டின் ஆண், பெண் இருவரையும் அதுபோன்ற அமைப்புகள் பெரிய அளவில் பாதிப்பை கொடுக்கலாம். மருத்துவத்திற்கு கட்டுப்படாத உடல்நல சீர்கேடு, துஷ்ட சக்திகளால் பாதிப்பு, கடன், வழக்குகள், திருமண தாமதம் அல்லது மண வாழ்வில் தீராத துயரம் போன்ற விரும்பத்தகாத பலன்களையே தென்மேற்கு சமையலறை கொடுக்கும்.

### மேற்கு :

- ✓ மேற்கு பகுதியில் சமையலறை வருவதை தவிர்க்கவும். இதனால் வீட்டில் உள்ளவர்களின் நிம்மதி பாதிக்கப்படும்.

வடக்கு :

- ✓ வீட்டின் வடக்கு பகுதியில் சமையலறை அமைப்பதை தவிர்க்கவும். அப்படி அமைக்கும் பட்சத்தில் குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் உண்டாகும்.

கிழக்கு :

- ✓ இந்த பகுதியில் சமையலறை அமைப்பதை தவிர்க்கவும். குடும்பத்தலைவியின் உடல் நலனும், மகிழ்வும், நிம்மதியும் கெடும்.

## கடன் சுமையை ஏற்படுத்தும் வாஸ்து அமைப்புகள்..!!

- ✓ ஒவ்வொரு மனிதனும் தனக்காக ஒரு சொந்த வீடு இருப்பதை வாழ்நாள் லட்சியமாக கொள்கிறான். புதிதாக கட்டிய வீட்டில் சந்தோஷமாக குடும்பத்துடன் வாழும்போது வீடு கட்ட வாங்கிய கடன் அதிகமாகி, அந்த கடனுக்காக வீட்டை விற்கும் நிலைக்கு தள்ளப்படுகிறான். அவ்வாறு கடன் அதிகமாக உயர்வதற்கு கீழ்க்கண்ட வாஸ்து காரணங்களாக இருக்கலாம்.

- ✓ உங்களுடைய வீட்டிற்கு தென்மேற்கு பகுதியில் தெருக்குத்து, தெருப்பார்வை போன்ற அமைப்புகள் இருப்பது.

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு பகுதி மூடிய அமைப்புடன் இருப்பது.

- ✓ வீட்டிற்கு நான்கு புறமும் மதில் சுவர் இல்லாமல் இருப்பது.

- ✓ வீட்டிற்கு வடக்கு அல்லது வடமேற்கு பகுதியில் நுழைவாயில், கேட், கிணறு, ஆள்துளை கிணறு, குளம் போன்ற அமைப்புகள் இருப்பது.

- ✓ மேலும், வடமேற்கில் கழிவுநீர்த்தொட்டி அமைக்கும்போது வீட்டை ஒட்டியோ அல்லது வீட்டிற்கு உள்ளே வரும் வகையில் இருப்பது.

- ✓ வீட்டின் உள்ளே படி அமைக்கும்போது ஈசான்ய பகுதி, வடமேற்கு அல்லது தென்கிழக்கில் உள் மூலைப்படி அமைப்புகளுடன் இருப்பது.

- ✓ வீட்டின் போர்டிக்கோ அமைக்கும்போது பில்லர் போன்ற அமைப்பு வடக்கு மற்றும் கிழக்கில் இருப்பது. அப்படி போர்டிக்கோ அமைக்கும்போது வெட்டுப்பட்ட அமைப்புடன் வருவது.

- ✓ பூஜையறை வடகிழக்கு அல்லது தென்மேற்கில் வருமாறு அமைத்து இருப்பது.

- ✓ மேற்கண்ட சில அமைப்புகளுடன் மேலும் சில தவறுகள் இருக்கும்போது வீட்டில் உள்ள ஆண்களின் வருமானத்தில் தடை, கடன் அதிகமாக இருத்தல் போன்ற விளைவுகள் ஏற்படும்.

## வீட்டை நமது வசதிக்காக மாற்றி அமைக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்

- ✓ வீடு கட்டுவது என்பது அனைவரது கனவு. அதேசமயம் வாடகை வீட்டில் இருப்பவர்கள் பல இன்னல்களை சந்திப்பதால் ஒரு சொந்த வீடு இருந்தால்போதும் என்ற எண்ணத்தில் வீட்டை சிறியதாகவோ அல்லது அவர்களின் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப கட்டி விடுகிறார்கள். பிறகு, அவர்களுடைய பொருளாதாரம் படிப்படியாக உயரும்போது இந்த இடம் நமக்கு போதவில்லை என்ற எண்ணம் ஏற்படும். அதனால் வீட்டை மாற்றி அமைக்கும்போது பல தவறுகளையும் அல்லது ஆடம்பரத்திற்கு கட்டும் நோக்கத்தில் சிறிய தவறுகளையும் செய்து விடுகின்றனர்.

- ✓ புதிதாக எடுக்கும் அறை படுக்கையறையோ, பாத்ரூமோ, கார் நிறுத்தும் அறையோ அல்லது வெயிலுக்காக போடப்படும் போர்டிக்கோவோ என எதுவாக இருந்தாலும் வாஸ்து விதிகளுக்கு உட்பட்டு இருக்கும்போது பலன்களும் சிறப்பாக இருக்கும்.

### பொதுவாக ஏற்படும் தவறுகள் :

- ✓ வீட்டிற்கு வெளியே கிளை அறை எடுக்கும்போது அது சுவரோடு ஒட்டி வருவது.
- ✓ கிளை அறை மதில்சுவரின் நான்கு மூலைகளில் ஏதோ ஒரு மூலையில் வருவது.
- ✓ கீழ்நிலை தண்ணீர்தொட்டியை அமைக்க தவறான திசையில் பள்ளம் தோண்டுவது.
- ✓ திறப்புகள் இருக்க வேண்டிய திசைகளில் புதிதாக சுவர் அமைவதால் அவ்விடம் மூடப்பட்ட அமைப்பாகிவிடுதல்.
- ✓ மாடியில் புதிதாய் அறை எடுக்கும்போது மூலைகளில் தனித்தனியே அறை அமைத்து விடுவது.
- ✓ வாகனங்கள் நிறுத்துவதற்காக அமைக்கப்படும் அறை பாரம் வரக்கூடாத இடத்தில் வந்து விடுவது.
- ✓ பெரிய வீடுகளில் காவலாளிக்கு என சிறிய அறை அமைக்கும்போது தவறான அமைப்பில் வருவது.
- ✓ தொழில் நிறுவனங்களில் புதிதாக கோவில் அமைக்கும்போது தவறு ஏற்படுதல்.

- ✓ சமையலறையில் மாடுலர் கிச்சன் அமைக்கும்போது பாரம் வரக்கூடாத இடத்தில் அமைப்பதும், சமையல் எரிவாயு சிலிண்டர் சமையலறையை விட்டு வெளியே வைத்து பைப் வழியே இணைப்பு கொடுப்பதும் தவறு.

- ✓ மதில்சுவர் எடுக்கும்போது இடத்தை மட்டும் கணக்கில் கொண்டு எடுப்பது.

- ✓ ஊஞ்சல் அமைப்பது.

- ✓ வீட்டிற்கு உள்ளே மாடிப்படியை தவறான இடத்தில் அமைத்து விடுவது.

- ✓ மோட்டார் ரூமை மாடிப்படிக்கு கீழ் அமைப்பது.

- ✓ இப்படி கையில் பணம் வரும்போது சிறு சிறு மாற்றங்களை அவரவர் வசதிக்குகேற்ப செய்ய முற்படும்போது சிறு தவறும் மிகப்பெரிய விளைவை ஏற்படுத்திவிடும்.

- ✓ வீட்டில் திருத்தம் செய்வதற்கு முன் ஆழமாக யோசித்து வாஸ்து விதிகளை மதித்து வீட்டை சரிசெய்தால் ஆனந்தமான வாழ்க்கை வாழலாம்.

## இடத்தை தேர்வு செய்வதில் வாஸ்து நிபுணர்களின் பங்கு

- ✓ ஒரு இடத்தை பார்த்து அங்கு வாழப்போகும் மக்கள் எப்படி இருப்பார்கள்? அந்த இடம் எந்த வகை தொழில் செய்வோருக்கு உகந்தது? எந்த குணநலன்கள் உடையவர்கள் அவ்விடத்தில் வாழலாம்? என்பனவற்றை அனுபவமிக்க வாஸ்து நிபுணரால் மட்டுமே கூற முடியும்.

- ✓ தெருக்குத்து, தெருப்பார்வை ஒரு மனை தேர்வில் முக்கிய பங்கு வகிக்கிறது. அனுபவமிக்க வாஸ்து நிபுணரால் இதை கண்டுபிடித்து சொல்ல முடியும்.

- ✓ வாஸ்து நிபுணரின் ஆலோசனையின்படி மனையை தேர்வு செய்வதில் கவனம் கொண்டு சிறந்ததொரு வாஸ்து பலம் கொண்ட வீட்டை கட்டி சிறப்பான வாழ்க்கையை பெறுங்கள்.

## பணம் வந்த வேகத்தில் விரயமாகிறதா? வாஸ்து காரணங்கள்

எவ்வளவு சம்பாதித்தும் வீட்டில் பணம் தங்குவதில்லை என சிலர் புலம்புகிறார்கள். எதற்காக செலவு செய்கிறோம்? என்று தெரியாமல் பணம் பல வகையில் செலவாகிறது. வீட்டு வாஸ்து அமைப்பிற்கும், பண விரயம் ஆவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதா? என பார்ப்போம்.

### தென்மேற்கு பகுதியும், பணமும் :

- ✓ குடும்ப தலைவர் தென்மேற்கு பகுதி அறையை படுக்கையறையாக பயன்படுத்தாமல் இருப்பது.
- ✓ வீட்டின் தென்மேற்கு பகுதி தெருப்பார்வை அல்லது தெருத்தாக்கம் இருப்பது.
- ✓ தென்மேற்கு பகுதியை விட வடகிழக்கு பகுதி தாழ்வாக அமைவது.
- ✓ தென்மேற்கில் உள்ள அறையில் மட்டுமே பணப்பெட்டியை வைக்க வேண்டும். பணத்தை தேக்கு மரப்பெட்டியில் வைப்பது மேலும் சிறப்பு. எதையும் தேக்கி வைத்துக்கொள்ளும் என்பதால்தான் தேக்கு மரம் என்று பெயர் வந்தது. அதன் உறுதியான நிலைத்தத்தன்மை நம்மிடம் பணத்தை தங்கிட செய்யும்.

### வடமேற்கு பகுதியும், பணமும் :

- ✓ வீட்டின் வடமேற்கு பகுதி பாதிக்கப்பட்டிருந்தால் பணம் விரயமாகும் வாய்ப்புகள் இருக்கும்.
- ✓ பணம் எப்படி விரயமாகிறது? என்று பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு கடனாக கொடுப்பதோ அல்லது ஜாமீன் கையெழுத்து போன்று ஏதேனும் இருந்தால் அதுவும் விரயமே. இது நிச்சயம் உங்கள் வீட்டில் வடக்கும், மேற்கும் சந்திக்கக்கூடிய வடமேற்கு மூலையில் தவறு இருக்கலாம். உதாரணமாக, வடமேற்கு கூரை பகுதி தாழ்வாக இருப்பது.
- ✓ நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பணம் என்பது மிக முக்கியமானது. சுப செலவுகளான திருமணம், வீடு கட்டுதல் போன்ற செலவுகள் செய்ய நேர்ந்தால் நல்லது. அதுவே மருத்துவ செலவுகள், கோர்ட் கேஸ் செலவுகள் போல விரைய செலவாகவும், வீண் செலவாகவும் இருக்கக்கூடாது.

## வாஸ்துவால் நாம் அடையும் நன்மைகள்

- ✓ இன்று உலகில் அதிமுக்கியமான, தேவையான உறைவிடத்தை பற்றி விழிப்புணர்வு இன்று வரை மனிதனுக்கு எட்டப்படவே இல்லை. அதனால் இன்று மனிதன் குடியிருக்கும் இடங்கள் எல்லாம் புறா கூடு போல் ஆகிவிட்டது. யாரோ கட்டிவைத்த கூட்டில் குடியேறுகிறோம். கஷ்டத்துடனும், நஷ்டத்துடனும் குழந்தைகளை பெற்று அவர்களுடைய வாழ்க்கையை அமைக்க மிகப்பெரிய போராட்டமான வாழ்க்கையை நாம் வாழ்ந்து முடிக்கிறோம். ஒரு சில நுட்பங்கள் வரும்போது அது எதற்காக வருகிறது? என்று உணர்வதற்குள் நமது வாழ்க்கை கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இதுதான் இன்றைய மனிதனின் வாழ்க்கை நிலை.

- ✓ வாஸ்து சாஸ்திரபடி கட்டிய வீட்டில் ஒருவர் குடியிருக்கும் பட்சத்தில் அவருடைய எண்ணம் நேர்மறை எண்ணமாகவும், மிக உயர்ந்த எண்ணமாகவும் உருவாகிறது. வாஸ்துபடி கட்டிய வீட்டில் வசிப்பவரின் மனநிலை நேர்மறையாக இருக்கும்போது, அவர்கள் அதேபோல் மனநிலையுடன் உள்ள மனிதர்களுடன் மட்டுமே உறவு வைத்துக்கொள்கிறார்கள். தொழில்ரீதியாக அவர்களுடன் ஒத்த எண்ணங்களை உடைய நபர்களுடன் கூட்டு சேர்ந்து மிக பெரிய தொழிலை கூட மிக சர்வ சாதாரணமாக நடத்தி வருவார்கள்.

- ✓ நிறைய செல்வங்களும், செல்வ வளங்களும் அவர்களை தேடி வந்து குவிந்துக்கொண்டிருக்கும். அதை எந்த விதத்தில் கையாள வேண்டும்? எந்த இடத்தில் கொடுக்க வேண்டும்? என்ற விழிப்புணர்வும் அவர்களுக்கு இருந்து கொண்டே இருக்கும். வாஸ்து சாஸ்திரபடி உள்ள வீட்டில் உள்ளவர்களுக்கு நோயை பற்றிய விழிப்புணர்வும், அதை எதிர்கொள்ளும் ஆற்றலும் இருக்கும். மேலும் தன்னுடைய எதிர்காலத்தை பற்றிய புரிதல் இருக்கும். அப்படி இருக்கும்போது எந்த ஒரு சூழலிலும் செம்மையான வாழ்வை எந்த போராட்டமும் இன்றி இனிமையாக வாழ வழிபிறக்கும்

***************